சித்த மருத்துவ

# கை முறை வைத்தியம்

மரு. அ. சுந்தரராஜன், பி.ஐ.எம்.

வெளியீடு:
இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதி துறை
சென்னை.

1038

1036

# பொருளடக்கம்


| | |
|---|---|
| முன்னுரை..... | i—iii |
| நன்றியுரை..... | iv |
| அணிந்துரை..... | v—vi |
| **நூல்** | **பக்கம்** |
| சாறு | 1 |
| குடிநீர் | 2 |
| கற்கம் | 5 |
| சூரணம் | 6 |
| வெண்ணெய் | 9 |
| இளகம் | 12 |
| எண்ணெய் | 18 |
| மாத்திரை | 26 |
| குளிகை | 34 |
| மெழுகு | 38 |
| குழம்பு | 43 |
| செந்தூரம் | 47 |
| பற்பம் | 64 |
| கட்டு | 98 |
| சுண்ணம் | 108 |
| நசியம் | 120 |
| கலிக்கம் | 121 |
| இரசமணி | 123 |
| முப்பு | 125 |
| பணியாரம் பிற | 126 |
| பற்று | 132 |
| களிம்பு | 133 |
| புகை | 134 |
| பசை | 136 |
| பொடி | 137 |

**பின்னிணைப்பு:**

1. மருந்தும் அதனால் குணமாகும் நோய்களும்
2. நோயும் அதனைக் குணப்படுத்தும் மருந்துகளும்
3. சொல்லடைவு

**சுர்ஜித் கு. சவுதரி** இ.ஆ.ப.,
இயக்குநர்
இந்திய மருத்துவம் மற்றும்
ஓமியோபதித்துறை.

# முன்னுரை

சித்த மருத்துவம் ஒரு சிறப்பான மருத்துவம். அனுபவத்தாலும் பழக்கத்தாலும் மக்களிடையே பரவி வளர்ந்த மருத்துவம் இது. சித்தர்களால் உருவாக்கப்பட்டதால் சித்த மருத்துவம் எனப் பெயர்பெற்றது.

இவ்வகையில் முதியோர்க்கும், மருத்துவர் களுக்கும் ஏற்பட்ட அனுபவங்களும் பிறர்சொல்லும் மருத்துவக் குறிப்புகளும் தனக்கும் பிறர்க்கும் பயன்பட வேண்டி அவை சிறுசிறு குறிப்புகளாக ஏட்டில் எழுதிக்கொள்ளப்பட்டன. அப்படி அமைந்தன விரிவு பெற்று அவையே தனி மருத்துவமாக உருவெடுத்தது.

நாம் நூலாக்கம் செய்திருக்கும் இச்சுவடியும் அவ்வகையைச் சார்ந்ததே. சுவடியில் கருத்துகளும் மருத்துவக் குறிப்புகளும் ஒழுங்கமைவோடு இல்லை. சில இடங்களில் கூறப்பட்ட கருத்துகளே மீண்டும் கூறப்பட்டுள்ளன. வேறுசில இடங்களில் முறைமாறிக் கிடக்கின்றன. இவையெல்லாம் ஒழுங்குபடுத்தப்பட்டு முறைப்படுத்தப்பட்டுள்ளன.

சுவடியில் எழுதப்பட்டிருந்த நடையும் அச்சுக்கு உகந்ததாக இல்லை. அந்நடையும் செப்பம் செய்து தேவைக்கேற்ப மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

மருந்து பொருள்களின் அளவும் மருந்துண்ணும் அளவும் துணை மருந்தும் சில இடங்களில் முழுமையாக இல்லை. அவ்வாறான இடங்களில் தகுந்த அளவுகளும் முறைகளும் முறைப்படி புதிதாகச் சேர்த்து அமைக்கப்பட்டுள்ளன. இதில் காணும் மூலப் பொருட்கள் முறைப்படி சுத்தி செய்த பின்னரே பயன்படுத்தப் பெற வேண்டும்.

சாறு, குடிநீர், சூரணம், வெண்ணெய், இளகம், எண்ணெய், தயிலம், மாத்திரை, குளிகை, உருண்டை, மெழுகு, குழம்பு, செந்தூரம், பற்பம், கட்டு, சுண்ணம், கற்கம், நசியம், பொடி, மணி, பணியாரம், பிற என்ற வகையில் நூலில் மருந்துகளின் அமைப்புமுறை அமைக்கப்பட்டுள்ளது.

குன்றிமணி, பலம், பணவெடை, காசெடை என்ற பழைய அளவுகள் சுவடியில் குறிக்கப்பட்டுள்ளன. ஆனால் இப்புத்தகத்தில் கிலோ, கிராம், லிட்டர் என்பன போன்ற இன்றைய அளவுகளில் தரப்பட்டுள்ளன.

சுவடியில் துணைத் தலைப்புகள் சிலவிடங்களில் பொருந்தவில்லை. சிலவிடங்களில் மருந்தையும், சிலவிடங்களில் நோயையும் கொண்டதாக அத்துணைத் தலைப்புகள் அமைக்கப்

பட்டிருந்தன. ஆனால் நூலில் குறிப்பிட்ட மருந்துக்குப் பயன்படும் சரக்குகளில் முதன்மைச் சரக்கோடு அந்த மருந்தின் பெயரும் இணைத்து அமைக்கப்பட்டுள்ளது. சான்றாகக் குழம்பு என்ற மருந்தின் பெயர் சாதிக்காய் என்ற முதன்மை சரக்கோடு சேர்த்து ''சாதிக்காய்க் குழம்பு' என்று அமைக்கப்பட்டுள்ளது.

கற்போர் எளிதாகப் புரிந்துகொள்ளும் வகையில் நூல் கருத்துகள் எண்ணிட்டு முறைப்படுத்தப்பட்டன. அவ்வகையில் ஒன்று முதல் ஆறுவரை 1. தேவையான பொருட்கள், 2. செய்முறை, 3. உண்ணும் அளவு, 4. துணைமருந்து, 5. தீரும் நோய், 6. பத்தியம் என்று அமைந்துள்ளது. இவற்றை அடுத்து, குறிப்பிட்ட மருந்திற்கு ஏதேனும் சிறப்புக் குறிப்பு தேவையாயின் குறிப்பு என்று தலைப்பிட்டு விளக்கம் தரப்பட்டுள்ளது.

இவ்வகைச் சிறுசிறு தலைப்புகள் நூலின் முதல் பக்கம் தவிர்த்த ஏனைய பக்கங்களில் (1) தே.பொ. (தேவையான பொருட்கள்) (2) செ-முறை (செய்முறை) (3) அளவு (உண்ணும் அளவு) (4) து.ம. (துணை மருந்து) (5) தீ.நோ (தீரும் நோய்) (6) பத்தியம் என சுருக்கமாகத் தரப்பட்டுள்ளன.

நூலினைக் கற்போரின் வசதிக்காகப் பின்னிணைப்புகள் தரப்பட்டுள்ளன. மருந்தும்

அதனால் குணமாகும் நோய்களும், நோயும் அதனைக் குணப்படுத்தும் மருந்துகளும் என்ற இரண்டு பின்னிணைப்புகளோடு நூலின் பயன்பாட்டிற்காகச் சொல்லடைவும் தரப்பட்டுள்ளது.

இந்நூல் சுவடியினின்றும் முதன் முதலாகப் பதிப்பிக்கப்படுகிறது. இதனை ஒப்பிட்டுத் திருத்தம் செய்ய இச்சுவடியின் படியேதும் கிடைக்கவில்லை. எனவே முடிந்தவரை பதிப்பு செம்மையாக்கப்பட்டுள்ளது. கற்போர் கருத்து மாற்றங்களைத் தெரிவிப்பாரானால் இனிவரும் பதிப்புகளில் அத்திருத்தங்கள் இடம்பெற ஆவன செய்யலாம்.

ஒப்பம்

**சுர்ஜித் கு. சவுதரி**

மருத்துவர்: அ. சுந்தரராசன் பி.ஐ.எம்.
ஆய்வு மருத்துவ அலுவலர்.

# நன்றியுரை

உரியனவற்றை உடனுக்குடன் அளித்துத் துறையின் முன்னேற்றத்திற்குப் பெரிதும் பாடுபட்டு வரும் மக்கள் நல்வாழ்த்துறை அமைச்சர் மாண்புமிகு **சு. முத்துசாமி,** எம்.ஏ. அவர்கட்கு எங்கள் நன்றியும் பணிவும் என்றுமுண்டு.

இத்துறை நூல்கள் உருவாக்கத்திற்கு ஊக்கமளித்துவரும் மக்கள் நல்வாழ்வு மற்றும் இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித் துறை அரசுச் செயலர் திருமிகு **க. இன்பசாகரன்** இ.ஆ.ப. அவர்கட்கு எங்கள் நன்றி என்றென்றும் உரித்து.

எங்கள் பிரிவின் நூலாக்கத்தில் தனிக்கவனம் செலுத்தி ஊக்கமளிக்கும் இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித்துறை இயக்குநர் திருமிகு **சுர்ஜீத் கு. சவுதரி** இ.ஆ.ப. அவர்கள் என்றும் நின்று நினைத்தற்குரியவர்.

இந்நூல் உருவாக்கத்திற்குக் காரணமாய் நின்ற முன்னாள் இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித்துறை அரசுச் செயலர் திருமிகு. **து. முருகராஜ்** இ.ஆ.ப. அவர்களையும், திருமிகு **க. கணேசன்** இ.ஆ.ப. இயக்குநர் செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அவர்களையும், திருமிகு **க. பழனியப்பன்** இ.ஆ.ப. இயக்குநர் அரசு எழுதுபொருள் அச்சுத்துறை இயக்ககம் அவர்களையும், இந்திய மருத்துவத்துறை துணைச் செயலர் திரு. **அ.ஜ. கிருஷ்ணசாமி** எம்.ஏ. அவர்களையும் எம்துறை இணை இயக்குநர் டாக்டர் **வீ. சுப்பிரமணியம்** எம்.டி(சி) அவர்களையும் நினைத்துப் பார்க்கிறேன்; நெஞ்சாரப் பணிகின்றேன்.

இந்த நூல் முதற்றொடங்கி முடிவுவரை தனது உடல்நலக் குறைவையும் பொருட்படுத்தாமல் செப்பம் செய்தளித்து அணிந்துரையும் வழங்கிய எனது ஆசிரியப் பெருந்தகை மருத்துவர் **ஆர். தியாகராசன்** எல்.ஐ.எம். அவர்களையும் இங்கு பணியாற்றிய காலத்தில் இந்நூலைச் செப்பம் செய்யக் காரணமாகவிருந்த தனியலுவலர்கள் டாக்டர் க. பழனிச்சாமி பி.ஐ.எம்., மருத்துவர் டி. ராஜேந்திரன் பி.ஐ.எம். அவர்களையும் நான் நன்றியோடு நினைத்துப் பார்க்கின்றேன்.

மேலும் இந்நூற்பணியில் எனக்குத் துணைநின்ற இயக்ககத் தமிழ்ப் புலவர்கள் திரு. த. அழகப்பராசு எம்.ஏ.பி.எட்., திருமதி செ.இரா.பிரசன்னா எம்.ஏ., பி.எட் ஆகியோரையும், நகலெடுப்போர் ஐவரையும், உரிய காலத்தில் நூல் வெளிவர ஆக்கப்பணிகளை மேற்கொண்ட அரசு அலுவலர் அனைவரையும் நன்முறையில் அச்சிட்டு வழங்கிய மைய கூட்டுறவு அச்சகத்தாரையும் நான் நன்றியோடு நினைத்துப் பாராட்டுகிறேன்.

ஒப்பம்

மரு. அ. சுந்தரராசன்

டாக்டர். ஆர். தியாகராஜன் எல்.ஐ.எம்.
முன்னாள் துணை முதல்வர், அரசினர் சித்த மருத்துவ கல்லூரி, பாளையங்கோட்டை.
முன்னாள் பொறுப்பு அலுவலர், சித்த மருத்துவ ஆராய்ச்சி நிலையம், சென்னை-106.
முன்னாள் தலைவர் சித்த மருத்துவ அறிவியல் வளர்ச்சிக் குழு, சென்னை-29.

# அணிந்துரை

சுவடியிலிருந்து நூலாக்கம் செய்வது என்பது எளிமையான பணியன்று. சுவடி பயில்வாரும் பதிப்பிப்பாரும் அருகிவரும் இந்நாளில் சித்த மருத்துவச் சுவடியினின்றும் நூலாக்கம் செய்து வெளியிடும் இத்துறை பாராட்டுதற்குரியது.

சித்த மருத்துவச் சுவடிகள் அழிந்துவிடாமல் காப்பதற்கு அவற்றை அச்சேற்றி வெளிக்கொணர்வது மிகவும் அவசியமானதொன்று. அவ்வகையில் ஓலைச்சுவடியினின்றும் கைபாகமாக செய்து — பயன்படுத்தி பழக்கத்திலிருந்து வந்த மருந்துகளை வெளி உலகிற்கு காட்டியிருக்கும் இச்சீரிய பணி தேவையுள்ள முதன்மைப் பணியாகும்.

சுவடியின் நடையையும் கூறப்பட்ட முறையையும் சரிசெய்து இற்றை நாள் நடைமுறைக்கு ஏற்ப - பொருத்தமாக அமைத்துத் தந்துள்ளார்கள். மருந்துகட்குத் தேவையான பொருட்கள் - செய்முறை, உண்ணும் அளவு, தீரும் நோய்கள், பத்தியம் என்ற வகையில் அமைத்திருப்பது, படிப்போரை படிக்கத்தூண்டவும் எளிதில் புரிந்து கொள்ளவும் வழிவகை செய்துள்ளது. குறிப்பிட்ட மருந்தைப் பற்றிய விளக்கம் தந்து அவைகளைத் தொடங்குவது படிப்போரின் கவனத்தை ஒருமுகப்படுத்துகிறது. நூல் இறுதியில் அமைக்கப்பெற்றுள்ள பின் இணைப்புகளும், சொல்லடைவும் மாணவர்கட்கும், மருத்துவர்கட்கும், ஆய்வு செய்வோர்க்கும் பெரிதும் பயன்படும். இந்நூல் உருவாகக் காரணமாக இருந்த என் மாணவர், ஆய்வு மருத்துவ அலுவலர் டாக்டர் அ. சுந்தரராசன் பி.ஐ.எம். அவர்களையும், அதற்கு உறுதுணையாக நின்ற தமிழ்ப் புலவர்களாகிய திரு த. அழகப்பராசு எம்.ஏ., திருமதி செ.இரா. பிரசன்னா எம்.ஏ., அவர்களையும் மனதாரப் பாராட்டுகிறேன்.

மக்களின் நல்வாழ்விற்குப் பயன்படக்கூடிய ஒரு சிறந்த நூலை உருவாக்கித் தந்துள்ளது இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித் துறை இயக்ககம். நம் தமிழக அரசு சித்த மருத்துவச் சுவடிகளை அழியாமல் காத்து இவ்வாறு இன்னும் பல நூல்களை உருவாக்க இத்துறைக்கு முன்னுரிமை தந்து ஆக்கமும் ஊக்கமும் அளிக்க வேண்டும் என விரும்புகிறேன்.

*சென்னை-30,*

*நாள்: 18-9-91.*

கையொப்பம்
மரு.ஆர்.தியாகராஜன் எல்.ஐ.எம்.

Dr. **R.KANNAN,** B.I.M.
Siddha Specialist
Hony, Physician to the
President of India,
Tennur, Tiruchy-620 017.
S.India.
☎ 48565

| | |
|---|---|
| Chairman | Scientific Advisory Committee (Siddha) CCRAS under the Ministry of Health and Family Welfare, Govt. of India, New Delhi. |
| Chairman | Siddha Pharmacoopoeia Committee Under the Ministry of Health and Family Welfare, Government of India, New Delhi. |
| Member | Ayurvedic, Siddha, and Unani drugs Technical Advisory Board, Ministry of Health and Family Welfare, Govt., of India, New Delhi. |
| Member | Governing Council CCRAS Under Ministry of Health and Family Welfare, New Delhi. |
| Member | Tamilnadu Board of Indian Medicine Madras. |
| Member | Board of Studies in Medicine, Siddha Dr.M.G.R. Medical University, Madras. |
| Director | 'IMPCOPS' Madras. |
| Managing Director | Arun Priya Services Pvt Ltd. Tiruchy. |
| Managing Director | Herbo Cure Products, Tiruchy. |
| President | S.P.C.A. Tiruchy Dist. |

# அணிந்துரை

சித்த மருத்துவம் சிறப்பான மருத்துவம். தமிழ் மருத்துவமே சித்த மருத்துவம் ஆகும். இது மிகத் தொன்மையான மருத்துவம் ஆகும். இம்மருத்துவம் என்றைக்கு மனித இனம் உலகில் தோன்றியதோ அன்றைக்கே தோன்றிவிட்டது. இம்மருத்துவம் எல்லாவிதமான நோயையும் தீர்க்கவல்லது. இம்மருத்துவம் இயற்கையானது. எளிமையானது. குறைந்த செலவில் நிறைந்த பலனைத் தரத்தக்கது. மருந்துண்பவர்க்கு பக்க விளைவுகள் உண்டாகாது.

தற்காலத்தில் சித்த மருத்துவத்திற்கு மேன்மேலும் சிறப்பு சேர்ந்து வருகிறது. மாநில அரசும், மைய அரசும் சித்த மருத்துவத்தின் வளர்ச்சிக்காக

ஆக்கமும் ஊக்கமும் அளிக்கின்றன. அந்த வகையில் தமிழக அரசு இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித்துறை மூலம் இந்நூலினை வெளியிடுகிறது.

பழந்தமிழ்ச் சித்த மருத்துவச் சுவடிகளிலிருந்து சுவடியின் நடையையும் கூறப்பட்ட முறையையும் செப்பம் செய்து தற்காலத்திற்குப் பொருத்தமாகத் தொகுத்துள்ளார்கள். தேவையான மருந்துப் பொருள்கள், செய்முறை, உண்ணும் அளவு, தீரும் நோய்கள், பத்தியம் என்று விரிவாக அனேகரும் எளிதில் புரிந்து கொள்ளவும், செய்யவும் ஏற்ற வகையில் இந்நூலினை உருவாக்கியிருக்கிற ஆய்வு மருத்துவ அலுவலர் டாக்டர் இரா.சுந்தரராசன் பி.ஐ.எம். அவர்கள் பணி பாராட்டத்தக்கது.

இந்நூல் மாணவர்கட்கும், மருத்துவர்கட்கும், சாதாரணப் பொதுமக்களுக்கும் பெரிதும் பயன்படும் என்பதில் ஐயமில்லை. இந்நூலினை யாத்த எனதருமை நண்பர் டாக்டர் இரா.சுந்தரராசன் பி.ஐ.எம். அவர்கள் மேன்மேலும் இம்மாதிரிப் பல நூல்களை ஆக்கி சித்த மருத்துவத்திற்கு அணி சேர்ப்பாராக.

வாழ்க சித்த மருத்துவம்!

வளர்க சித்த மருத்துவம்!

இரா. கண்ணன்.

# சித்த மருத்துவ
# கை முறை வைத்தியம்

அச்சிட்டோர் :

மத்திய கூட்டுறவு அச்சகம்,
சென்னை-2. தொலைபேசி : 849739

# சாறு

இலை, வேர், பட்டை, பூ, காய் முதலிய ஐந்து உறுப்புகளுள் ஏதேனும் ஒன்றை அல்லது அனைத்தையும் இடித்தோ, அரைத்தோ, இடித்துப் பிட்டவித்தோ செய்து பிழிந்தெடுத்துக் கொள்வது.

## வாகைப்பட்டைச்சாறு

| | |
|---|---|
| தேவையான பொருட்கள் | வாகைப்பட்டை |
| செய்முறை | வாகைப்பட்டையை இடித்து 100 மிலி சாறு எடுத்துக் கொள்ளவும். |
| உண்ணும் அளவு | 100 மிலியும் ஒருவேளை, இப்படி மூன்றுநாள் |
| துணை மருந்து | கோழிக்கறி |
| தீரும் நோய் | வெட்டை |
| பத்தியம் | இச்சாபத்தியம் |
| குறிப்பு:- | கோழிக்கறி உண்ணாதோர்க்கு ஆட்டுப்பாலில் கொடுக்கவும். |

## விழுதியிலைச்சாறு

| | |
|---|---|
| தே.பொ. | விழுதியிலை |
| செ.முறை | விழுதியிலையைப் பிழிந்து சாறு எடுத்துக் கொள்ள வேண்டும். |
| அளவு | காலை மட்டும் 3 நாள் |
| து.ம. | பசுவெண்ணெய், மருந்துண்டபின் விழுதியிலையை உண்ண வேண்டும். |
| தீ.நோ. | மூலபவுத்திரம், எருமூலம் |
| பத்தியம் | 3 நாட்களுக்கு மீன், கருவாடு; பழையசாதம் நீக்கவும். |

## தேன்சாறு

| | |
|---|---|
| தே.பொ. | கொம்புத்தேன் (சுமார்) 2 கி.கி.<br>வெங்காயம் 1 கி.கி. |
| செ.முறை | வெங்காயத்தை உரித்துத் தேனில் போட வேண்டும். அதனைச் சூரியவொளியில் காயவைக்க வேண்டும். வெங்காயத்தைப் பிழிந்து கலக்கும் பருவத்தைப் பார்த்து எடுத்து வைத்துக் கொள்ளவேண்டும். |
| அளவு | 50. மிலி. 40 நாள் |
| தீ.நோ. | மேகச்சூடு குறையும், உடல் பலம் பெறும். தாது விருத்தியடையும். |
| பத்தியம் | இச்சாபத்தியம் (போகமாகாது) |

## ஒட்டுப்புல் சாறு

| | |
|---|---|
| தே.பொ. | ஒட்டுப்புல்லின் பூ (தேவையான அளவு) |
| செ.முறை | ஒட்டுப்புல்லுடன் வெள்ளைப் பூண்டு சேர்த்து நன்கு அரைத்து எடுத்துக் கொள்ள வேண்டும். |
| அளவு | ஓரிரு துளிகள் (தீரும் வரை) |
| தீ.நோ. | ஒற்றைத்தலைவலி |
| குறிப்பு:- | இடப்பக்கத் தலைவலியானால் வலப்பக்கக் காதிலும்,, வலப்பக்கத் தலைவலியானால்<br>இடப்பக்கக் காதிலும் பிழிதல் வேண்டும். |

# குடிநீர்

உலர்ந்த சரக்குகளையோ ஈரமுள்ள சரக்குகளையோ இடித்து அதற்குச் சொல்லப்பட்ட அளவின்படி தண்ணீர் விட்டு இரண்டுக் கொன்றாகவோ, நான்குக் கொன்றாகவோ, ஆறுக் கொன்றாகவோ, எட்டுக்கொன்றாகவோ, பதினாறுக்கொன்றாகவோ, இருபத்து நான்குக் கொன்றாகவோ

காய்ச்சி வடிகட்டி எடுத்துக் கொள்வது. இதற்கு "மருந்து நீர்" "உண்ணீர்" "வாய்-குடித்திடும் புனல்" என்னும் வேறு பெயர்களும் உண்டு.

## அவுரிக் குடிநீர்

தே.பொ. அவுரி வேர்
அருகம் வேர்
சிறுகீரை வேர்

செ.முறை இவற்றைத் தண்ணீரில் போட்டுக் கொதிக்கக் காய்ச்சி குடிநீர் இறக்கிக் கொள்ளவும்.

அளவு தேவைக்கேற்ப

தீ.நோ. அரோசிகம், உணவில் தோடம், தீரும்.

பத்தியம் உண்ட மருந்தின் வேகத்தினைக் குறைத்துவிடும் (மருந்து முறிவு) பசலைக் கீரையை உப்புப் போடாமல் கடைந்து சாப்பிடவேண்டும்.

## விஷ்ணுகரந்தைக் குடிநீர்

தே.பொ. விஷ்ணுகரந்தை ஒருகைப்பிடி அளவு.

செ.முறை விஷ்ணுகரந்தையுடன் சுக்கு, மிளகு, சீரகம், ஓமம் இவற்றையும் சேர்த்து சட்டியில் இட்டு சுருக்கி நீர்விட்டு குடிநீர் செய்து கொள்ள வேண்டும்.

அளவு நோய் தீரும் வரை

தீ.நோ. சுரம்

## சிறுசெருப்படைக் குடிநீர்

தே.பொ. சிறுசெருப்படை (தேவையான அளவு)

செ.முறை தண்ணீரில் சிறுசெருப்படையைப் போட்டு எட்டில் ஒரு பங்காகக் குறுக்கிக் காய்ச்சி வடித்துக் கொள்ள வேண்டும்.

அளவு தினம் ஒருவேளை வீதம் 3 நாட்கள்

து.ம. ஆமணக்கெண்ணெய் (20 மிலி)

தீ.நோ. குன்மம்

## அருகம்வேர்க் குடிநீர்

தே.பொ. அருகம்வேர் 1 கிலோ 350 கி

செ.முறை அருகம்வேரை வெட்டிவந்து சுத்தம் செய்து சட்டியில் போட்டு தண்ணீர் விட்டுக் காய்ச்சி இறக்கிக் கொள்ளவேண்டும்.

அளவு 7 முதல் 10 நாட்கள்

து.ம. வேளைக்கு 21 மிளகு, கல்கண்டு, வெண்ணெய்

தீ.நோ. வெட்டை நோய்

பத்தியம் போகமாகாது

## இம்பூறல் குடிநீர்

தே.பொ. இம்பூறல் வேர் 1 பிடி
சங்கு வேர் 1/2 பிடி

செ.முறை மேற்கூறிய இரண்டையும் நறுக்கி சட்டியில் போட்டு 400 மிலி தண்ணீர் ஊற்றி இரண்டில் ஒன்றாக வற்ற வைத்து இறக்கிக் கொள்ளவும்.

அளவு காலை மட்டும் 50 மிலி வீதம் 3 நாட்கள்

தீ.நோ க்ஷாசம், கபம் நீங்கும்.

## தயிர்நீர்

பிரை ஊற்றிய தயிரினின்று மேலே உள்ள கெட்டியான பகுதியைப் பிரித்து, அடியில் தங்கிய நீரை மெல்லிய வெள்ளைத் துணியில் வடிகட்டி எடுத்துக் கொள்ளும் நீர் "தயிர்நீர்" எனப்படும். இதனுடன் சரக்குப் பொடியைக் குழப்பிக் கொடுப்பர்.

### தயிர் நீர்-முறை-1

தே.பொ. சிறுகட்டுக்கொடி
தயிர் வடிகட்டிய நீர்

செ.முறை தயிர் வடிகட்டிய நீரில் சிறுகட்டுக்கொடியை அரைத்து குழப்பிக் கொள்ள வேண்டும்.

அளவு மூன்று நாட்கள்

தீ.நோ. நீர்க்கட்டு

### தயிர்நீர்-முறை-2

தே.பொ. தயிர் வடித்த நீர்
வெள்ளைப் பூ உடைய வறப்பூலா (வெள்ளைப் பூலாஞ்சி)

செ.முறை தயிர் வடித்த நீரில் வெள்ளைப் பூ உடைய வறப்பூலாவின் அரைத்த, விழுதை இட்டு குழப்பிக் கொள்ள வேண்டும்.

அளவு மூன்று நாட்கள்

தீ.நோ. இறங்காமல் நின்ற சிறுநீர் இறங்கும் (நீர்க்கட்டு), சொட்டு நீருக்கும் வழங்கலாம்.

## கற்கம்

ஈரமாயுள்ள சரக்குகளையோ உலர்ந்த சரக்குகளையோ தூய்மை செய்த இரும்புத்தூள், இரும்புச் சிட்டத்தூள் எனுமிவற்றில் ஏதாவதொன்றை சில இலைகளோடாவது சரக்குகளோடாவது சேர்த்துக் கல்லோடு கல்லாய் ஒட்ட அரைத்துக் கெட்டியாய் எடுத்துக் கொள்வது.

### நாயுருவி கற்கம்

தே.பொ. நாயுருவி இலை

செ.முறை நாயுருவி இலையுடன் 7 மிளகை வைத்து அரைத்து எடுத்துக் கொள்ள வேண்டும்.

| | |
|---|---|
| அளவு | மூன்று நாள், காலை மட்டும் மூன்று பொழுது |
| தீ.நோ. | மூலம் |
| பத்தியம் | தினமும் (3 நாள்) புதுச்சட்டியில் அரிசி, துவரம்பருப்பு இரண்டையும் சேர்த்து சமைத்துச் சாப்பிடவும் |
| குறிப்பு:- | முளையிருந்தால் மருதோன்றி இலையையும் ஆலாத்தி கற்பூரத்தையும் அரைத்து வில்லைசெய்து அபானத்தில் வைத்துக் கட்டினால் முளை விழும்: அல்லது தீய்ந்துவிடும். |

## எழுத்தாணிப்பூடு கற்கம்

| | |
|---|---|
| தே.பொ. | எழுத்தாணிப் பூடு - 35 கி<br>வெங்காயம் - 35 கி<br>ஏலம் - 3 கி<br>சீனி - 35 கி |
| செ.முறை | முதல் மூன்று சரக்குகளையும் நன்கு அரைத்து சீனி கலந்து கொடுக்கவும். |
| அளவு | 10 கி இருவேளை: மூன்று நாட்கள் |
| தீ.நோ. | மூலக்கடுப்பு, இரத்தக்கடுப்பு, கிராணி, மூலவாயு |
| பத்தியம் | போகமாகாது |

# சூரணம்

சரக்குகளைத் தூய்மையாகவும், புதியனவாகவும் ஈரச் சரக்கானால் உலர்த்தியும் எடுத்துக் கொள்ள வேண்டும். உலர்ந்த சரக்கானால் அப்படியே போட்டும் வறுக்க வேண்டியவைகளை மட்டும் வறுத்தும் பிறவற்றை வறுக்காமலும் தனித்தனியே சரக்குகளை இடித்துத் துணியில் வடிகட்டி எடையிட்டுக் கலந்து வைத்துக் கொள்வது சூரணம் ஆகும். "இளகம்" போன்ற மருந்து முறைகளுக்குச் சூரணம் அடிப்படையாகையால் சூரணத்தூய்மை செய்து கொள்ள வேண்டும்.

## கடுக்காய்ப் பிஞ்சுச் சூரணம்

| | | |
|---|---|---|
| தே.பொ. | ஓமம் | 12 கி |
| | கடுக்காய்ப் பிஞ்சு | 12 கி |
| | நில ஆவாரை | 12 கி |
| | இந்துப்பு | 12 கி |

செ.முறை முதல் மூன்று சரக்குகளையும் சூரணம் செய்து எடுத்துக்கொண்டு அதில் இந்துப்பையும் கூடச் சேர்த்து பொடித்துக் கொள்ளவேண்டும்.

அளவு 3 கிராம், இரவு படுக்குமுன் வாயில்போட்டு தண்ணீர் 60 மிலி குடிக்கவும்.

து.ம. தண்ணீர்

தீ.நோ. இருமல், காய்ச்சல், வாயு

பத்தியம் போகமாகாது

## சாதிக்காய் சூரணம்

தே.பொ. சாதிக்காய் 12 கி
கடுக்காய் 12 கி

செ.முறை மேற்கூறிய இரண்டையும் நன்கு தூள் செய்து இரண்டு சமபாகங்களாக எடுத்துக் கொள்ள வேண்டும். இரும்புக் கரண்டியில் நெய்யூற்றி ஒரு பாதியை அதில் போட்டு சிவந்த பின்னர் எடுத்துக் கொள்ள வேண்டும்.

அளவு சுண்டைக்காயளவு; காலை, மாலை 6 வேளை

தீ.நோ. வயிற்றுப் புகைச்சல், சீதரத்தபேதி

குறிப்பு:- இரும்புக் கரண்டியில் காயவைத்ததூள், பச்சைத்தூள் இரண்டையும் கலந்து காலை மாலை 6 வேளை கொடுக்கவும்.

## இலுப்பைப் பிண்ணாக்குச் சூரணம்

| | | |
|---|---|---|
| தே.பொ. | இலுப்பைப் பிண்ணாக்கு | 35 கி |
| | பசுவின் மோர் | 1 1/4 லி |

செ.முறை இலுப்பைப் பிண்ணாக்கைத் தூள்செய்து ஒரு துணியில் கட்டி பசுமோரில் இரவில் ஊறப் போடவும்.

அளவு அதிகாலை 200 மிலி. வீதம் 3 வேளை

தீ.நோ. காமாலை

பத்தியம் போகமாகாது

## கொத்துமல்லிச் சூரணம்

| | | |
|---|---|---|
| தே.பொ. | அதிமதுரம் | 35 கிராம் |
| | சீரகம் | 35 கிராம் |
| | கருஞ்சீரகம் | 35 கிராம் |
| | காட்டுச்சீரகம் | 35 கிராம் |
| | சன்னலவங்கப்பட்டை | 35 கிராம் |
| | கருவாப்பட்டை | 35 கிராம் |
| | கொத்துமல்லி | 210 கிராம் |
| | சீனாக்கற்கண்டு | 420 கிராம் |

செ.முறை இம்மருந்துப் பொருட்களைத் தனித்தனியே பொன்னிறமாய் வறுத்து உரலில் இட்டு இடித்துக் கொள்ள வேண்டும். மெல்லிய துணியில் சலித்து ஒன்றாகக் கலந்து சீனாக்கற்கண்டைப் பொடித்து இத்துடன் கலந்து கொள்ள வேண்டும்.

அளவு வேளைக்கு 5 கி வீதம் காலை, மாலை இருவேளை; நோய் தீரும் வரை

து.ம. வெந்நீர்

தீ.நோ. பித்தம், உடம்பெரிவு, கண், கைகால் எரிவு, முதலியன

பத்தியம் போகமாகாது

## இந்துப்புச் சூரணம்

| | | |
|---|---|---|
| தே.பொ. | வெள்ளாட்டுப்பால் | 200 மிலி |
| | தேங்காய்ப்பால் | 200 மிலி |
| | இந்துப்பு | 10 கி |
| | திப்பிலி | 10 கி |

செ.முறை இந்துப்பையும், திப்பிலியையும் தூள் செய்து கொள்ள வேண்டும்.

அளவு காலை மட்டும் ஒருவேளை, மூன்று நாள்

து.ம. வெள்ளாட்டுப்பால், தேங்காய்ப்பால்

தீ.நோ. எரிவாதம், பித்தவாதம், மதனவாதம், வீக்கம்

குறிப்பு;- தேவைப்படும்போது, வெள்ளாட்டுப்பால் 200 மிலி, தேங்காய்ப்பால் 200 மிலி எடுத்து இரண்டையும் கலந்து அதில் 20 கி சூரணத்தைப் போட்டுக் கலந்து சாப்பிடவும்.

## ஆவிரையாதிச் சூரணம்

| | | |
|---|---|---|
| தே.பொ. | ஆவிரை விதை | 35 கி |
| | கடுக்காய்த் தோல் | 35 கி |
| | விளாம்பிசின் | 35 கி |
| | தேத்தான்கொட்டை | 35 கி |

செ.முறை மேற்கண்ட சரக்குகளை இடித்துத் தூள் செய்து மெல்லிய துணியில் சலித்து வைத்துக் கொள்ளவும்.

அளவு 5 கி காலை வேளை மட்டும்

து.ம. மோர்

தீ.நோ. கெட்ட நீர் இறங்கும்

# வெண்ணெய்

வேண்டிய சரக்கை அல்லது சரக்குகளை எடைபோட்டெடுத்து நன்றாய்ப் பொடி செய்து கொள்ள

வேண்டும். பிறகு அதை இரும்புக் கரண்டியிலிட்டு சரக்கின் எடைக்கு இரண்டு பங்கு பசுவின் நெய் சேர்த்து அடுப்பிலிட்டு எரிக்க வேண்டும். அந்தச் சரக்குகள் நன்றாய் உருகி நெய்யுடன் கலந்த பொழுது, அதை வேறொரு மண்சட்டியில் தண்ணீர் வைத்திருந்து அதிலூற்றி மத்திட்டுக் கடைந்து எடுத்து வைத்துக் கொள்வது.

## இரசகற்பூர வெண்ணெய் - முறை-1

தே.பொ. இரசகற்பூரம் 4 கிராம்
மிருதாரசிங்கி 2 கிராம்
காசுக்கட்டி 1 கிராம்

செ.முறை இம்மூன்றையும் நன்றாக அரைத்து எடுத்துக் கொள்ள வேண்டும்.

அளவு புண்ணின் அளவிற்கேற்ப புண் ஆறும்வரை வெளிப்பூச்சாக உபயோகிக்கவும்

தீ.நோ. புண்கள் ஆறிவிடும்

## இரசகற்பூர வெண்ணெய்-முறை-2

தே.பொ. இரசகற்பூரம் 4 கி
மிருதார சிங்கி 2 கி
காசுக்கட்டி 1 கி
துருசு 1/2 கி

செ.முறை இந்நான்கையும் அரைத்து எடுத்து வெண்ணெயில் கலந்து கொள்ள வேண்டும்.

அளவு புண்ணின் மேல் வெளிப்பூச்சாக உபயோகிக்கவும்.

தீ.நோ. புண்ணில் வளர்ந்த சதை கரையும்.

## இரசவெண்ணெய்-முறை-1

தே.பொ. இலிங்கம் 10 கி
இரசசெந்தூரம் 10 கி

| | |
|---|---|
| இரசகற்பூரம் | 10 கி |
| இரசம் | 10 கி |
| பருத்தி இலை | தேவையான அளவு |
| நேர்வாளம் | 40 கி |
| சிற்றாமணக்கு எண்ணெய் | 1 லி |

செ.முறை முதல் நான்கு சரக்குகளையும் பருத்தி இலையையும் சேர்த்து அரைத்து, பின்னர் நேர்வாளத்தையும் சேர்த்தரைத்து சிற்றாமணக்கு எண்ணெய் 1 லிட்டரில் கலந்து பீங்கானில் வைத்து 4 நாள் சூரியவொளியில் வைக்கவேண்டும். தெளிவான எண்ணெயை இறக்கிப் பத்திரப்படுத்திக் கொள்ளவும்.

அளவு 15-30 மி.கி காலை மட்டும்; 7 நாட்கள்

து.ம. விளக்கெண்ணெய்

தீ.நோ. 21 வகை மேகம், புண், அரையாப்பு, இரத்த வெட்டை, வெள்ளை, திமிர் வாயு.

பத்தியம் வெள்ளாட்டுக்கறி, துவரம்பருப்பு, வெந்தயக் கீரை, முருங்கைக் கீரை, முருங்கைப்பிஞ்சு, கத்தரிப்பிஞ்சு, நெய் சேர்க்க வேண்டும். மற்றபொருட்கள் ஆகாது. போகமாகாது.

குறிப்பு:- 15-30 மிகி. வீதம் 7 நாள் சாப்பிட்டு இடையில் 10 நாள் மருத்துண்ணாது விட்டுவிட வேண்டும். பின்னர் 7 நாட்கள் முன் முறைப்படி உண்ண வேண்டும். 10 நாட்கள் விடுத்து பின் 7 நாட்கள் உண்ண வேண்டும். மருந்துண்ண 30 நாட்கள்; 5 நாட்களுக்கு ஒருமுறை வீதம் 6 முறை விளக்கெண்ணெய் குளியல் செய்ய வேண்டும்.

## இரச வெண்ணெய் - முறை-2

தே.பொ.

| | |
|---|---|
| இரசம் | 4 கி |
| ஆட்டுக் கொழுப்பிலிருந்து எடுக்கப்பட்ட நெய் | 12 கி |
| பன்றிக் கொழுப்பு நெய் | 35 கி |

செ.முறை மேற்குறிப்பிட்ட மூன்றையும் சேர்த்து அரைத்து எடுத்துக் கொள்ளவும்.

அளவு 4 கி உள்ளங்கையிலும் தொடையிலும் தேய்க்கவும். 20 நாள் அல்லது 40 நாள்

தீ.நோ. உடம்பில் ஏற்படும் அரிப்பு, கிராணி தீரும்.

குறிப்பு:- உள்ளங்கையில் தேய்க்க உடம்பில் அரிப்பு தீரும். தொடையில் தேய்க்க வயிற்றுக் கடுப்பு, கிராணி பேதி தீரும்.

### இலிங்க வெண்ணெய்

| | | |
|---|---|---|
| தே.பொ. | இலிங்கம் | 2 கி |
| | இரசசெந்தூரம் | 3 கி |
| | பூரம் | 2 கி |

செ.முறை இவற்றைப் பசுவெண்ணெயில் 3 மணிநேரம் அரைத்து தண்ணீரில் ஒருநாள் போட்டுவைக்கவும்.

அளவு வெண்ணெயைத் தூய்மையான துணியில் தடவி புண்ணின் மீது போடவேண்டும்.

தீ.நோ. மேக இரணங்கள்.

## இளகம்

குடிநீர் வகைகள், சாறுவகைகள் ஆகிய இவைகளைத் தனித்தனியாகவாவது கலந்தாவது எடுத்துக் கொள்ளவேண்டும். சேர்க்க வேண்டிய அளவு சர்க்கரை சேர்த்து அடுப்பேற்றிச் சிறு தீயாக எரிக்க வேண்டும். சாறு சுருங்கி மணம் வரும் சமயத்தில் சூரணம் செய்து வைத்த சரக்குப் பொடியை அதில் சிறுக சிறுகத் தூவி, தேனை முன்னரும் நெய்யைப் பின்னரும் விட்டுக் கிளறி பக்குவத்தில் எடுத்து வைத்துக் கொள்வது.

### நிலப்பனைக்கிழங்கு இளகம்

| | | |
|---|---|---|
| தே.பொ. | சுக்கு | சடாமாஞ்சில் |
| | மிளகு | விலாமிச்சவேர் |

| | |
|---|---|
| வால்மிளகு | பரங்கிப்பட்டை |
| சோம்பு | அமுக்கிராக்கிழங்கு |
| கருஞ்சீரகம் | நிலப்பனைக்கிழங்கு |
| தாளிசபத்திரி | ஓமம் |
| நெல்லிமுள்ளி | குரோசாணி ஓமம் |
| கோரைக்கிழங்கு | கருவாப்பட்டை |
| திப்பிலி | நீர்முள்ளிவிதை |
| வேங்கைப்பட்டை | அக்கிராகாரம் |
| அதிமதுரம் | சந்தனத்தூள் |
| ஆனைநெருஞ்சி | நன்னாரிவேர் |
| | கண்டந்திப்பிலி |

இவை வகைக்கு 40 கி.

| | | | |
|---|---|---|---|
| கிராம்பு | 16 கி. | சாதிக்காய் | 12 கி. |
| சாதிபத்திரி | 12 கி. | காசா ஏலம் | 12 கி. |
| முந்திரிகை | 40 கி. | பேரீச்சம்பழம் | 120 கி. |
| சீனி | 250 கி. | நெய் | 500 கி. |
| வாதம்பருப்பு | 80 கி. | மூங்கிலுப்பு | 40 கி. |

செ.முறை முன்கூறப்பட்ட சரக்குகளைப் பொடித்துக்கொண்டு அடுப்பேற்றி சீனி நெய்பாகு செய்து பின் கூறப்பட்ட வாசனைச் சரக்குகளையும் போட்டு கிளறி இளகமாகும் பதத்தில் இறக்கிவிட வேண்டும்.

அளவு 5 கி. காலை மாலை;

தீ.நோ. உடல் வலுப்பெறும்; தாது விருத்தியடையும்.

## திப்பிலி இளகம்

தே.பொ. அரிசித் திப்பிலி
நெல்லிமுள்ளி
நெற்பொரி

செ.முறை முன்னிரண்டு சரக்குகளையும் பொன் வறுவலாக வறுத்துப் பொடித்துக் கொள்ள வேண்டும். அதனுடன் நெற்பொரியையும் பொடித்துச் சேர்த்துக் கொள்ள வேண்டும். சீனி பாகு செய்து சரக்குகளைப்

போட்டுப் பக்குவத்தில் தேன், நெய் சேர்த்துக் கிண்டி இறக்கிக் கொள்ளவேண்டும்.

அளவு கழற்சிக்காய் அளவு, இருவேளை

தீ.நோ. காசம்

## முருங்கைப் பூ இளகம்

| | | | |
|---|---|---|---|
| தே.பொ. | முருங்கைப் பூ | 1 | லிட் |
| | பசும்பால் | 1/2 | லிட் |
| | இஞ்சிச்சாறு | 1/2 | லிட் |
| | வெங்காயச்சாறு | 1/2 | லிட் |
| | ஒருத்தலைப்பூண்டு | 120 | கிராம் |
| | நெய் | 1/2 | லிட்டர் |
| | முட்டை | 8 | |
| | பனங்கற்கண்டு | 250 | கிராம் |
| | சாதிக்காய் | 35 | கி |
| | சாதிபத்திரி | 35 | கி |
| | ஏலம் | 35 | கி |
| | கசகசா | 35 | கி |

செய்முறை முருங்கைப்பூ முதல் கசகசா முடியவுள்ள சரக்குகளில் மருந்துச் சரக்குகளை எல்லாம் பொடித்துச் சாறுகளைச் சேர்த்து முட்டை, நெய், பனங்கற்கண்டு கலந்து இலேகிய பதம் வரும்வரை கிண்டி இலேகியமாக்கி இறக்கிக் கொள்ளவேண்டும்.

அளவு காலை, மாலை 5 கி

தீ.நோ. தாது விருத்தியடையும்

பத்தியம் போகமாகாது

## பரங்கி இளகம்

| | | | | |
|---|---|---|---|---|
| தே.பொ. | அ. | நீர்வள்ளிக்கிழங்கு | 18 | கிராம் |
| | | கோரைக்கிழங்கு | 18 | கிராம் |
| | | மூக்குரட்டை | 35 | கிராம் |
| | | தாதுவளை | 35 | கிராம் |

| | | |
|---|---|---|
| | கண்டங்கத்திரி | 35 கிராம் |
| | பிரப்பங்கிழங்கு | 35 கிராம் |
| | அசுவகெந்தி | 35 கிராம் |
| | பரங்கிப்பட்டை | 350 கிராம் |
| | நிலப்பனங்கிழங்கு | 9 கிராம் |
| ஆ. | திப்பிலி | 35 கிராம் |
| | மிளகு | 35 கிராம் |
| | சுக்கு | 35 கிராம் |
| | கொத்துமல்லி | 28 கிராம் |
| | சித்தரத்தை | 28 கிராம் |
| | கோட்டம் | 28 கிராம் |
| | இலவங்கம் | 28 கிராம் |
| | தாளிசபத்திரி | 28 கிராம் |
| இ. | தான்றிக்காய் | 8 கி. |
| | வாய்விடங்கம் | 8 கி. |
| | மாசிக்காய் | 8 கி. |
| | தேவதாரம் | 8 கி. |
| | சிறுநாகப்பூ | 8 கி. |
| | சூடன் | 8 கி. |
| ஈ. | கடுகுரோகணி | 16 கி. |
| | வெட்டிவேர் | 16 கி. |
| | கூகைநீறு | 16 கி. |
| | விலாமிச்சம் | 16 கி. |
| உ. | அதிமதுரம் | 40 கி. |
| | கிராம்பு | 40 கி. |
| | சாதிபத்திரி | 40 கி. |
| | ஏலம் | 40 கி. |
| | அதிவிடயம் | 40 கி. |
| | சாதிக்காய் | 40 கி. |
| | முந்திரிகை | 40 கி. |
| | பேரீச்சம்பழம் | 40 கி. |
| | பசு நெய் | 3.9 லி. |
| | தேன் | 1 லி. |
| | சர்க்கரை | 350 கி. |

"அ" முதல் "ஈ" வரையில் கூறப்பட்டுள்ள வகைகளைத் தனித்தனியே இடித்துத் தூளாக்கிக் கொள்ள வேண்டும்.

அதிமதுரம் முதல் பேரீச்சம்பழம் வரை உள்ள சரக்குகளை இடித்துத் திரட்டிக் கொள்ள வேண்டும். பசு நெய்யை ஊற்றி இத்தூளைப் போட்டுக் கிண்டி எடுத்துக்கொள்ள வேண்டும். அதனுடன் வாழைப்பழத்தோலை நறுக்கிப்போட்டு பழம் சிவக்கும் வரை கிண்டி இறக்கிக் கொள்ள வேண்டும். மேற்படி தூள்களை, ஒவ்வொன்றாகக் கொட்டிக் கொள்ள வேண்டும். பின்னர் 350 கிராம் சர்க்கரையைப் போட்டுக் கிண்டி இளகிவரும்போது இறக்கிக் கொள்ளவேண்டும்.

அளவு காலை மாலை இருவேளை; வேளையொன்றுக்கு 5 கிராம் வீதம்; நோய் தீரும் வரை.

தீ.நோ. கிரந்தி, இரத்த நீர், மேல் இளைப்பு, பாண்டு, வெட்டை, வெடிசூலை, சலக்கழிச்சல், மூலம், பித்தம், காமாலை, காசவகை எட்டு, பிடரிக்கணம், உள்மாந்தை, சத்திப்பு, குன்மம், குட்டம், மார்பு நோய், கபாலநோய், வாதங்கள், கன்னப்புற்று, மகோதரம், தலைசுற்றல், அதிசாரம், சயரோகம் இவை நீங்கும்.

பத்தியம் பழையசோறு, இல்லற உறவு, மதுவகைகள் புகையிலை நீக்கவும்.

## மன்மத இளகம்

தே.பொ. நீர்முள்ளி வித்து
துத்தி வித்து
முள்ளங்கி வித்து
கஞ்சாவித்து
ஊமத்தை வித்து
கடுக்காய்
தான்றிக்காய்

| | | |
|---|---|---|
| சன்னலவங்கப்பட்டை<br>சித்திரமூலம்<br>சிறுநாகப்பூ<br>கையாந்தகரை<br>அக்கராகாரம்<br>நத்தைச்சூரி வித்து<br>கிராம்பு<br>சாதிக்காய்<br>சாதிபத்திரி<br>கசகசா<br>மதன காமப்பூ | | இவை வகைக்கு 40 கி. |

| | | |
|---|---|---|
| கஞ்சா | 120 | கிராம். |
| வெல்லம் | 70 | கி. |
| தேன் | 400 | மிலி. |

செ.முறை கஞ்சாவை சிறிது சிறிதாக வெட்டிக்கொண்டு பாலில் இளவறுப்பாக ஏழுமுறை வறுத்தெடுத்துக் கொள்ள வேண்டும். பால்சேர்த்துப் பிசைந்து கழுவி காய்ந்த பின்னர் மீண்டும் இளவறுப்பாக வறுத்து இடித்துத் தூள்செய்து கொள்ளவேண்டும். வெல்லம், தேன் விட்டு முன்மருந்துகளைப் பொடித்து உரலிலிட்டு அனைத்தையும் சேர்த்து மைபோல் இடித்து மெழுகுபோலாக்கிக் கொள்ளவேண்டும்.

அளவு கழற்சிக்காய் அளவு - 20 நாள்.

து.ம. பால்

தீ.நோ. மேகநோய் அகலும், தாதுவிருத்தியடையும்.

## இலிங்க இளகம்

| தே.பொ. | | | |
|---|---|---|---|
| | தேங்காய் | 2 | எண்கள் |
| | பசும்பால் | 500 | மிலி |
| | இலிங்கம் | 4 | கி. |
| | சாதிக்காய் | 2 | எண் |

| | | |
|---|---|---|
| அபின் | 4 | கி. |
| பூனைக்காலி வித்து | 35 | கி. |
| நீர்முள்ளி வித்து | 35 | கி. |
| நிலப்பனங்கிழங்கு | 35 | கி. |
| அத்திப்பால் | 35 | கி. |
| பால் சாம்பிராணி | 35 | கி. |

செய்முறை தேங்காய்களை உடைத்து பூத்திருகி பசும்பாலை அதில் விட்டு இலிங்கத்தையும் போட்டுக் காய்ச்ச வேண்டும். பால் சுண்டும் பருவத்தில் இலிங்கத்தை எடுத்துக் கொள்ள வேண்டும். சாதிக்காய் இரண்டைக் குடைந்து அதில் அபினை வைத்து குடைந்த சக்கையால் மூடிவிட வேண்டும். அதனை நெய்யில் போட்டுக் காய்ச்சிக் கொள்ள வேண்டும். பூனைக்காலி வித்து போன்ற மீதமுள்ள சரக்குகளை நன்றாக அரைத்துக் கொண்டு, முன்னர் சாதிக்காய் போட்டு தயாரித்த நெய்யில் சர்க்கரையும் சேர்க்கவேண்டும். அந்தபாகில் போட்டுக் கிண்டி நல்ல பக்குவத்தில் தேன் விட்டு மெழுகுபதம் வரும்போது முன்னர் எடுத்த இலிங்கத்தைப் பொடித்துப்போட்டு கிண்டி இறக்கிக் கொள்ள வேண்டும்.

அளவு காலை, மாலை, சுண்டைக்காய் அளவு; 40 நாள்

து.ம. மேகச்சூடு தணியும்; தாது விருத்தியடையும்;

# எண்ணெய்

கூறப்பட்ட சரக்குகளைத் தூய்மை செய்துகொண்டு சாறுகளை இணைத்துக் கொண்டு தேவையான எண்ணெய்களை உடன் சேர்த்து நன்கு காய்ச்சி வடித்துக் கொள்ளுதல்.

## நுணா எண்ணெய்

| | | |
|---|---|---|
| தே.பொ. நல்லெண்ணெய் | 500 | கி. |
| நுணாவிலை | 250 | கி. |
| முத்துப்பசலி வேர் | 60 | கி. |

| | |
|---|---|
| செ.முறை | நுணா இலையை நல்லெண்ணெயில் போட்டு வேக வைக்க வேண்டும். வெந்தபின் நுணா இலைகளைப் பிழிந்து எடுத்துவிடவேண்டும். முத்துப்பசலி வேரை நறுக்கி துணியில் கட்டி எண்ணெயில் விட்டு சட்டி மூடி சீலை செய்து எரிக்கவேண்டும். அதன் வெற வெறப்புத் தன்மை அடங்கியவுடன் அந்த வேர்களையும் வெளியே எடுத்துவிடவேண்டும். |
| அளவு. | 1 தேக்கரண்டி வீதம், காலை மாலை; 2 வேளை |
| தீ.நோ. | கணை நீங்கும் |

## கணை எண்ணெய்

| | | |
|---|---|---|
| தே.பொ. | விளக்கெண்ணெய் | 1 லி |
| | வல்லாரைச்சாறு | 125 மிலி |
| | புளியாரைச்சாறு | 125 மிலி |
| | கற்றாழைச்சாறு | 125 மிலி |
| | பசும்பால் | 1 லி |

| | |
|---|---|
| செ.முறை | மேற்கூறப்பட்ட திரவங்களையெல்லாம் சேர்த்துக் காய்ச்சி நல்ல பதத்தில் வரும்போது சாதிக்காய், சாதிபத்திரி, ஏலம் இவற்றைப் பொடி செய்து போட்டு இறக்கிக் கொள்ளவேண்டும். |
| அளவு | 1-2 தேக்கரண்டி; நோயின் தன்மைக்கேற்பவும், குழந்தையின் வயதிற்கேற்பவும் எண்ணெய் தரலாம். |
| தீ.நோ. | கணை நீங்கும்; இரத்த விருத்தியாகும்; பிள்ளைகள் செழித்து வளரும். |

## வெங்காய எண்ணெய்

| | | |
|---|---|---|
| தே.பொ. | வெங்காயம் | 2 கிலோ |
| | பிரமிவழுக்கைச்சாறு | 2 லிட் |
| | சோற்றுக்கற்றாழைச்சாறு | 2 லிட் |
| | அகத்திக்கீரைச்சாறு | 2 லிட் |

| | | |
|---|---|---|
| | நல்லெண்ணெய் | 2 லிட் |
| | ஏலம் | 4 கி. |

செ.முறை வெங்காயம், ஏலம் இவற்றை கூறப்பட்டச்சாறுகள் விட்டரைத்து நல்லெண்ணெய் சேர்த்துக் காய்ச்சி வடித்துக் கொள்ளவும்.

அளவு காலை, மாலை, இருவேளை, வேளைக்கு 1 கரண்டி வீதம்; நோய் தீரும் வரை.

தீ.நோ. கணம்

பத்தியம் போகமாகாது

## சுந்தரி (மூஞ்சூறு) எண்ணெய்

| | | |
|---|---|---|
| தே.பொ. | திருகு கள்ளிப்பால் | 2 லிட் |
| | கொடிக்கள்ளிப்பால் | 2 லிட். |
| | எருக்கம்பால் | 2 லிட். |
| | வேப்பெண்ணெய் | 2 லிட். |
| | மூஞ்சுறு | 1 எண்ணிக்கை |

செ.முறை மூஞ்சுறுவின் வாய் பிளந்து மிளகுப்பொடியைச் சேர்த்து ஒரு கலயத்தில் போட்டு மறுகலயத்தால் மூடி சீலைமண் செய்து எருமை கட்டுகிற தொழுவில் ஈரமுள்ள இடத்தில் முழஅளவு குழிவெட்டி மணலிட்டு கவசம் வைத்து எருமைச் சாண வரட்டியைப் பொடித்துக் கொட்ட வேண்டும். அதில் கலசத்தைப் பொதித்து குழி கொள்ளுமளவிற்கு மணல் கொட்ட வேண்டும். நன்றாக மூடிவிடவேண்டும். 40 நாள் சென்ற பின்னர் எடுத்தால் நல்லநெய் போன்று காணப்படும்.

அளவு 2 கிராம்; ஒரு வேளை

து.ம. வெற்றிலை

தீ.நோ. விடம் நீங்கும்

குறிப்பு:- வெற்றிலையில் தயிலத்தைத் தடவி மென்று விழுங்கவேண்டும். எச்சிலை துப்பலாகாது.

## சங்கவேர்த்தயிலம்

தே.பொ. சங்கம்வேர் $1^{1/4}$ கிலோ
நல்லெண்ணெய் 2 லி

செமுறை வேரை இடித்துப்போட்டு 20 லிட் தண்ணீர் ஊற்றி அதனை இரண்டரை லிட்டராகுமாறு சுண்டக் காய்ச்சி நல்லெண்ணெய் 2 லிட்டர் விட்டு மெழுகு பதமாகக் காய்ச்சி இறக்கிக் கொள்ளவும்.

அளவு மேல்பூச்சு செய்யவும்

தீ.நோ. சிரங்கு, சூலை, குட்டம்.

## ஆமணக்குத் தைலம்

தே.பொ. ஆமணக்கு, 10 லி.
எள், வேம்பு
புங்கு, புன்னை எண்ணெய் } முறையே 2 லி.
எட்டிப் பழச்சாறு

மிளகரணை வேர்
கொழுஞ்சிவேர்
கொடிவேலி வேர்
வேலிப்பருத்தி வேர்
களாத்தி வேர்
பெருங்குமிழ் வேர்
ஆயிலியப்பட்டை
பிராயம் வேர்
மாவிலிங்கம் வேர்
மலை ஆதண்டை வேர்
சிறுகாஞ்சொறிவேர்
நொச்சிவேர்

இவை வகைக்கு 35 கி.

| | | |
|---|---|---|
| எருக்கின் வேர் | | இவை |
| செங்கத்தாரி வேர் | | வகைக்கு |
| மூக்குரட்டை வேர் | | 35 கி. |
| புளியரணைக்கிழங்கு | | |
| கோழிமுட்டை | 10 | |
| கடுகுரோகணி | 35 கி. | |
| கம்பீச்சனம் | 8 கி. | |
| கஸ்தூரி மஞ்சள் | 8 கி. | |
| பெருங்காயம் | 20 கி. | |
| சயிந்தலவணம் | 8 கி. | |
| தேவதாரம் | 8 கி. | |
| சதகுப்பை | 8 கி. | |
| கடுகு | 8 கி | |
| துளசி | 8 கி. | |

செ.முறை ஆடாதோடை, ஊமத்தை, நெட்டி, பேய்மிரட்டி சங்கங்குப்பி இவற்றின் சாற்றைப் பிழிந்து கொண்டு மேற்கூறப்பட்ட எல்லாவற்றையும் சேர்த்து அரைத்துக் கொள்ளவேண்டும்.

அத்துடன் ஐந்தெண்ணெயையும் கூடவிட்டுக்கொண்டு மெழுகு பதமாகக் காய்ச்சி வடித்துக் கொள்ள வேண்டும்.

அளவு நோயின் தன்மைக் கேற்ப வெளிப்பூச்சு

தீ.நோ. வாதம் 84 வகைகளும் தீரும்.

பத்தியம் பழைய சாதம், மோர், குளிர்ந்த பானங்கள், மீன் கருவாடு, வாயுபண்டங்கள் ஆகாது.

குறிப்பு:- ஐந்தெண்ணெய் முறையே, புங்கு, ஆமணக்கு, எள்ளு, வேம்பு, இலுப்பை முதலிய ஐந்தையும் சேர்த்து வடித்த எண்ணெய்

## கெந்தக எண்ணெய்

| | | |
|---|---|---|
| தே.பொ. | கெந்தகம் | 40 கி. |
| | இரசம் | 20 கி. |
| | பசுநெய் | 60 கி. |

| | |
|---|---|
| செ.முறை | கெந்தகத்தை இடித்து வட்டத் துணியில் சுருட்டு உருக்கிய பசுநெய்யில் போடவேண்டும். கெந்தகம் நெய்யுடன் கலந்து சிவந்து வரும்போது துணியை வெளியே எடுத்துவிடவேண்டும். இரசத்தைக் கலவத்திலிட்டு மேற்படி தைலம்விட்டு இரசத்தைக் மிக நன்றாக ஆட்டி புட்டியில் அடைத்துக் கொள்ள வேண்டும். |
| அளவு | வேளைக்கு 1 கிராம்; 3 நாள் 6 வேளை. |
| து.ம. | கல்கண்டுப் பொடி |
| தீ.நோ. | பெரும்பாடு, சூலை, கிரந்தி |
| பத்தியம் | புளி, புகை, வாயு பண்டங்களைத் தள்ள வேண்டும். |

## சுடர் எண்ணெய்

| | | |
|---|---|---|
| தே.பொ. | இரசம் | 4 கி. |
| | கெந்தகம் | 4 கி. |
| | நாபி | 4 கி. |
| | சாம்பிராணி | 4 கி. |
| | பசுநெய் | 120 கி. |

| | |
|---|---|
| செ.முறை | மேற்சொன்ன 4 சரக்குகளையும் அரைத்துத் துணியில் பரப்பிக்கொள்ளவேண்டும். நடுவிலே ஒரு சிறிய நீளமான கம்பி வைத்து உருட்டித் திரித்துக் கொள்ளவும். பசுநெய்விட்டு, அந்தத் திரியில் நெய்யை ஊற்றிக்கொளுத்த திரி நன்கு எரியும். அப்போது வடியும் சுடர் தைலத்தைப் பாத்திரத்தில் சேகரிக்கவும். |
| அளவு | 1/4 - 1/2 தேக்கரண்டி; எண்ணெய் உண்டபின் சர்க்கரையையும் உட்கொள்ளவும். |
| தீ.நோ. | தோல் வியாதிகள், வெள்ளை, காசம். |
| பத்தியம் | புளி, கரப்பான் பண்டங்களைத் தவிர்க்கவும். |

## வேப்பந்தயிலம்

தே.பொ. வேப்பங்கொட்டை 20 லிட்.

செ.முறை வேப்பங்கொட்டையை உடைத்து பானையில் போட்டு சீலை மண் செய்து குழித்தைலம் எடுத்துக் கொள்ள வேண்டும்.

அளவு சூரிய உதயத்திற்கு முன்னர் தேய்த்து முழுக வேண்டும். 10 நாட்கள் இடைவெளிவிட்டு மூன்று முறை முழுக வேண்டும்.

து.ம. முழுக்கு 1 க்கு 70 மிலி எண்ணெய், பசும்பால் 35 மிலி, வசம்பு 10 கிராம் அரைத்துக் கலந்து தேய்த்து முழுக வேண்டும்.

தீ.நோ பூச்சிவெட்டு நீங்கும், மயிர் வளரும்.

பத்தியம் புளி நீக்கவும்; பசுமோர்; பசுநெய் சேர்த்துக் கொள்ளவும்; இச்சாபத்தியம்.

## எலுமிச்சை எண்ணெய்

தே.பொ. நல்லெண்ணெய் 50 கி
எலுமிச்சம்பழச்சாறு 50 கி

செ.முறை இரண்டையும் ஒன்றாகக் கலந்து கொள்ளவேண்டும்

அளவு 1-2 தேக்கரண்டி; காலை, மாலை இரண்டு வேளை.

து.ம. நீராகாரம்

தீ.நோ. வெள்ளை நோய்

## கோழிமுட்டை எண்ணெய்

தே.பொ. நல்லெண்ணெய் 10 மிலி
கோழிமுட்டைவெண்கரு ஒன்று

செ.முறை நல்லெண்ணெயைச் சட்டியிலிட்டு சூடானதும் கோழிமுட்டை வெண்கருவிட்டு தோசைபோல

புரட்டி எடுத்துக் கொள்ளவேண்டும். தோசை வெந்த பின்னர் அந்த எண்ணெயை வடித்தெடுத்துக் கொள்ள வேண்டும்.

அளவு — ஒரே வேளை, வடித்தெடுத்த எண்ணெய்

து.ம. — ஆலிலைத் தொன்னையினைப் பயன்படுத்தவும்.

தீ.நோ. — மூல வாயு

## கடுக்காய் எண்ணெய்

தே.பொ.

| | | |
|---|---|---|
| நல்லெண்ணெய் | $6^{1/2}$ | லி |
| எட்டிப்பழச்சாறு | $6^{1/2}$ | லி |
| கடுக்காய் | 80 | எண்கள் |

செ.முறை — நல்லெண்ணெயையும் எட்டிப்பழச்சாற்றையும் சேர்த்துக் காய்ச்சி மெழுகு பதமாக வரும்போது கடுக்காயைத் தூள் செய்து அதில் போட்டு காய்ச்சி எண்ணெய் வடித்துக்கொள்ள வேண்டும்.

அளவு — தேக்கரண்டியளவு உள்ளுக்கு கொடுக்கவும், எண்ணெய் விழுங்கிய பின் சர்க்கரை சேர்த்துக் கொள்ளவும்.

தீ.நோ. — கண்ணோய்கள்

## வெள்ளைப் பாடாண எண்ணெய்

தே.பொ.

| | | |
|---|---|---|
| வெள்ளைப் பாடாணம் | 35 | கி. |
| வேப்பெண்ணெய் | 120 | கி. |

செ.முறை — வெள்ளைப்பாடாணத்தை வேப்பெண்ணெயில் தீபாக்கினியாக (1 விறகு) 12 மணிநேரம் எரித்துக் கொள்ளவும்.

அளவு — 10 மி.கி. 7 நாட்கள்

து.ம. — வெற்றிலையில் தடவி உண்ணவும்.

தீ.நோ. — செவ்வட்டை, வண்டுகடி, சன்னி சுரம்

# மாத்திரை

மருந்துச் சரக்குகளைச் சேர்த்து சில இலைச் சாறுகளினாலர்வது குடிநீர்களினாலாவது அரைத்து, பல அளவுகளாய் உருட்டி நிழலில் உலர்த்தி எடுத்துக்கொள்வது. எவ்வளவில் நோயாளிக்குக் கொடுக்க வேண்டுமோ அதே அளவில் உருட்டிக் கொள்வதால் மாத்திரை, உருண்டை என்ற வேறு பெயர்களுமுண்டு. குளிகையும் இதனையே குறிக்கும்.

## வீரமாத்திரை

| | | |
|---|---|---|
| தே.பொ. | வீரம் | 4 கிராம் |
| | பூரம் | 4 கிராம் |
| | கொடி வேலி வேர்ப்பட்டை | |

செ.முறை — கொடிவேலி வேர்ப்பட்டைக் குடிநீரில் வீரம், பூரம் இரண்டையும் 9 மணி நேரம் நன்றாக அரைக்க வேண்டும். அதனை 5 மி.கி. அளவு உருண்டை செய்துகொண்டு நிழலில் உலர்த்தி எடுத்துக் கொள்ள வேண்டும்.

அளவு — காலை, மாலை ஏழு நாட்கள்; ஒரு உருணடை கொடுக்கவும்.

தீ.நோ. — சூலை, புண்.

பத்தியம் — கடும்பத்தியம், உப்பு, புளி நீக்கவும், கஞ்சி, ரொட்டி, தயிர், மோர் சாதம் சாப்பிடவும்.

## சவ்வீர மாத்திரை

| | | |
|---|---|---|
| தே.பொ. | சவ்வீரம் | 8 கி. |
| | பச்சைக் கற்பூரம் | 8 கி. |
| | பொரிகாரம் | 16 கி. |

செ.முறை — மேற்குறித்த மூன்றையும் புங்கம்வேர்ப் பாலில் அரைத்து பச்சைப் பயறளவுக்கு (30 மிகி) உருட்டிக்கொள்ள வேண்டும். அதனை நிழலில்

உலர்த்தி எடுத்துப் பத்திரப் படுத்திக் கொள்ள வேண்டும்.

அளவு 1 மாத்திரை ; இருவேளை

து.ம. கிரந்திக்கு முலைப்பாலிலும் சன்னிதோடம், வாய்வுக்கு இஞ்சிச்சாறு, சுக்குநீர், பனைவெல்லம் ஆகியவற்றிலும் கொடுக்கலாம்.

தீ.நோ. கிரந்தி, சன்னிதோஷம், வாயு

## பூர மாத்திரை

தே.பொ. பூரம் 6 கி.
புங்கவேர்ப்பட்டை 40 கி.

செ.முறை பூரம், பட்டை இரண்டையும் கல்வத்திலிட்டு புங்கம்பட்டைப் பாலால் அரைத்து தூதுளங்காய் அளவாக உருண்டை செய்து நிழலில் உலர்த்தி வைக்க வேண்டும்.

அளவு ஒரு உருண்டை வீதம் காலை, மாலை, மூன்று நாள்; ஆறு பொழுது

து.ம. புங்கம்பட்டைச்சாறு.

தீ.நோ. கள்ளிப்பழக்கிரந்தி, இலிங்கப்புற்று, யோனிப்புற்று, புண், அரையாப்பு.

பத்தியம் உப்பு, புளியாகாது, கடும்பத்தியம்

குறிப்பு:- உருண்டையைப் புங்கம்பட்டைச் சாற்றில் விழுங்கவும். அதன் பிறகு சிறிதளவு சாறு குடிக்கவும். அரிசிக்கஞ்சி, மோர், தயிர்சாதம், ரொட்டி சாப்பிடவும்.

## அபின் மாத்திரை-முறை-1.

தே.பொ. அபின் - 4 கி
இரச கற்பூரம் - 4 கி

செ.முறை மேற்குறித்த இரண்டையும் தாய்ப்பாலில் அரைத்து 200 மி.கி. அளவுள்ள மாத்திரைகளாகச் செய்து கொள்ளவும்.

அளவு 1 அல்லது 2 மாத்திரை; இரவு ஒருவேளை மட்டும்;

து.ம. பசும்பால்

தீ.நோ. தூக்கமின்மை, காய்ச்சல், வாயு

## அபின் மாத்திரை-முறை-2

| | | |
|---|---|---|
| தே.பொ. | அபின் | - 4 கி |
| | ஆலாத்தி கற்பூரம் | - 4 கி |
| | கோதுமைமாவு | - தேவையான அளவு |

செ.முறை மேற்குறித்த இரண்டுடன் கோதுமை மாவும் போட்டு தண்ணீர்விட்டு அரைத்து 200 மி.கி. அளவுள்ள மாத்திரைகளாகச் செய்து கொள்ளவும்.

அளவு வேளைக்கு 1 மாத்திரை, காலை, மாலை இருவேளை.

து.ம. வெந்நீர்

தீ.நோ. இருமல், சுவாசம்

பத்தியம் நோய்க்கேற்ப பத்தியம்

குறிப்பு:- மலம்கட்டினால் பேதிக்குக் கொடுக்கவும்.

## கோரோசனை மாத்திரை-முறை-1

| | | |
|---|---|---|
| தே.பொ. | கோரோசனை | 4 கிராம் |
| | பச்சைக்கற்பூரம் | 4 கிராம் |
| | கோட்டம் | 32 கிராம் |

செ.முறை இம்மூன்றையும் கல்வத்தில் போட்டு, புங்கம்பட்டைச் சாறுவிட்டு மைபோல் அரைத்து பருத்திக் கொட்டையளவு உருண்டை செய்து கொள்ளவும்.

| | |
|---|---|
| அளவு | காலை மாலை இருவேளை; 5 நாள் அல்லது 10 நாட்கள் வரை. |
| து.ம. | முலைப்பால், பசுவின்பால் |
| தீ.நோ. | கெற்பப்பிணிகள் (உள்ளுக்குத் தருதல்)<br>கண்ணோய் (கண்ணில் இழைத்துப் போடுதல்) |

## கோரோசனை மாத்திரை-முறை-2.

| | |
|---|---|
| தே.பொ. | கோரோசனை 8 கிராம்<br>இரசகற்பூரம் 8 கிராம் |
| செ.முறை | இவ்விரண்டையும் முலைப்பாலில் அரைத்து உளுந்தம் பயிறளவு, (65 மி.கி. அளவில்) உருட்டி நிழலில் உலர்த்திவைத்துக் கொள்ள வேண்டும் |
| அளவு | ஒன்று அல்லது இரண்டு மாத்திரை |
| து.ம. | இஞ்சிச்சாறு, தேன், முலைப்பால் |
| தீ.நோ. | சுரம், சன்னி |

## அரிதார மாத்திரை

| | |
|---|---|
| தே.பொ. | அரிதாரம் 10 கிராம்<br>இரசம் 10 கிராம்<br>இந்துப்பு 10 கிராம் |
| செ.முறை | இம்மூன்றையும் பேய்ப்பீர்க்கன் சாறு விட்டரைத்து சிறு கண்மாத்திரைகளாகச் செய்து கொள்ளவேண்டும். |
| அளவு | தேனில் இழைத்து ஒரிரு துளிகள் கண்ணிலிடவும். |
| து.ம. | தேன் |
| தீ.நோ. | விடந்தீண்டல் |

## சித்திரமூல மாத்திரை

தே.பொ. கொடிக்கள்ளிப் பால்
திருகுக்கள்ளிப்பால்
சித்திரமூலம்
கெந்தகம்
} சமஎடை

செ.முறை கொடிக்கள்ளிப்பால், திருகுக்கள்ளிப்பால் இரண்டையும் தனித்தனியே காயவைத்துத் தூள்செய்து கொள்ள வேண்டும். சித்திரமூலம் இடித்தத் தூளையும், கெந்தகத்தையும், சம எடையாகக் கொண்டு மேற்படி தூளுடன் கலந்து தேன்விட்டு மெழுகுபோல் அரைத்துக் கொள்ளவேண்டும். இதனை வழித்தெடுத்து மாட்டுக் கொம்பு சிமிளில் அடைத்துக் கொள்ளவேண்டும். பாசிப்பயறளவு (32 மி.கி.) மாத்திரை செய்து கொள்ள வேண்டும்.

அளவு 1 மாத்திரை: ஒரு வேளை

து.ம. வெல்லம்

தீ.நோ. சூலைக்கட்டு

பத்தியம் உப்பு, புளி நீக்கவும்.

குறிப்பு:- ஒரு மாத்திரை உண்டும் பேதியாகவில்லையென்றால் (வெல்லத்தில் வைத்து ) இரண்டு மாத்திரை தரவும். அப்படியும் ஆகாவிட்டால் 3 நாள் விட்டு முன்போல் கொடுக்கவும்.

## கண்காச மாத்திரை

தே.பொ.

| | | |
|---|---|---|
| சங்கு | புங்கு | சமஎடை |
| திப்பிலி | பீதரோகினி | |
| அரிதாரம் | பால்துத்தம் | |
| மிளகு | மனோசிலை | |
| சத்திச்சாரம் | அதிமதுரம் | |

செ.முறை மேற்கண்ட சரக்குகளைச் சமஎடை எடுத்துக் கொண்டு நீர்விட்டரைத்து மாத்திரைகளாகச் செய்துகொள்ள வேண்டும்.

| | |
|---|---|
| அளவு | ஓரிரு துளிகள் |
| து.ம. | தேனில் இழைத்துக் கண்ணிலிடவும் |
| தீ.நோ. | கண்காச படலம் தீரும் |

## பச்சைக்கற்பூர மாத்திரை

| | | |
|---|---|---|
| தே.பொ. | பச்சைக்கற்பூரம் | 8 கிராம் |
| | இரசகற்பூரம் | 8 கிராம் |

செ.முறை இரண்டையும் புங்கம்வேர்ப் பால்விட்டு அரைத்து உளுந்தளவாக (65 மி.கி.) உருட்டி நிழலில் உலர்த்திக் கொள்ளவும்.

அளவு 1 மாத்திரை காலை, மாலை இருவேளை, நோய் தீரும் வரை

து.ம. முலைப்பால், வெந்நீர், இஞ்சி சுரசம்

தீ.நோ. சன்னி, காய்ச்சல்

## இரசகற்பூர மாத்திரை-முறை-1

| | | |
|---|---|---|
| தே.பொ. | இரசகற்பூரம் | 18 கிராம் |
| | காசுக்கட்டி | 18 கிராம் |
| | துத்தியிலை | 18 கிராம் |
| | நயம் கத்தூரி | 4 கிராம் |

செ.முறை இந்நான்கையும் கல்வத்திலிட்டு மிளகுக் குடிநீர் விட்டரைத்து மாத்திரைகளாகச் செய்து கொள்ளவும்.

அளவு 65-130 மி.கி. இரு வேளை

து.ம. தேன், இஞ்சிச்சாறு, பனைவெல்லம்

தீ.நோ. சளி, சுரம், மூலம் தீரும்.

பத்தியம் உப்பு, புளி, புகையிலை தள்ளவும்.

## இரசகற்பூர மாத்திரை-முறை-2

| | | |
|---|---|---|
| தே.பொ. | இரசகற்பூரம் | 4 கி. |
| | இரச செந்தூரம் | 4 கி. |
| | நாமக்கட்டி | 4 கி. |

செ.முறை இம்மூன்றையும் கஞ்சிவிட்டு அரைத்து இலவங்கொட்டை அளவாக உருட்டி மாத்திரையாக்கி உலர்த்தி எடுத்துக் கொள்ள வேண்டும்.

அளவு இருவேளை, ஏழுநாள்.

து.ம. வெந்நீர்

தீ.நோ. கிரந்தி, சூலை, வாயு, சன்னி, காய்ச்சல்

பத்தியம் உப்பு ஆகாது.

## இரசகற்பூர மாத்திரை-முறை-3

| | | |
|---|---|---|
| தே.பொ. | இரசகற்பூரம் | 4 கிராம் |
| | குங்குமப்பூ | 4 கிராம் |
| | சாம்பிராணிச்சத்து | 4 கிராம் |

செ.முறை இம்மூன்றையும் முலைப்பால்விட்டு அரைத்து உளுந்தளவு (65 மி.கி.) மாத்திரைகளாக உருட்டிக் கொள்ளவேண்டும்.

அளவு 1 மாத்திரை இருவேளை; 10 நாட்கள்

து.ம. வெல்லம்

தீ.நோ. வாதநோய், கபம்

பத்தியம் புளி, வாயுப்பண்டங்கள் ஆகாது.

## இரச மாத்திரை

| | | |
|---|---|---|
| தே.பொ. | வெள்ளைப் பாடாணம் | 16 கிராம் |
| | இரசம் | 24 கிராம் |
| | சீனக்காரம் | 8 கிராம் |

செய்முறை — மேற்குறித்த மூன்றையும் குழிக்கல்லிலிட்டு வாழைத்தண்டுச் சாற்றால் ஆறு மணிநேரம் நன்கு அரைத்துக் கொள்ளவும்.

அளவு — வேளைக்கு 1 மாத்திரை வீதம் காலை, மாலை, ஆறு வேளை

தீ.நோ. — சுரம்

குறிப்பு:- பாடாணம் என குறிக்கும்போது அது பொதுவாக வெள்ளைப் பாடாணத்தையே குறிக்கும்.

## துருசு மாத்திரை

| | | |
|---|---|---|
| சே.பொ. | துருசு | 12 கிராம் |
| | சங்கு | 16 கிராம் |
| | சவுக்காரம் | 4 கிராம் |

செய்முறை — இம்மூன்றையும் கல்வத்திலிட்டு எலுமிச்சம்பழச்சாறு விட்டு ஏழுநாள் அரைக்க வேண்டும். கண்ணிற்கு இடும் திரட்டு மாத்திரைகளாகச் செய்து மூங்கில் குழாயில் அடைத்துக் காயவைக்க வேண்டும். காய்ந்தபின் குழாயை உடைத்து மாத்திரையை எடுத்து பதப்படுத்திக் கொள்ளவும்.

அளவு — சிறு பயறளவு (16 மி.கி.- 32 மி.கி.)

து.ம. — நந்தியாவட்டைச்சாறு, பனைமட்டைச்சாறு, முலைப்பால்

தீ.நோ. — கண்ணோய்கள்

குறிப்பு:- மாத்திரைய்யை மேற்குறித்த மூன்றில் ஏதாவது ஒன்றில் இழைத்து கண்ணிற்குப் போடவும். மருந்து தயாரிப்பில் சவுக்காரத்தை நீக்கி வெள்ளைச் சாரணைவேர் சேர்த்துக் கொள்ளலாம்.

# குளிகை

## இரசக்குளிகை-முறை-1

| | | |
|---|---|---|
| தே.பொ. | இரசம் | 5 கி |
| | அரிதாரம் | 5 கி |
| | கடுகு | 5 கி |
| | காயம் | 5 கி |
| | கருஞ்சீரகம் | 5 கி |
| | இந்துப்பு | 5 கி |
| | பொரிகாரம் | 5 கி |

செ.முறை இவற்றைத் தூய்மை செய்து வறுத்து அதே அளவு (35கி.) நேர்வாளமும் சேர்த்து கல்வத்திட்டு சோற்றுக்கற்றாழைச் சாறுவிட்டு அரைத்துக் கொள்ள வேண்டும்.

அளவு 100 மி. கி.

து.ம. சுக்கை அரைத்து அதனுள் மருந்தை வைத்து உண்ண வேண்டும்.

தீ.நோ. பேதியாகக் கொடுக்கவும்

பத்தியம் அதிகமானால் மோர் சாப்பிடவும். சரியாகப் பேதியாகாவிட்டால் வெந்நீர் அருந்தவும்.

## இரசக்குளிகை - முறை-2

| | | |
|---|---|---|
| தே.பொ. | இரசம் | 10 கி |
| | அரிதாரம் | 10 கி |
| | வெங்காரம் | 10 கி |
| | இந்துப்பு | 10 கி |
| | காயம் | 10 கி |
| | சுக்கு | 10 கி |
| | மிளகு | 10 கி |
| | ஈருள்ளி | 10 கி |
| | சீந்தில் வித்து | 10 கி |

| | |
|---|---|
| | அழிஞ்சில்வித்து 10 கி |
| | மகிளம்வித்து 10 கி |

செ.முறை இவற்றைப் பேய்ப்பீர்க்கன் இலைச்சாற்றில் மூன்று நாட்கள் அரைத்து கயிறு போல் திரித்து நிழலிலுர்த்தி காயவைத்து எடுத்து பத்திரப்படுத்திக் கொள்ள வேண்டும்.

அளவு கண்ணில் ஓரிரு துளிகள் இட வேண்டும்.

து.ம. நீரில் உறைத்துவிட வேண்டும்.

தீ.நோ. விடந்தீரும்

## குடோரி குளிகை

| | | |
|---|---|---|
| தே.பொ. | இரசம் | 35 கி |
| | பங்கம்பாளை வேர் | 70 கி |
| | வெள்ளை நொச்சியிலை | 70 கி |
| | தும்பையிலை | 70 கி |
| | துளசி | 70 கி |

செ.முறை இவ்வைந்தையும் கல்வத்தில் இட்டு வெற்றிலைச் சாற்றில் அரைத்து உருண்டை செய்து மிளகுபோல் குளிகை செய்து கொள்ள வேண்டும்.

அளவு ஒரு குளிகை

து.ம. தேன், நெய்

தீ.நோ. இருமல், ஈளை, சுரம், மேக நோய் தீரும்

## சுந்தரி குளிகை - முறை 1

தே.பொ. சுந்தரி 1 (மூஞ்சுறு)

செ.முறை சுந்தரியின் வாய் பிளந்து வயிறு நிறைய மிளகிட்டு வாயினைத் தைத்து தலைகீழாய் எட்டுநாள் தொங்க விட வேண்டும். நன்றாகக் காய்ந்த பின்னர் காடி விட்டு மைபோலாட்டி கண்ணிற்கிடும் திரட்டு மாத்திரைகளாகச் செய்து

நிழலில் காயவைத்து சிமிளில் அடைத்துச் கொள்ள வேண்டும்.

குறிப்பு:- உறைத்து கண்ணிலிட விடக்சுடிகள் தீரும். இஃது ஆராய்ச்சிக்குரியது.

## முஞ்சுறு குளிகை - முறை 2

தே.பொ. சுந்தரி 1 (முஞ்சுறு)

செ.முறை சுந்தரியின் வாயைப் பிளந்து வயிறு நிறைய மிளகிட்டு தலைகீழாய்த் தூக்கி எட்டுநாள் உலர்ந்தபின் காடிவிட்டு மைபோலாட்டிக் கொள்ளவேண்டும். பின்னர் நிழலில் உலர்த்தி சிமிளில் அடைத்துக்கொள்ள வேண்டும்.

அளவு ஓரிரு துளிகள் கண்ணிலிடவும்

து.ம. தண்ணீரில் உறைத்து கண்ணிலிடவேண்டும்.

தீ.நோ. விடமயக்கம், விடக்சுடி தீரும்.

# உருண்டை

## சீரக உருண்டை

தே.பொ. சீரகம் 250 கி
அயப்பொடி 50 கி

செ.முறை சீரகத்தை எலுமிச்சஞ்சாற்றில் ஊறப்போட்டு நிழலில் உலர்த்த வேண்டும். இவ்வாறு மூன்று முறை செய்ய வேண்டும். அயப்பொடி 50 கிராம் எடுத்து எலுமிச்சஞ்சாற்றில் ஊறப்போட்டு காயவைத்து கழுவவேண்டும். இவ்வாறு மூன்று முறை செய்ய வேண்டும். இரண்டையும் கல்வத்திட்டு பழச்சாற்றில் மூன்று நாள் மைபோல் ஆட்டிக் கொள்ள வேண்டும். 1/2 கி. அளவுள்ள குளிகைகளாகச் செய்து கொள்ள வேண்டும்.

அளவு 1 மாத்திரை, காலை மட்டும், 40 நாள்

| | |
|---|---|
| தீ.நோ. | பித்தம், உடல் சூடு தீரும். இரத்தவிருத்தியும், தாது விருத்தியும் உண்டாகும். |

## வீரஉருண்டை

| | | |
|---|---|---|
| தே.பொ. | வீரம் | 10 கி |
| | மிளகு | 20 கி |
| | திப்பிலி | 20 கி |

செ.முறை இச்சரக்குகளைப் பொடுதலைச் சாறுவிட்டு ஒரு நாள் நன்கு அரைத்து மறுநாள் காய்ந்தபின் துளித்துளியாகத் தேன்விட்டு மெழுகுபோல் அரைத்துவைத்துக் கொள்ள வேண்டும். 50-100 மி.கி. அளவுள்ள மாத்திரைகளாகச் செய்து கொள்ளவேண்டும்.

அளவு 1 மாத்திரை; காலை, மாலை, 3 நாள்; 6 வேளை கொடுக்கவும்.

தீ.நோ. குன்மம், வயிற்றுவலி, சுரம், வாய்வு

பத்தியம் மீன், கருவாடு, பழைய சோறு, புளி, நல்லெண்ணெய் ஆகாது.

## சாதிக்காய் உருண்டை

| | | |
|---|---|---|
| தே.பொ. | சாதிக்காய், கடுக்காய் | சமஎடை |
| | நெய் | - தேவையான அளவு |

செ.முறை இரண்டையும் சமபாகமாக எடுத்துக் கொண்டு தனித்தனியே அரைத்துக் கொள்ள வேண்டும். அதில் பாதியை எடுத்து கரண்டியில் போட்டு நெய்யூற்றி அனலில் காட்டவேண்டும். பக்குவத்தில் இறக்கிக் கொண்டு அதில் பாதி தூளையும் போட்டு உருண்டை செய்து கொள்ள வேண்டும். உருண்டைகளை 12 சம உருண்டைகளாகச் செய்து கொள்ள வேண்டும்.

| | |
|---|---|
| அளவு | காலை, மாலை இருவேளை; 6 நாட்கள் |
| தீ.நோ. | சீதம், ரத்தப்போக்கு |
| பத்தியம் | பழைய சாதம், மோர். தயிர் சாதம் சாப்பிடவும் அரோரூட் மாவு கஞ்சி, இளநீர் கொடுக்கவும். |

## அடைக்கலக்குருவி உருண்டை

| | | |
|---|---|---|
| தே.பொ. | அடைக்கலக் குருவி | 4 |
| | சாதிக்காய் | 4 |
| | அபின் | 200 மி.கி. |
| | சிராம்பு | 28 |
| | நெய் | 50 கி. |
| | தேன் | 50 கி. |

செ.முறை அடைக்கலக் குருவியினை அறுத்து இரத்தத்தைப் பிடித்து கொண்டு தோல், குடல் போக்கி சுத்தம் செய்து கொள்ள வேண்டும். சாதிக்காயைக் குடைந்து 50 மி.கி. அபினை உள்ளே வைத்து ஒரு காய்க்கு ஒரு குருவி ரத்தம்விட்டு சாதிக்காய்த் தூளால் மூடி ஒவ்வொரு குருவிக்கும் ஒவ்வொரு சாதிக்காயை வயிற்றில் தைத்துக்கொள்ள வேண்டும். ஒவ்வொரு குருவிக்கும் 7 சிராம்பு வீதம் உள்வைத்துத் தைத்துக்கொள்ளவும். நெய்யூற்றி சிவக்க வறுத்தெடுத்து மைய அரைத்துக்கொள்ள வேண்டும். அதனைச் சுண்டைக்காய் அளவு உருண்டை செய்து கொள்ள . வேண்டும்.

| | |
|---|---|
| அளவு | சுண்டைக்காயளவு; இருவேளை 45 நாட்கள் |
| து.ம. | பால் |
| தீ.நோ. | தாது விருத்தியடையும் |

# மெழுகு

அரைப்பு மெழுகு, சுருக்கு மெழுகு என இரண்டு வகைப்படும்.

## அரைப்பு மெழுகு

இரசக் கலப்புள்ள சரக்குகளைத் தனித்தாவது அவற்றுடன் சில கடைச் சரக்குகளைச் சேர்த்தாவது உப்புக்களைத் தனித்தாவது அவற்றுடன் கடைச்சரக்குகளைச் சேர்த்தாவது சாறுகள் அல்லது தேனால் அரைத்து மெழுகு பக்குவ்மாகச் செய்து கொள்வது.

## சுருக்கு மெழுகு

இரச சரக்குகளை அல்லது பாடாணங்களை பல மூலிகைகளின் சாற்றாலாவது சில நெய்ப்பசையுள்ள தைலங்களிலாவது சுருக்குக் கொடுத்து இவை இளகி மெழுகு பதமாகும் போது எடுத்துக் குழிக்கல்லிலிட்டுப் பக்குவமாக அரைத்து எடுத்துக் கொள்வது.

## அண்ட மெழுகு

| | | |
|---|---|---|
| தே.பொ. | தென்னங்கள் | 2 லி. |
| | கோழி முட்டை | தேவைக்கேற்ப |
| | துத்தம் | 5 கி |
| | துத்த நாகம் | 5 கி |
| | துரிசு (வெள்ளை) | 5 கி |
| | கெந்தகம் | 5 கி |
| | இரசம் | 5 கி |
| | அரிதாரம் | 5 கி |
| | வீரம் | 5 கி |
| | பாடாணம் | 5 கி |

செ.முறை துத்தம் தொடங்கி பாடாணம் முடிய சொல்லப்பட்டவற்றை தென்னங்கள்ளால் அரைத்து முட்டையில் அப்பிவிட வேண்டும். எட்டு நாள் வெய்யிலில் காய வைக்க வேண்டும். அது மெழுகு நிலையாகும்.

அளவு 65 மி.கி., இருவேளை

து.ம. பனைவெல்லம்

தீ.நோ. இருபத்தோரு வகை மேகம், வாதசூலை, குட்டம்.

## வீர மெழுகு - முறை 1

தே.பொ. வீரம் 40 கி
பூரம் 20 கி
இலிங்கம் 10 கி
பூநீறு 70 கி

செ.முறை மேற்குறித்த இச்சரக்குகளைப் பொடித்துக் கொள்ள வேண்டும். முருங்கைப்பூச்சாறு 150 மிலி ஈருள்ளிச்சாறு 150 மிலி எடுத்து இவற்றை அடுப்பேற்றி வற்றக் காய்ச்ச வேண்டும். பின்னர் அம்மருந்துப் பொடிகளைத் தூவிக் கிண்ட வேண்டும். துளித்துளியாகத் தேன்விட்டுக் கிண்டி மெழுகு பதமாக இறக்கிக் கொள்ள வேண்டும்.

அளவு 65 மி.கி. இருவேளை

து.ம. குன்மம் - இஞ்சிச் சாறு 300 மிலி
பித்தபாண்டு - கொத்துமல்லிக் குடிநீர்
சுரம் - சளி - தேன்

தீ.நோ. குன்மம், மகோதரம், சுரம்

பத்தியம் உப்பு, புளி, மீன், கருவாடு ஆகாது.

## வீர மெழுகு - முறை 2

தே.பொ. வெடியுப்பு 35 கி
கல்லுப்பு 35 கி
பூநீறு 35 கி

செ.முறை வெடியுப்பை உருக்கிக் கொண்டு தண்ணீராய் உருகும் நிலை வந்த பின்னர் சிப்பித் தண்ணீர் சிறுதுசிறிதாக ஊற்றிக் கொண்டிருக்க வேண்டும். நீர் வெண்மை நிறமாக மாறும்போது அதைப்

பீங்கானில் இட்டு வெயிலில் காய வைக்க வேண்டும். மற்றொரு பீங்கானில் கல்லுப்பு, பூநீறு இரண்டையும் சிப்பி நீரில் கரைத்து தெளிவிறுத்துக் கொள்ள வேண்டும். இந்தத் தெளிவு நீரை வெடியுப்பில் ஊற்றி ஊற்றி பத்து முறை வைக்க வேண்டும். பின்னர் கோழிமுட்டை வெண்கருவை அரைத்து நவச்சாரத்திற்குக் கவசம் செய்து எருவில் புடம் போடவும். சாரம் கட்டிபோலாகும். இதனுடன் சம எடை பச்சைச் சாரம் சேர்த்து அரைத்துப் பீங்கானில் வைத்து, பீங்கானைப் பனியில் சாய்த்து வைக்கவும். செயநீர் இறங்கும். அந்தச் செயநீரில் வீரத்தைத் தோய்த்து சூடனில் வாட்டினால் மெழுகுமாகும். அதை வெள்ளியில் பித்தளையில் கொடுக்க வயது பத்தாகும். இது வாத வேலைக்கு உதவும்.

அளவு 5 முதல் 10 மி. கி.

து.ம. பனை வெல்லம்

தீ.நோ. வாத நோய், மேக நோய்கள்

பத்தியம் பாலும் சோறும்

## துருசு மெழுகு

தே.பொ. துருசு 10 கி
பேய்க்கும்மட்டிக் காய் 1

செ.முறை துருசைப் பேய்க்கும்மட்டிக் காய்க்குள் வைத்து மாட்டுக் கொட்டகை ஈரத்தில் ஏழுநாள் புதைத்து வைக்க வேண்டும். அதை எட்டாம் நாள் எடுத்து வாயகன்ற கண்ணாடிப் புட்டியில் போட்டு கழுதை நீர்விட்டு மூடி காற்றுப் புகாவிடத்தில் வைக்கவும். 20 நாட்கள் கழித்துப் பார்த்தால் மெழுகாக இருக்கும்.

து.ம. வெள்வங்கம்

தீ.நோ. நீர்வாங்கும்

குறிப்பு:- வெள்வங்கத்தை உருக்கி இலுப்பை எண்ணயில் மூன்று முறை தூய்மை செய்து வங்கம் 8 பங்குக்கு மெழுகு 1 பங்கு கொடுக்க வேண்டும்.

## பெருமருந்து (ஈசுரமூலி) வேர் மெழுகு

தே.பொ. இந்துப்பு
ஓமம்
பெருங்காயம்
பெருமருந்து வேர்
(ஈசுரமூலி)
} சமஎடை

செ.முறை இவற்றைச் சமஎடையாகக் கொண்டு அரைத்து, பெரிய ஈக்குத் துண்டைத் தோல் சீவி அதன்மீது மருந்தைத் தடவி நிழலில் காயவைத்துக் கொள்ளவேண்டும். அடுப்பில் போட்டு சுட்டெடுத்து அரைத்துக் கொள்ள வேண்டும்.

அளவு 3 முதல் 5 கி; 3 முதல் 7 நாட்களுக்குச் சாப்பிடவும்.

து.ம. மோர்

தீ.நோ. மூலக்கடுப்பு, வயிற்றுக் கடுப்பு, கிராணி.

## வாள மெழுகு

| | | |
|---|---|---|
| தே.பொ. | மிளகு | 100 கி |
| | நெய் | 100 கி |
| | விளக்கெண்ணெய் | 100 கி |
| | வாளம் | 6 கி |

செ.முறை கொடிக்கள்ளியின் அடி மரத்தினைக் கொத்தி அதிலிருந்து வருகின்ற பாலில் மிளகை 3 நாள் ஊற வைத்து நிழலில் உலர்த்தி எடுத்துப் பொடித்துக் கொள்ள வேண்டும். ஒரு துணியில் மேற்கூறிய பொடியை உள்ளே வைத்துத் திரியாகத் திரித்து கம்பியில் செருகிக் கொள்க. நெய்யிலும் விளக்கெண்ணெயிலும் அத்திரியைத் தோய்த்து

எரித்து சுடர்த் தைலம் இறக்கிக் கொள்ளவும். அதில் சுத்தி செய்த 6 கி வாளத்தையும் சேர்த்து அரைத்து சிமிளில் வைக்கவும்.

அளவு — கடலை அளவு.

து.ம. — சுக்கு

தீ.நோ. — சன்னி, சுரம், பயித்தியம், பிரசவ வலி

குறிப்பு:- பேதி அதிகமானால் மோர் தரலாம்.

## அபின் மெழுகு

தே.பொ. — புளித்த மாதுளம்பிஞ்சு - 1
அபின் (குன்றிமணியளவு) - 130 மி.கி.

செ.முறை — மாதுளம் பிஞ்சைக் குடைந்து குண்டுமணி அளவு அபினை உள்ளே வைத்துக் கவசம் செய்து அனலில் வாட்டி வெந்தபிறகு எடுத்து எருமைத் தயிர் விட்டு அரைத்து எடுத்துக் கொள்ள வேண்டும்.

அளவு — மூன்று நாள்

து.ம. — எருமைத் தயிரில் குழப்பிக் கொடுக்கவும்.

தீ.நோ. — மூலக்கிராணி, இரத்தக்கிராணி.

# குழம்பு

சாறு அல்லது சாறுகளைக் கலந்து அதைச் சட்டியிலிட்டு சர்க்கரையைக் கூட்டிச் சில சரக்குகளைப் பொடி செய்து சேர்த்து அடுப்பிலிட்டுக் குழம்புப் பக்குவத்தில் காய்ச்சி எடுத்துக்கொள்வது.

## வெள்ளரிவிதைக் குழம்பு

தே.பொ. — வெள்ளரி விதை-தேவையான அளவு

செ.முறை — வெள்ளரி விதைகளில் சுத்தமானதாக எடுத்து நன்றாக அரைத்துக் கொள்ள வேண்டும்.

| | |
|---|---|
| | வெள்ளரிக்காயை இடித்துச் சாறுபிழிந்து இரண்டையும் சேர்த்துக் குழம்பாக்கிக் கொள்ள வேண்டும். |
| அளவு | நோய்க்கேற்ப; குடித்தவுடன் பேதியாகும். அதிகமானால் மோர் குடிக்கவும். |
| தீ.நோ. | நீரடைப்பு; கல்லடைப்புக்கு வழங்கலாம். |

## கண்டங்கத்திரிக் குழம்பு

| | | |
|---|---|---|
| தே.பொ. | கண்டங்கத்திரி விதை | 35 கி |
| | சித்தரத்தை | 9 கி |
| | சுக்கு | 9 கி |

| | |
|---|---|
| செ.முறை | இம்மூன்றையும் அரைத்து எடுத்துக் கொள்ள வேண்டும். |
| அளவு | 2-3 கி. காலை, மாலை 6 வேளை |
| து.ம. | தேன் |
| தீ.நோ. | இருமல் |
| பத்தியம் | இச்சாபத்தியம் (போகம் ஆகாது) |

## எருக்கங் குழம்பு

| | |
|---|---|
| தே.பொ. | எருக்கம் பூவின் இதழ்கள்<br>மிளகு |
| செ.முறை | எருக்கம் பூ, மிளகு இரண்டையும் அரைத்து எடுத்துக் கொள்ள வேண்டும். அதனைப் பசும்பாலில் குழப்பி கொடுக்கவும். |
| அளவு | 3 வேளை (மருந்தை மூன்று சமபாகங்களாகப் பிரித்துக் கொள்ள வேண்டும்.) |
| து.ம. | பசும்பால் |
| தீ.நோ. | நாட்பட்ட சுரம் |
| பத்தியம் | போகமாகாது. |

## விடக் குழம்பு

| | |
|---|---|
| தே.பொ. | குப்பைமேனி இலை<br>எருக்கிலை<br>தும்பை இலை |
| செ.முறை | மூன்றினையும் நன்றாக அரைத்துக் கொள்ள வேண்டும். |
| அளவு | 5 கிராம்; விடத்தன்மை அதிகமாக இருந்தால் வெந்நீரில் குழப்பி மூன்றுமுறை .கொடுக்கவும். |
| தீ.நோ. | விடக்கடியின் விடத்தன்மை போக்கும் |
| பத்தியம் | ஏழுநாள் கடும்பத்தியம், பச்சரிசிக்கஞ்சியை உப்பில்லாமல் கொடுக்கவும். |

## கும்மட்டிக் குழம்பு

| | | |
|---|---|---|
| தே.பொ. | பெருங்கும்மட்டி வேர் | 4 கி |
| | அவுரி வேர் | 4 கி |
| | சிறியாணங்கை வேர் | 4 கி |
| | பூளை வேர் | 4 கி |
| செ.முறை | இவற்றை வெந்நீர் விட்டரைத்து குழப்பி எடுத்துக் கொள்ள வேண்டும். | |
| அளவு | விடத்தின் தன்மைக்கேற்ப | |
| தீ.நோ. | விடங்கள் | |
| பத்தியம் | மூன்று நாட்களுக்குப் பின்னர் கோழிக்கறி உண்ணவேண்டும். விடத்தின் அறிகுறி தென்பட்டால் மீண்டும் முன் மருந்தை உண்ணவும். | |

## சந்தனக் குழம்பு

| | | |
|---|---|---|
| தே.பொ. | சந்தனம் | 4 கி |
| | தேற்றான் கொட்டை | 4 கி |
| | பூமி சர்க்கரைக் கிழங்கு | 4 கி |

| | | |
|---|---|---|
| | பூனைக்காலி வித்து | 4 கி |
| | முருங்கைவேர்ப் பட்டை | 4 கி |

செ.முறை இவற்றைத் தேங்காய்ப் பாலில் மை போல் அரைத்து எடுத்துக் கொள்ள வேண்டும்.

அளவு 12 நாள், தினம் ஒரு வேளை

து.ம. சர்க்கரை

தீ.நோ. தாது விருத்தியடையும்

## கூருங்குழம்பு

| | | |
|---|---|---|
| தே.பொ. | வீரம் | 4 கி |
| | நவச்சாரம் | 40 கி |
| | வெங்காயம் | 40 கி |
| | சீனக்காரம் | 40 கி |
| | வெடியுப்பு | 40 கி |
| | அடுப்புக்கரி | 40 கி |

செ.முறை இவற்றைச் சேர்த்து கல்வத்தில் இட்டு நன்றாக அரைத்துக் கொள்ள வேண்டும்.

அளவு தூதுவளை காயளவு, காலை, மாலை 5 நாட்கள்

து.ம. திரிகடுகுச் சூரணம்

தீ.நோ. மகோதரம்

பத்தியம் புளி நீக்கவும்

குறிப்பு:- திரிகடுகுச் சூரணத்தில் தூதுவளங்காயளவு உருண்டையை எடுத்து புரட்டி உண்ண வேண்டும். அதன்மேல் மோர் குடிக்கவும், வாந்தியும் பேதியும் உண்டாகும்.

## சீரகக் குழம்பு

| | | |
|---|---|---|
| தே.பொ. | எருமைச்சாணிப் பால் | 200 மிலி |
| | தயிர் | 200 மிலி |
| | சீரகம் | 4 கி |

செ.முறை சிறிதளவு வெங்காயத்துடன் சீரகத்தை அரைத்து சாணிப்பால், தயிர் இவற்றுடன் கூட்டிக் கலக்கிக் கொள்ளவும்.

அளவு மூன்று நாள்; காலை மட்டும்

தீ.நோ. காமாலை

பத்தியம் போகமாகாது.

# செந்தூரம்

உலோகங்கள் அல்லது பாடாணங்களை இலைச்சாறு, உப்புப்புகைநீர், செயநீர் இவற்றில் ஏதேனுமொன்றால் அரைத்துப் புடமிட்டாவது, எரித்தாவது, வறுத்தாவது, அரைத்து வெயிலில் வைத்தாவது சிவக்கும்படி செய்து எடுத்துக் கொள்வது.

## ஐந்துப்புச் செந்தூரம்

தே.பொ.
- இந்துப்பு
- கல்லுப்பு
- கறியப்பு
- வெடியுப்பு
- வளையலுப்பு

} சமஎடை

செ.முறை ஐந்தையும் சமனாய் எடுத்து ஆகாசத் தாமரையின் சாற்றில் அரைத்து வில்லை தட்டி வெயிலில் காயவைக்கவேண்டும். ஓட்டில் வைத்து மேலோடு மூடி சீலை மண்செய்து பத்து வரட்டிகள் புடம் போடவேண்டும். இவ்வாறு 5 முறை புடம் போடவும்.

அளவு 65-130 மி.கி. இருவேளை

து.ம. சுக்குக் குடிநீர்

தீ.நோ. குன்மம்

## இரச செந்தூரம் முறை - 1

| | | |
|---|---|---|
| தே.பொ. | இரசம் | 35 கிராம் |
| | கெந்தகம் | 4 கிராம் |

செ.முறை இவ்விரண்டையும் சிற்றாமணக்கெண்ணெய் (2 அல்லது 3 துளி) விட்டு அரைத்தால் வெண்ணையாகும். கொடுவேலிவேர்ப் பட்டையை எலுமிச்சங்காயளவு அரைத்து கவசம் செய்து கொள்ளவும். கீழே இரண்டு விரலளவு மணல் போட்டு கவசம் வைத்து அதன்மேலே 2 விரற்கடை மணல் போட்டு 1 1/2 ஜான் வரட்டி அடுக்கி போடவும். செந்தூரம் ஆகும்.

அளவு 120 மி.கி. காலை, மாலை 10 வேளை; 5 நாட்கள்

து.ம. பனங்கருப்பட்டி

தீ.நோ. 21 வகை மேகம், சூலை

பத்தியம் புளி நீக்கவும்.

## இரச செந்தூரம் - முறை 2

| | | |
|---|---|---|
| தே.பொ. | கல்லுப்பு | 70 கி |
| | இரசம் | 140 கி |

செ.முறை இவ்விரண்டையும் கல்வத்திலிட்டு 12 மணி நேரம் அரைத்துக் கொள்ள வேண்டும். குகையில் வைத்து சீலை செய்து ஊதினால் மணியாகும். அம்மணியை எடுத்துக் கல்வத்திட்டு அந்தரத்தாமரைச் சாறுவிட்டு ஆறுமணி நேரம் அரைத்துக் கொள்ள வேண்டும். வில்லை தட்டி மேலகீழ் சரியான மூடி வைத்து சீலை செய்து 12 எருவில் புடம் போடவும். இம்முறையில் 5 புடம் போடவும். இப்போது இது செந்தூரமாகும்.

அளவு காலை மாலை 2 வேளை; வேளைக்கு 65 மி.கி.

துமம. பசு நெய்

தீ.நோ. கும்பசூலை, வாயு

## இரச செந்தூரம் - முறை 3

தே.பொ. இரசம் 35 கி.

| | | |
|---|---|---|
| சிற்றாமணக்கெண்ணெய் | 1 | பலம் |
| சித்திர மூலவேர்ப் பட்டை | 2 | பலம் |

செ.முறை இரசத்தைச் சிற்றாமணக்கு எண்ணெயில் அரைத்தால் வெண்ணெய் ஆகும். சித்திர மூலவேர்ப்பட்டையை எலுமிச்சங்காயளவு அரைத்து வெண்ணெயின் நடுவில் வைத்து சிவப்புப் பட்டினால் மூன்று சீலை செய்து 3 எரு புடம் போடவும்.

அளவு 65 மி.கி. - இருவேளை

தீ.நோ. மேகசூலை, மேகவாயு

பத்தியம் புளி தவிர்க்கவும்

## இரச செந்தூரம் - முறை 4

தே.பொ.

| | |
|---|---|
| படிகாரம் | 35 கி |
| இரசம் | 35 கி |
| கெந்தகம் | 35 கி |

செ.முறை படிகாரத்தைத் தூளாக்கி குளிர்ச்சியாக வைத்திருக்க வேண்டும். இரசத்தை அதிலிட்டு கெந்தகத்தைத் தூளாக்கி அதன் மேலேயிட்டு மூடிவிட வேண்டும். அழுத்தி மூடியபின், மேல் சட்டி மூடி மூன்று சீலை செய்து தீபாக்கினியாக (1 விறகு) 3 மணி நேரம் எரித்த பின்னர், கமலாக்கினி (2 விறகு) யாக 3 மணி நேரம் எரித்துக் கொள்ள வேண்டும்.

அளவு 16 முதல் 32 மி.கி.

| | |
|---|---|
| து.ம. | துளசிச் சாறு, தேன், நெய், சர்க்கரை |
| தீ.நோ. | இருமல், ஈளைசுரம், மேகநோய் ஆகிய நோய்கள் தீரும் |

## இரச செந்தூரம் - முறை 5

| | |
|---|---|
| தே.பொ. | இரசம். |
| செ.முறை | இரசத்திற்கு வெள்ளறுகுச் சாறுவிட்டு முப்புவையும் கூடச் சேர்த்து அரைக்க வேண்டும். பச்சை பனையோலைக்கு நடுவில் வைத்து இருபுறமும் நறுக்கி பத்து ஓலையை இருபுறமும் அடுக்கிக் கட்ட வேண்டும். காட்டு எருவினை எரித்து புகைச்சல் நின்றபிறகு பிரித்து நடுவில் வைத்து மூடினால் செந்தூரமாகும். |
| அளவு | 65-130 மி. கி. |
| து.ம. | பனங்கருப்பட்டி |
| தீ.நோ. | தோல் நோய்கள், வாத நோய்கள், மேகசூலை தீரும். |

## அயச் செந்தூரம் - முறை 1

| | | |
|---|---|---|
| தே.பொ. | அயம், அரப்பொடி | 35 கி |
| | காந்தம் | 4 கி |
| | சுக்கு, மிளகு, திப்பிலி, ஓமம் (வகைக்கு) | 35 கி |

| | |
|---|---|
| செ.முறை | முன்னிரண்டையும் எலுமிச்சம்பழச் சாற்றில் அரைத்து பிறகு ஓதியம்பட்டைச் சாற்றில் அரைத்து கெந்தகம் 4 கி சேர்த்து அரைத்து முழப்புடம் போடவேண்டும். இப்படி 5 புடம் இரண்டிரண்டு எருவில் போடவும். சுக்கு, மிளகு, திப்பிலி, ஓமம் இவற்றைப் பொன் வறுவலாக வறுத்து, சூரணம் செய்து நெய் சேர்த்துப் பிசைந்து சுண்டைக்காயளவு சாப்பிடவும். |

அளவு 50 முதல் 150 மி. கி. இருவேளை

து.ம. தேன்

தீ.நோ. கபம், சோபை, ஈரல் நோய்கள், காமாலை, வெளுப்பு நோய் தீரும். வலிமையைக் கொடுக்கும்.

குறிப்பு:- நன்கு முடிந்த அய பற்ப செந்தூரங்களில் காந்தம் கொண்டு தேய்க்க துகள்கள் காந்தத்தில் ஒட்டாமல் உள்ளதா என கண்டறிய வேண்டும்.

## அயச் செந்தூரம் - முறை 2.

தே.பொ. அயம் 35 கி

செ.முறை கொட்டாங்கச்சியில் (தேங்காய் ஓடு) உத்தாமணிப் பாலைவிட்டு அதில் அயத்தைப் போட்டு 3 நாள் ஊற விட வேண்டும். பிறகு அந்தப் பால்விட்டு அரைத்து வில்லை செய்து 1000 வரட்டியில் புடம் போடவும், அயம் செந்தூரமாகும்.

அளவு 50-150 மி.கி. இருவேளை

து.ம. தேன்

பத்தியம் சோபை, காமாலை, பாண்டு, வெளுப்பு நோய், ஈரல் நோய்கள் தீரும்.

## அயச் செந்தூரம் - முறை 3

தே.பொ. அயப்பொடி 35 கிராம்
அரிதாரம் 35 கிராம்

செ.முறை முட்டையின் வெள்ளைக் கருவினால் 24 மணிநேரம் இவ்விரண்டையும் அரைக்கவும், இரஸ்தாளி வாழைக்கிழங்கு தேங்காயளவு எடுத்து அதன், நடுப்பகுதிவரை குடைந்து அதற்குள் மருந்தை வைத்து சக்கையால் மூட வேண்டும். கன்றீனாத கிடாரிப் பசுவின் சாணம் அரை விரற்கடையளவு கவசம் செய்து 100 வரட்டி வைத்து புடம் போட்டால் செந்தூரமாகும்.

அளவு 50-150 மி.கி. காலை, மாலை; 3 நாள் ஆறு பொழுது அல்லது 5 நாள் 10 பொழுது

து.ம. நெய், பனங்கருப்பட்டி

தீ.நோ. உதிரநோய், குன்மம், வயிறு உப்பிசம் சம்பந்தப்பட்ட நோய்கள்

பத்தியம் புளி தவிர்க்கவும்

குறிப்பு:- உதிர நோய்க்கு நெய் சேர்த்து உண்ணலாம். குன்மத்திற்குக் கொடிவேலி வேர்ப்பட்டை சுண்டைக்காயளவு அரைத்து அதில் 5 கிராம் வைத்து 6 பொழுது கொடுக்கவும். பனங்கருப்பட்டியில் காலை, மாலை 10 வேளை கொடுக்கவும்.

## ஆறுமுகச் செந்தூரம்

தே.பொ.
இலிங்கம் 8 கி
தாளகம் 4 கி
கெந்தகம் 4 கி
வீரம் 4 கி
பாடாணம் 4 கி
வெடியுப்பு 4 கி

செ.முறை கீழாநெல்லி இலை, இலந்தை இலை இரண்டையும் எலுமிச்சங்காயளவு, அரைத்துக் கொள்ள வேண்டும். பின்னர் அதில் எலுமிச்சம்பழச் சாறு விட்டு அரைத்துக் கொண்டு, பின் முட்டையும் இட்டு மேற்குறிப்பிட்ட இலிங்கம் தவிர மற்ற ஐந்து மருந்துச்சரக்குகளையும் கல்வத்திட்டு அரைத்துக் கொள்ள வேண்டும். கலயத்தில் இம்மருந்தில் பாதியைப் போட்டு 8 கிராம் லிங்கத்தை நடுவே வைத்து மீதி மருந்தை இலிங்கத்தின் மேலே வைத்து மேல்மூடி, சீலை செய்து மூன்று வரட்டியில் புடமிட்டால் செந்தூரமாகும்.

அளவு 50 முதல் 100 மி.கி; இருவேளை

| | |
|---|---|
| து.ம. | தேன், பனை வெல்லம் |
| தீ.நோ | வாத நோய்கள் அனைத்தும் தீரும். |
| பத்தியம் | வாயுப் பொருள் நீக்கவும். |

## உலோகச் செந்தூரம்

| | |
|---|---|
| தே.பொ. | அயக்கிட்டம் |
| செ.முறை | அயக்கிட்டத்தைக் கொண்டு வந்து உலையில் பழுக்கக் காயவைத்து, பசுநீர் மூன்றுதரம் தோய்த்து அதன் பிறகு கல்வத்திட்டு பொடித்து பசுநீர் விட்டு அரைத்து ஒரு புடம் போடவும். இது ஒரு பங்கும் அரைப்பொடி ஒரு பங்கும் சேர்த்து கரிசாலைச் சாறுவிட்டரைத்து பத்துமுறை புடமிடவும். பின்னர் இது 2 பங்கும் ஊசிக்காந்தம் ஒரு பங்கும் சேர்த்துப் புடம் போடவும். பின்னர் இது 5 பங்கும் ஊசிக்காந்தம் ஒன்றும் சேர்த்து கற்றாழைச்சாறு விட்டு 10 நாழிகை அரைத்து வில்லை செய்து மூன்றுபுடம் போடவும். ஊசிமல்லிகை, பொடுதலை, எலுமிச்சம்பழச்சாறு இம்மூன்றுக்கும் மூன்று புடம் போடவும். மறுபடி எடுத்து கரிசாலை, பொன்னாங்கண்ணிச் சாறு விட்டு மூன்று புடம் போடவும். இது கிராம் 40 க்கு அரைத்த கெந்தி 3 கிராம் சேர்த்து புடம் போடவும். |
| அளவு | 50-150 மி.கி., இருவேளை |
| து.ம. | தேன், கரிசாலைச்சாறு |
| தீ.நோ. | பித்த வெட்டை, காமாலை, பித்த விக்கல் நீங்கும். |
| பத்தியம் | உப்பு, புளி, ஆகாது. |

## வெடியுப்புச் செந்தூரம்

| | | |
|---|---|---|
| தே.பொ. | சீனக்காரம் | 35 கிராம் |
| | வெடியுப்பு | 250 கிராம் |

| | | |
|---|---|---|
| குப்பைமேனிச்சாறு<br>உத்தாமணிச் சாறு | } | தேவையான அளவு |

செ.முறை குப்பைமேனிச்சாறு எடுத்து 5 நாள் சூரிய புடமிட வேண்டும். பின்னர் மேல் மூடி வைத்து மூடி கொல்லன் உலையில் வைத்து ஊத வேண்டும். வெளுத்தவுடன் எடுத்துக் கொள்ளலாம். உத்தாமணிச்சாற்றில் சீனக்காரத்தைக் கரைத்து வெடியுப்பையும் தேவையான அளவு போட்டு 8 நாள் சூரிய புடமிடவேண்டும் பின்னர் உத்தாமணி இலையை அரைத்து ஒரு கலயத்தில் பாதி போட்டு வெடியுப்பை அதன்மேல் வைத்து அதன்மேல் உத்தாமணி இலை வைத்து சீலை செய்து முன்பு போல் 10 வரட்டியில் புடம் போடவும். செந்தூரமாகும்.

அளவு 50-150 மி.கி. இருவேளை,

து.ம. சுக்கு, பனை வெல்லம்

தீ.நோ. வயிற்றுவலி, வயிற்றுப்பிசம், பொருமல்.

## அப்பிரகச் செந்தூரம்

தே.பொ. கிருட்டிண அப்பிரகம்

செ.முறை இதனைப் புகையிலைச் சாற்றில் மூன்று மணி நேரம் அரைத்து கவசம் செய்து 50 எருவில் புடம் போடவும். இப்படி 3 புடம் போட செந்தூரமாகும்.

அளவு 100 மிகி, 10 நாள்; காலை மாலை

து.ம. புற்றுச்சோறு 250 கி, குரோசாணி ஓமம் 60 கி இரண்டையும் இடித்து வடிகட்டி நெய்யூற்றி லேகியம் செய்து 5 கிராம் எடுத்து, அதில் 100 மிகி. செந்தூரம் வைத்துச் சாப்பிடவும்.

தீ.நோ. மது மேகம் என்ற நீரிழிவு நோய் தீரும்.

பத்தியம் போகமாகாது.

## பூரச்செந்தூரம்

| | | | |
|---|---|---|---|
| தே.பொ. | பூரம் | 10 | கி |
| | லிங்கம் | 8 | கி |
| | வீரம் | 2 | கி |
| | கெந்தி | 2 | கி |
| | இரசசெந்தூரம் | 2 | கி |

செ.முறை ஆக இவ்வைந்தையும் சேர்த்தரைக்கச் செந்தூரமாகும்.

அளவு 8 முதல் 16 மிகி அளவு: தினம் 2 வேளை வீதம் 7 நாள்.

து.ம. பனை வெல்லம்

தீ.நோ. இடுப்புச்சூலை, எரிசூலை, வாத குன்மம், ஆறாத விரணம் மேக வியாதி, கீல்வாதம், சொறி சிரங்கு, தலைவலி தீரும்.

## தாளகச் செந்தூரம் - முறை 1.

தே.பொ. தாளகம் 100 கிராம், சிறு அம்மான்பச்சரிசி இலை.

செ.முறை சிறு அம்மான் பச்சரிசி இலையை இடித்துச் சாறு பிழிந்து ஒரு மண்கலயத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். தாளகத்தை 'உள்ளே போட்டு வாய்மூடி சீலை செய்து முழப்புடம் போட்டு எடுக்க, உருகிச் செந்தூரமாகும்.

அளவு 60 மிகி; காலை, மாலை 10 நாட்கள்

தீ.நோ சிரந்தி, சூலைக்கட்டு, சுரம்

பத்தியம் உப்பு, புளி, புகை ஆகாது.

## தாளகச் செந்தூரம்- முறை 2

தே.பொ. தாளகம் 250 கி

செ.முறை தாளகத்தை மண் குடத்தில் போட்டு வாழைத்தண்டு இடித்த சாற்றை முக்கால் மண்குடம் அளவு ஊற்றிக் கொள்ள வேண்டும். நீர் வற்றும் வரை அடுப்பேற்றி கொதிக்க வைத்தால் தாளகம் செந்தூரமாகும்.

அளவு. 30-60 மி.கி; 3 முதல் 7 நாட்கள் கொடுக்கவும்

து.ம. தேன்

தீ.நோ. அனைத்து சுரங்கள், சளி, சுவாசகாசம் தீரும்

பத்தியம். புளி, புகை ஆகாது.

## தாளகச் செந்தூரம் - முறை 3

தே.பொ. தாளகம் 10 கி

செ.முறை குன்றிமணி இலையை அரைத்துக் கவசம் செய்து சிறிய மட்கலயத்தில் போட்டு தாளகத்தை வைத்து அதன் மேலும் கீழும் குன்றிமணி இலையை அரைத்து வைத்துக் கொள்ள வேண்டும். சில்லு மூடி சீலைமண் செய்து 4 எருவில் புடம் போடவும். தாளகம் இப்போது செந்தூரமாக மாறியிருக்கும்.

அளவு 16 முதல் 32 மி.கி.

து.ம. தேன், இஞ்சிச்சாறு, திரிகடுகுக் குடிநீர், துளசிச்சாற்றில் கொடுக்கவும்.

தீ.நோ. சுவாசகாசம், ஈளை, சுரம், இளைப்பு, இருமல்

பத்தியம் கபத்தை அதிகரிக்கும் பொருள்களை நீக்கவும். சுரத்திற்கு வழங்கும்போது கஞ்சி, ரொட்டி, பால் கொடுக்கவும்.

## வங்கச் செந்தூரம்

| | | | |
|---|---|---|---|
| தே.பொ. | வங்கம் | - | 35கி |
| | மாம்பால் | - | தேவையான அளவு |

செ.முறை வங்கத்தைத் தகடாகச் செய்து சிறிய சிறிய துண்டுகளாக்கி மாம்பாலில் ஒரு நாள் ஊறப்போட வேண்டும். மறுநாள் அதே பாலில் அரைத்து வில்லை செய்து காயவைத்துக் கொள்ளவும். சீலை செய்து 750 வரட்டியில் புடம் போட்டால் வங்கம் செந்தூரமாகும்.

அளவு. 50 முதல் 100 மி.கி

து.ம. சர்க்கரை, பசுநெய், வெந்நீர்

தீ.நோ. 21 வகை மேகம், சுரப்பிணிகள், குன்மம் கிரந்தி தீரும்.

## துருசுச் செந்தூரம்

தே.பொ. துருசு 40- கிராம்

செ.முறை நல்லெண்ணெயில் ஒரு முழத் துணியை நனைத்து துருசின்மேல் சுற்றி மேலும் ஒரு துணி நனைத்து அவ்வாறு தேங்காயளவு சுற்றி தீக்கொளுத்தினால் செந்தூரமாகும்.

அளவு. 65மி.கி

து.ம. தேன், வெண்ணெய், நெய், சர்க்கரை, பனைவெல்லம், திரிகடுகுத் தூள்

தீ.நோ. சுவாச நோய்கள், மூலநோய், மேகம், குட்டம், பேதி, நீரிழிவு, வயிற்றுவலி, சூலை

பத்தியம் புளி, மீன், கருவாடு, அகத்தி, பாகல், மது, புகை, போகம் நீக்க வேண்டும்.

## இலிங்கச் செந்தூரம் - முறை 1

தே.பொ. வெள்ளறுகுச் சாறு
இலிங்கக் கட்டி

செ.முறை வெள்ளறுகுச் சாற்றில் லிங்கக் கட்டியை மூன்று நாள் ஊறப்போட வேண்டும். பின்னர் வெள்ளறுகையே அரைத்துக் கவசம் செய்து, சீலை செய்து 2 எருவில் புடம் போட செந்தூரமாகும்.

அளவு. 65 மி.கி

தீ.நோ சன்னி, வாயு, இசிவு

## இலிங்கச் செந்தூரம்-முறை 2

தே.பொ. தூய்மை செய்த சாதிலிங்கம் 20 கிராம்

செ.முறை ஓரிலைத் தாமரையை அரைத்து அதன் நடுவில் சாதிலிங்கத்தை வைத்து மூன்று சீலைமண் செய்து கொள்ள வேண்டும். அது உலர்ந்த பின்னர் அதனை எடுத்து பதினொரு வரட்டியில் புடமிட்டால் செந்தூரமாகும்.

மேற்கூறிய இலிங்கச் செந்தூரத்திற்குரிய அளவும் தீரும் நோயும் இதற்கும் பொருந்தும்.

## இலிங்கச் செந்தூரம் - முறை 3

தே.பொ. இலிங்கம் 10 கி

செ.முறை நிலப்பனங்கிழங்கு நாரத்தங்காயளவு அரைத்துக் கவசம் செய்து சீலை செய்து பத்து எருவில் புடம் போடவும். இப்படி இரண்டுமுறை புடம் போட்டால் லிங்கம் செந்தூரமாகும்.

அளவு 65 மி.கி

தீ.நோ சன்னி, வாயு, இசிவு

## இலிங்கச் செந்தூரம் - முறை 4

தே.பொ. இலிங்கம்

செ.முறை எரிச்சிப்பியின் வாயினைப் பிளந்து அதற்குள் இலிங்கத்தை வைத்து ஏழுசீலை செய்து மூன்று வரட்டியில் புடம் போட்டால் செந்தூரமாகும்.

மேற்கூறிய இலிங்கச் செந்தூரத்திற்குரிய அளவும் தீரும் நோயும் இதற்கும் பொருந்தும் (வேறுமுறை)

## இலிங்கச் செந்தூரம் - முறை 5

தே.பொ. இலிங்கம் 35 கி

செ.முறை இலிங்கத்தைக் கழுதை நீரில் போட்டு 3 மணி நேரம் எரித்து சுத்தி செய்து கொள்ள வேண்டும். பின்னர் பெரியாணங்கை இலையை அரைத்து ஒரு அங்குலம் கனத்திற்குக் கவசம் செய்து நிழலில் காயவைக்க வேண்டும். முக்கால் முழ நீளம் அகலம் உயரம் குழிவெட்டி ஆட்டெருவில் நடுவில் வைத்துப் புடம் போட்டால் செந்தூரமாகும்.

அளவு 65 மி.கி

து.ம. தேன், பசுநெய்

தீ.நோ வாயு நோய்கள்

பத்தியம் மீன், கருவாடு, கோழி தவிர்க்கவும்; போகமாகாது.

## இலிங்கச் செந்தூரம் - முறை 6

தே.பொ. இலிங்கம்

செ.முறை சதாப்பு (அறுவதா) இலைச்சாற்றில் இலிங்கத்தை மூன்றுநாள் ஊறப்போட்டு பின்னர் சதாப்பு இலையை அரைத்துக் கவசம் செய்து 10 எருவில் புடம் போட்டால் செந்தூரமாகும்.

மேற்கூறிய இலிங்கச் செந்தூரத்திற்குரிய அளவும் தீரும் நோயுமே இதற்கும் பொருந்தும்.

## இலிங்கச் செந்தூரம் - முறை 7

தே.பொ. இலிங்கம்

செ.முறை இலிங்கத்தைக் குப்பைமேனிச் சாற்றில் அரைத்து முப்புவையும் கூடச் சேர்த்து அரைத்து குப்பைமேனி இலையை அரைத்துக் கவசம் செய்து சீலை செய்து காயவைக்க செந்தூரமாகும்.

அளவு 65 மி.கி

து.ம. நெய்

தீ.நோ. சுரம், குளிர் முறைச் சுரங்கள், சன்னி தீரும்.

## இலிங்கச் செந்தூரம் - முறை 8

| | | |
|---|---|---|
| தே.பொ. | இலிங்கம் | 35 கி |
| | பால் சாம்பிராணி | 35 கி |
| | சூடன் | 35 கி |

செ.முறை கற்பூரம், சாம்பிராணி இரண்டையும் நன்றாக அரைத்து இலிங்கத்திற்குக் கவசம் செய்து ஒரு சட்டியில் வைத்துக் கொள்ள வேண்டும். நாலுவிரல் கனம் மணல் போட்டு மேலே இலிங்கக் கவசம் வைத்து மேலேயும் மணல் போட்டு மூடி கமலஅக்கினியாக (2 விறகு) 6 மணி நேரம் எரிக்கவும் இலிங்கச்செந்தூரமாகும். திரிகடுகைப் பொன்வறுவலாக வறுத்து அரைத்து செந்தூரத்துடன் சேர்த்து நன்றாக அரைத்துக் கொள்ள வேண்டும்.

அளவு 50 முதல் 100 மி.கி, தேனில் தினம் 2 வேளை உணவுக்குப் பின்னர் சாப்பிடவும்.

து.ம. தேன், இஞ்சிச் சாறு

தீ.நோ. சளி, சுரம், சன்னி தீரும்.

## அப்பிரகச் செந்தூரம்

| | | |
|---|---|---|
| தே.பொ. | அப்பிரகம் | 20 கி |
| | அரப்பொடி | 15 கி |
| | கற்பூரம் | 15 கி |

செ.முறை இம்மூன்றையும் கல்வத்திலிட்டு நெட்டியிலைச் சாற்றில் மைபோல் அரைத்து உலர்ந்தபின்பு திருநீற்றுப்பச்சிலை சாறு விட்டு 3 மணி நேரம் அரைக்க வேண்டும். அம்மியிலேயே காயவிட்டு காய்ந்த பின்னர் மாதுளை இலைச் சாற்றை விட்டு 3 மணி நேரம் அரைத்து வில்லை தட்டிக் காய வைத்து அகலிலிட்டு மேல் அகல் மூடி ஏழுசீலை செய்து 1000 வரட்டியில் புடமிட்டெடுக்கவும். மறுபடியும் கற்பூரம் 5 கிராம் போட்டு மாதுளை இலைச் சாறுவிட்டு 3 மணி நேரம் அரைத்து வில்லை தட்டி முன் போல் புடமிட்டு எடுத்துக் கொள்ளவும்.

அளவு 100-200 மி.கி, 10 முதல் 48 நாட்கள் நோயின் தன்மைக்குத் தக்கவாறு கொடுக்கவும்.

து.ம. வெண்ணெய், நெய், சீனி

தீ.நோ. மேகநீரிழிவு, நீர்க்கடுப்பு, பெரும்பாடு, வாந்தி உடம்பெரிவு, கைகால் எரிவு, பித்தவாயு, மூலக்கடுப்பு, கெற்பபிணிகள் வயிற்றிசிவு, வயிற்றுளைச்சல்.

பத்தியம் போகமாகாது

## கிருட்டிண அப்பிரகச் செந்தூரம் - முறை 1

| | | |
|---|---|---|
| தே.பொ. | அப்பிரகம் | 250 கி |
| | கறியுப்பு | 35 கி |

செ.முறை இரண்டையும் கலந்து மாதுளை இலைச்சாறு விட்டு கல்வத்தில் மை போல் அரைத்து வில்லை தட்டி காயவைக்க வேண்டும். அகலில் வைத்து

மேல் மூடி 7 சீலை மண் செய்து 1000 வரட்டியில் புடம் போடவும். அதனை எடுத்து உப்பு போடாமல் மாதுளை இலைச் சாறு விட்டு அரைத்து இரண்டு புடம் போட்டு எடுத்துக் கொள்ளவும். வில்லையைப் பொடி செய்து ஒரு பீங்கானில் போட்டு தண்ணீர் விட்டுக் கரைத்துத் தெளிவிறுத்துப் பார்த்தால் முன் சேர்த்த உப்பு கரைந்து போயிருக்கும். பின்னர் கையாந்தகரைச் சாறு விட்டரைத்து முன்போலவே மூன்று புடம் போட்டு எடுத்துக் கொள்ள வேண்டும்.

அளவு 200 மிகி வீதம் காலை, மாலை இருவேளை, நோய் தீரும் வரை

து.ம. தேன், வெண்ணெய், கற்கண்டுத்தூள், சர்க்கரை

தீ.நோ. காசம், இரத்தகாசம், இரத்த வாந்தி, வாய்வு, மேகம், அத்திசுரம், மேகசுரம், நீர்க்கடுப்பு, கைகால் எரிவு, உடம்பெரிவு.

பத்தியம் போகமாகாது

## கிருட்டிண அப்பிரகச் செந்தூரம் - முறை 2.

தே.பொ. கிருட்டிண அப்பிரகம் 70 கி

செ.முறை அரிசித்திப்பிலி இலையை நாரத்தங்காயளவு அரைத்து கவசம் செய்து ஒட்டில் வைத்து சீலை மூன்று செய்து புடம் போடவும். பின்னர் வெங்காயச் சாறுவிட்டு அரைத்து 5 புடம் போடவும். அப்பையிலைச் சாற்றில் அரைத்துக் கவசம் செய்து புடம் போடவும்; செந்தூரமாகும்.

அளவு 65 மி.கி. 5 நாள் 10 வேளை

து.ம. பசுவெண்ணெய், நெய்

தீ.நோ. மதுமேகம், நீரிழிவு, வெட்டை

| | |
|---|---|
| குறிப்பு: | புடமிட வரட்டி எண்ணிக்கை கூறப்படவில்லை எனினும் 40 வரட்டியில் புடமிட செந்தூரமாகும். |

## காளமேக நாராயணச் செந்தூரம்

| | | | | |
|---|---|---|---|---|
| தே.பொ. | இரசம் | 250 கி | இலிங்கம் | 16 கி |
| | கெந்தகம் | 63 கி | கெவுரி | 63 கி |
| | அரிதாரம் | 32 கி | இரசம் | 63 கி |
| | மனோசிலை | 16 கி | | |

செ.முறை இரசம் முதல் லிங்கம் வரை குறிப்பிட்ட இவற்றையெல்லாம் பொடி செய்து குப்பியில் இட்டு சீலை செய்து பெரிய பாத்திரத்தில் வைத்து 6 மணி நேரம் எரிக்கவும். முதலில் தீபாக்கினி (1 விறகு) பிறகு கமலாக்கினி (2 விறகு) இறுதியில் காடாக்கினியாக (5 விறகு) எரிக்க செந்தூரமாகும்.

கெவுரி, இரசம் இரண்டையும் பொடி செய்து இரண்டு படி உப்பை ஒரு சட்டியில் போட்டு, முன்னர் செய்த மருந்தையும் உப்பில் வைத்து மேல் சட்டிமூடி சீலைசெய்து கமலாக்கினி (2 விற்கு) யாகப் பதினெட்டு மணி நேரம் எரிக்கவும்; செந்தூரமாகும்.

அளவு 50 முதல் 100 மில்லி கிராம், 7 முதல் 10 நாட்கள் வரை

து.ம. தேன்

தீ.நோ. பாண்டு, சோகை, மூலவாய்வு, ஊரல், இரத்தமூலம் அக்கினிமாந்தம் இவைகள் தீரும்

## வெண்கல நிமிளைச் செந்தூரம்

| | | |
|---|---|---|
| தே.பொ. | வெண்கல நிமிளை | 88 கிராம் |
| | வீரம் | 8 கி |
| | இலிங்கம் | 8 கி |
| | கெந்தி | 16 கிராம் |

செ.முறை தேங்காயளவு மருதோன்றியிலையை அரைத்துக் கவசம் செய்து 1000 வரட்டியில் புடமிட வேண்டும். அதை எடுத்து கல்வத்திலிட்டு வீரம், லிங்கம், கெந்தி இவற்றை மாதுளம்பூ மருதோன்றி இரண்டின் சாறு விட்டு அரைத்து வில்லை தட்டி காயவைத்தெடுக்க வேண்டும். அதனை மூடி சீலை மண் 7 செய்து 10 புடமிடவும். நன்றாகச் சிவக்கவில்லையானால் மறுபடியும் முன்போல கூட்டி அரைத்துப் புடம் போட்டு எடுத்துக்கொள்ளவேண்டும்.

அளவு 200 மி.கி; அதிக அளவு தீரும் வரை

து.ம. தேன்

தீ.நோ. சுழிநோய், சுபரோகங்க்ள், இருமல்

## பற்பம்

உலோகங்கள், பாடாணங்கள் இவற்றை உபரசங்கள், சில இலைச்சாறுகள் உப்புப் புகை நீர், செயநீர் இவற்றில் ஏதேனுமொன்றினால் அரைத்துப் புடம் போட்டாவது வறுத்தல், எரித்தல், ஊதல் இவற்றில் ஏதேனுமொன்றை மேற்கொண்டாவது வெளுக்கும்படி செய்து எடுத்துக் கொள்வது.

இம்முறைக்கு நீறு, வெண்ணீறு ஆகிய பெயர்களும் உண்டு.

### தலையோட்டுப் பற்பம்

தே.பொ. தலையோடு
முழங்கால் எலும்பு
முழங்கை எலும்பு

செ.முறை மேற்கூறிய மூன்று எலும்புகளையும் தூள் செய்து மண் கலயத்தில் போட்டுக் கொள்ள வேண்டும். பசும்பாலை அத்தூளின் மேல் 1 அங்குல அளவு மிதக்கவிட்டு சீலை செய்து முழ உயரம் எரு

வைத்துப் புடமிடவும். பின்னர் எடுத்து குப்பைமேனிச் சாறு விட்டு அரைத்துச் சின்னச்சின்ன வில்லை செய்து காய வைத்து ஓட்டில் வைத்து சீலை செய்து முழப்புடம் போடவும். பற்பமாகிவிடும்.

| | |
|---|---|
| அளவு | 100-300 மி.கி. காலை மாலை ஆறு வேளை |
| து.ம. | வெண்ணெய் |
| தீ.நோ. | பைத்தியம், பிரமை, மூர்ச்சை, வலிப்பு, மயக்கம் |
| பத்தியம் | போகமாகாது |

## தாமிர பற்பம் - முறை 1

| | |
|---|---|
| தே.பொ. | தாமிரம் 35 கிராம் |
| செ.முறை | தாமிரத்தைத் தகடாகத் தட்டி பசுவின் கோமியத்தில் போட்டு 3 மணி நேரம் எரிக்க வேண்டும். பின்பு எடுத்து பீங்கானில் வைத்து எருக்கம் பாலைத் தேவையான அளவிட்டு வெயிலில் மூன்று நாள் வைக்க வேண்டும். எருக்கம்பாலையும் விட்டுக் கொண்டே வரவேண்டும். நான்காவது நாள் நொச்சி வேர், நொச்சித் தழை இவற்றை அரைத்து சரியெடையாகத் தகட்டிற்குக் கவசம் செய்து 7 சீலை செய்து 1000 வரட்டியில் புடம்போட தாமிரம் பற்பமாகும். |
| அளவு | 10 முதல் 32 மி.கி<br>தினம் இருவேளை வீதம் 7 நாட்கள் |
| து.ம. | தேன், நெய், வெண்ணெய் |
| தீ.நோ. | குட்டம், சயம் முதல் புற்றுநோய் வரை தீரும் எட்டு வகை குன்மம் தீரும். |
| பத்தியம் | இது மிகக்கொடிய வெப்ப வீரிய மருந்தாகையால் சரியான அளவுப்படி கொடுத்து புளிப்புச்சுவையை முற்றாக நீக்கவும். |

## தாமிர பற்பம் முறை 2

தே.பொ. வெள்வங்கத் தகடு (மிக மெல்லியது) 16 கி
தாமிரம் 10 கி
நேர்வாளப் பருப்பு 35 கி.

செ.முறை. தாமிரத்தைக் கழுதை நீரில் 11 முறை காய்ச்சித் தோய்த்து நேர்வாளத்தை அரைத்து கவசம் செய்து அதன் மேலே வங்கத் தகட்டால் கவசம் செய்து, அதன்மேல் துணி சுற்றிக் கட்டி நெருப்பில் வைத்து புடம் போட்டு மறுநாள் எடுத்துப் பார்க்கப் பற்பமாகும்.

அளவு 10-30 மி.கி; இரு வேளை

து.ம. திரிகடுகுக் குடிநீர், தேன், கிராம்புக் குடிநீர்

தீ.நோ. எட்டு வகைக் குன்மநோய்கள்

## சிலாசத்துப் பற்பம்

தே.பொ. சிலாசத்து 20 கி

செ.முறை சிறுகீரையை அரைத்து சிலாசத்திற்குக் கவசம் செய்து காய வைத்து இரண்டு எருவில் புடம் போடவும். பற்பத்தை எடுத்து வைத்துக் கொள்ள வேண்டும்.

அளவு 65 மி.கி; காலை, மாலை 7 வேளை.

து.ம. பனங்கருப்பட்டி

தீ.நோ. வெள்ளை, மேகவெட்டை, இரத்தவெட்டை

பத்தியம் போகமாகாது. மீன், கருவாடு நீக்கவும்.

## படிகாரப் பற்பம்

தே.பொ. சீனக்காரம் (படிகாரம்)
(ஒரே கட்டி) 35 கிராம்

செ.முறை தும்பை இலையை அரைத்துக் கவசம் செய்து ஒருநாள் காய வைத்து மறுநாள் அதன்மேல் வேப்பங்கொழுந்தை அரைத்து கவசம் செய்ய வேண்டும். ஒருநாள் அதனைக் காயவைத்த பின்னர் சீலைமண் செய்து காய வைத்து முழப்புடமிட்டுப் பத்திரப்படுத்தவும்.

அளவு 200-300 மி.கி, இருவேளை

து.ம. தேன், நெய், வெண்ணெய், பனை வெல்லம்

தீ.நோ. குன்மம், மேகம், பெருவியாதி (குட்டம்) வெட்டை இரத்த மூத்திரம், நீரெரிவு, நீரடைப்பு, பெரும்பாடு

பத்தியம் போகமாகாது

## இரச கற்பூர பற்பம்

தே.பொ. சீன வெண்காரம் 12 கி
(அ) பொரித்தது
நாட்டு வெண்காரம்
(சாணி போட்டுத் தேய்த்துக் கழுவி பொரிக்கவும்)
இரசகற்பூரம் 8 கி.

செ.முறை இரண்டையும் கல்வத்திலிட்டு நன்கு பொடித்துக் கொள்ள வேண்டும்.

அளவு 65-130 மி.கி. இருவேளை.

து.ம. தேன்

தீ.நோ. உதிரக் கட்டு, சன்னி, சுரம், மாந்தம்.

## கலைமான் கொம்பு பற்பம்

தே.பொ. கலைமான் கொம்பு
ஆகாசத் தாமரை

செ.முறை கலைமான் கொம்பைத் துண்டுதுண்டாக நறுக்கி ஆகாசத் தாமரை இலையை அரைத்து (உலைச்சட்டி)

ஆடுசட்டியில் போட்டு மேல் கலைமான் கொம்பு துண்டுகளை அடுக்கிக் கொள்ள வேண்டும். மேலேயும் ஆகாசத்தாமரை மூலிகை வைத்து ஒடுமூடி சீலை செய்து காயவைத்தெடுத்துக் கொள்ள வேண்டும். குழிவெட்டி 50 எரு அடுக்கி அதன் மேல் இதனை வைத்து மேலேயும் 50 எருவைத்து புடம் போட்டால் பற்பமாகும்.

அளவு — 100 முதல் 400 மி.கி; காலை மாலை 6 வேளை

து.ம. — தேன்

தீ.நோ. — மார்புநோய் (தமரகம்)

பத்தியம் — இச்சாபத்தியம்

## கெந்தக பற்பம் - முறை 1

தே.பொ. — கெந்தகம் (ஒரே கட்டி)

செ.முறை — ஒரு சட்டியில் மருதம்பட்டைச் சாம்பல் பாதிவரை போட்டு நடுவில் கெந்தகத்தை வைக்க வேண்டும். 25 நிமிடம் கமலாக்கினி (2 விறகு) யாக எரித்து பின் கொடிவேலி வேர்ப்பட்டையை எலுமிச்சங்காயளவு அரைத்துக் கவசம் செய்து மூன்று சீலை செய்து அரைக்காய்ச்சல் காய வைத்து 5 எருவில் புடம் போட்டால் பற்பமாகும்.

அளவு — 130 மிகி; காலை, மாலை.

து.ம. — நெய்

தீ.நோ. — வெட்டை, சிலந்தி, சுரம், மேகம்.

## கெந்தக பற்பம் - முறை 2

தே.பொ. — கெந்தகம் 175 கி

செ.முறை — இதைப் பசுவின் பாலில் சுத்தி செய்து ஈர வெங்காயச்சாறுவிட்டு 3மணி நேரம் நன்றாக அரைத்து கண்ணாடித் தட்டில் வைத்து வெயிலில்

காய வைக்க வேண்டும். பசுவின் வெண்ணெய்போல் வெண்மையாக இருக்கும்போது எடுத்துக் கொள்ளவும்.

அளவு — 100 முதல் 400 மிகி; தினம் 2 வேளை வீதம் 10 நாள் கொடுக்கவும்.

தீ.நோ. — பவுத்திரம், மேகம், சூலை, வாதம், பாரிசவாயு, சிறுபாம்புக்கடி, குட்டம், மகோதரம் இவைகள் தீரும்.

பத்தியம் — பச்சரிசி சாதத்தைப் பசும்பால் சேர்த்தோ பசுநெய் சேர்த்தோ சாப்பிடலாம். சர்க்கரை சேர்த்துப் பொங்கலிட்டுச் சாப்பிடலாம்.

## நாக பற்பம் - முறை 1

தே.பொ. — நாகம் 35 கிராம்

செ.முறை — நாகத்தை இலுப்பைப் பழச்சாற்றில் 5 முறை உருக்கிக் கொள்ள வேண்டும். பின்பு புதுச்சட்டியிலிட்டு உருக்கிக் கொள்ள வேண்டும். கீழாநெல்லி சமூலத்தைக் கட்டாகக் கட்டிக் கொண்டு அதன் துணையாக வறுத்துக் கொண்டே இருக்க வேண்டும். பொங்கி வந்த பின்னர் 35 கிராம் நாகத்திற்கு நல்ல வேளைச்சாறு 200 மிலி சிறிது சிறிதாக விட்டு வறுக்க பற்பமாகும். அதனை எடுத்து புளியம்புரணிச் சாம்பலைத் தண்ணீரில் கரைத்து தெளிவிறுத்து அரைத்து வில்லை செய்து கொள்ள வேண்டும். அதனைக் காயவைத்து சீலை செய்து ஒட்டில் வைத்து 60 எருவில் புடமிட பற்பமாகும்.

அளவு — 100-200 மிகி; 1 வேளை

து.ம. — திரிகடுகுச் சூரணம், கருணைக்கிழங்கு லேகியம், சுண்டை வத்தல் சூரணம், தேற்றாங் கொட்டை லேகியம்.

தீ.நோ. — மூலக்கிராணி, மூலக்குடுப்பு, கழிச்சல், வயிற்றுக்கடுப்பு.

## நாக பற்பம் - முறை 2

தே.பொ. நாகம் 250 கி

செ.முறை நாகத்தை சட்டியில் போட்டு உலையில் வைத்து ஊதினால் அது உருகி வருகின்றபோது தேள்கொடுக்கு இலையை இடித்து அதில் சிறிது சிறிதாகப் போட்டுக் கிண்டவும். பின்னர் அந்த இலைச்சாற்றில் நன்கு அரைத்து சிறு சிறு வில்லைகள் செய்து அரைக்காய்ச்சலாகக் காய்ந்த பிறகு ஓட்டில் வைத்து முழப்புடம் போடவும். இது பற்பமாகும்.

அளவு 100- 200 மி.கி; 12 வேளை

து.ம. வெண்ணெய் (அல்) நெய்

தீ.நோ. மூலம், பவுத்திரம் தீரும்

பத்தியம் காரத்தைத் தவிர்க்கவும்.

## நாக பற்பம் - முறை 3

தே.பொ. நாகம் 50 கி

செ..முறை இதனை இலுப்பை எண்ணெயில், பத்துமுறை உருக்கிக் கொள்ள வேண்டும். அதனை நாயுருவித் தண்டால் புதுச்சட்டியில் போட்டு வறுக்கவும். மணல் போன்று ஆன பின்னர் உத்தாமணிச் சாற்றால் 6 மணி நேரம் நன்கு அரைத்து வில்லை செய்து ஓட்டிலிட்டு மூடி சீலை செய்து பத்து வரட்டியில் புடமிட பற்பமாகும்.

அளவு மலக்கழிச்சல் - 100-200 மிகி; 3 நாள் 6 வேளை
வெட்டைக்கு 100-200 மிகி; 3 நாள் 6 வேளை

து.ம. மலக்கழிச்சல்-தேன்
வெட்டை- நெய், வெண்ணெய்

தீ.நோ. மலக்கழிச்சல், வெட்டை தீரும். தாது விருத்தியடையும்

பத்தியம் போகமாகாது.

## நாகபற்பம் - முறை 4

| | | |
|---|---|---|
| தே.பொ. | நாகம் | 20 கி |
| | இரசம் | 20 கி |
| | கெந்தகம் | 8 கி |

செ.முறை நாகத்தை நிலவாகை இலையால் அரைத்து கவசங்கட்டி சீலை செய்து ஒரு எருவில் புடம் போட வேண்டும். பின்பு இரசத்தைச் சேர்த்து, வெற்றிலைச் சாற்றால் அரைக்க வேண்டும். பின்னர் கெந்தகம் 8 கி சேர்த்து வெற்றிலைச் சாற்றாலரைத்து ஒரு வரட்டியில் ஒன்பது புடம் போடவும். அது பற்பமாகும்.

அளவு 65 மிகி ; தினம் 2 வேளை 10 முதல் 24 நாட்கள்.

து.ம. வெண்ணெய்

தீ.நோ. மூல, பவுத்திர நோய்கள் தீரும்.

## நாகபற்பம் - முறை 5

தே.பொ. நாகத்தை இலுப்பை எண்ணெயில் 7 முறை உருக்கிச் சாய்த்து கரண்டியில் போட்டு வேப்பம்பூ போட்டு வறுத்துக் கொள்ளவும். பின்பு கல்வத்திட்டு பசுவின் சிறுநீர் விட்டு அரைத்து வில்லைசெய்து காயவைத்துக் கொள்ளவும். அகலில் இட்டு மேலோடு மூடி சீலைமண் செய்து (1000 வரட்டியில்) புடம் போடவும். பின்னர் வேப்பம்பூ குடிநீர் விட்டு இடித்து சாறு பிழிந்து அரைத்து புடமிட வேண்டும். பின்னர் எலுமிச்சம்பழச் சாற்றில் 3 புடமும், பசும்பாலில் மூன்று புடமும் இடவும். பற்பமாகும்.

அளவு 100-200 மிகி.

து.ம. தேன், வெண்ணெயில் சாப்பிட வேண்டும்.

தீ.நோ. சுவாச நோய், மூலநோய், மேகம், குட்டம்.

பத்தியம் போகமாகாது

## வெள்ளி பற்பம் - முறை 1

தே.பொ. வெள்ளிப் பொடி
ஈருள்ளி இலைச்சாறு

செ.முறை. வெள்ளிப் பொடியை ஈருள்ளி இலைச்சாற்றில் 12 மணி நேரம் அரைத்து வில்லை செய்து காய வைத்து ஓட்டிலிட்டு ஓடு மூடி சீலை 7 செய்து முழப்புடமிட வெள்ளி பற்பமாகும்.

அளவு 30-60 மி.கி., இருவேளை

தீ.நோ. உடல் வன்மை தரும்.

## வெள்ளி பற்பம் - முறை 2

தே.பொ. வெள்ளி 4 கிராம்

செ.முறை வெள்ளியைத் தகடாகத் தட்டிக் கொள்ள வேண்டும். பப்பாளிப் பழச்சாற்றில் மூன்று முறை பழுக்கக் காய்ச்ச வேண்டும். பின்னர் அதனைப் பப்பாளிப் பழத்திற்குள் வைத்துக் கொள்க. வெள்ளைப் புறாவின் மலத்தை நுணுக்கி மண்சட்டி ஓட்டின் கீழ் போட்டு அதன்மேல் பப்பாளிப் பழத்தை வைத்து மேலே தூளைப் போட்டு மூடி $2^{1/2}$ முழம் புடம் போட பற்பமாகும்.

அளவு 30-65 மி.கி; மூன்று நாள் 6 வேளை

து.ம. பசுவெண்ணெய், பசுநெய்.

தீ.நோ. வெட்டை தீரும், தாது விருத்தியுண்டாகும்.

பத்தியம் இச்சாபத்தியம்

## வெள்ளி பற்பம் - முறை 3

தே.பொ. வெள்ளி 4 கி

செ.முறை இதனைத் தகடுதட்டி மகிழம்பூ சாறு எடுத்து காய்ச்சி தோய்த்து இவ்வாறு மூன்று முறை

தோய்த்தெடுக்கவும். பின்னர் மகிழம்பூச் சாற்றில் அரைத்து வில்லை செய்து காயவைக்க வேண்டும். அதனை எடுத்து ஒட்டிலிட்டு 3 சீலை செய்து $1^{1/2}$ முழப்புடம் போடவும். பற்பமாகும்.

அளவு 30-65 மி.கி, 3 நாள் 6 வேளை உட்கொள்ளவும்

து.ம. பசுவெண்ணெய், நெய்.

தீ.நோ. வெட்டை தீரும், தாது விருத்தியுண்டாகும்

பத்தியம் இச்சாபத்தியம்

## வெள்ளி பற்பம் - முறை 4

தே.பொ. வெள்ளிச் சரிகை
கொடிப்பாலைச்சாறு

செ.முறை வெள்ளிச் சரிகையை கொடிப்பாலைச் சாற்றில் நன்கு மைபோல அரைத்து வில்லை செய்து காய வைத்து மூன்று சீலை செய்து பத்து வரடடியில் புடம் போட்டால் பற்பமாகும்.

அளவு 30-60 மி.கி., இருவேளை

து.ம. தேன், நெய்

தீ.நோ. இது எல்லா நோய்களிலும், பற்பல மருந்துகளில் சேர்த்துக் கொடுக்க அம்மருந்து மிகச் சிறப்பாக வேலை செய்யும். உடலுக்கு நல்ல உரத்தைக் கொடுக்கும்.

சிறப்பாக மாதர்களுக்கு வாயிலும், யோனியிலும் வரும் உதிரப்பெருக்கை நிறுத்தி குன்ம வலியைப் போக்கும். இரத்தகாச நோயில் இம்மருந்து சிறப்பாகச் செயல்படுகிறது.

பத்தியம் பாலும் சோறும் கொடுக்கவும். மருந்தை மிகு காலம் கொடுப்பதைக் குறைக்கவும்.

## எஃகு பற்பம்

தே.பொ. எஃகுப் பொடி 35 கி

செ.முறை எஃகுப் பொடியை வெண்ணாவல் பழச்சாற்றில் 9 மணி நேரம் அரைத்து வில்லை செய்து காய வைத்து ஓட்டில் வைத்து ஓடுமூடி சீலை செய்து காய வைத்து முழப்புடம் போட எஃகு சுண்ணமாகும்.

அளவு 100 முதல் 200 மி.கி., இருவேளை

து.ம. தேன், திரிகடுகுச் சூரணம், வெந்நீர்

தீ.நோ. ஆண்மையை அதிகரிக்கும். வாத, பித்த, கப நோய்கள், குன்மம், சுர நோய்கள், நடுக்கல் தீரும். குறிப்பாக, சிரக்கம்பவாதத்தில் நல்ல பலன் தரும்.

பத்தியம் புளிப்புச்சுவை, பெண்போகம் நீக்கவும்.

## அய பற்பம் - முறை 1

தே.பொ. அயம்

செ.முறை அயத்தைப் பயிற்றங்காய்போல் கம்பியாகச் செய்து சரக்கொன்றைக் காயில் செலுத்தி 45 நாள் அந்த மரத்தில் அப்படியே காயோடு தொங்கவிட்டு விட வேண்டும். பின்னர் அந்தக் காயை எடுத்து 1000 வரட்டியில் புடம் போடவும்.

அளவு 65 மி.கி. முதல் 130 மி.கி.

து.ம. தேன்

தீ.நோ. சோபை, ஈரல் நோய்கள், காமாலை, வெளுப்பு நோய் தீரும். உடல் வன்மை பெறும்.

குறிப்பு: இந்த முறையில் முடிக்கப் பெறும் அயபற்பம் மிகச் சிறப்புடைத்து என்பது அனுபவம்.

## அயபற்பம் - முறை 2

தே.பொ. அயம்

செ.முறை அயத்தை ஈசல் இறகுபோல மெல்லிய தகடாகத் தட்டிக் கொள்ள வேண்டும். கன்று ஈனாத கிடாரியின் மூத்திரத்தில் மூன்று நாள் ஊறப்போட வேண்டும். பிறகு அதை எடுத்து, கொடுக்காப்புளி, சீனக்காரம் இரண்டையும் 10 கி., எடுத்து தண்ணீரில் கரைத்து அதில் மூன்று நாள் ஊறப்போட்டு பின்னர் துளசிக் கட்டை 4 விரற்கடை நீளம் உள்ளதை இரண்டாய் அறுத்து நடுவில் அயத்தகடு வைத்து 7 சீலை செய்து காய வைத்து 30 எருவில் புடம் போடவும்.

அளவு 65 மி.கி-130 மி.கி

தீ.நோ. பாண்டு, சோபை, காமாலை தீரும். உடல் வன்மை பெறும்

## அயபற்பம் - முறை 3

தே.பொ. அயப்பொடி 35 கி

செ.முறை வெண்ணாவல் பழச்சாற்றில் 12 மணி நேரம் அரைத்து வில்லை செய்து காய வைத்துக் கொள்ளவும். ஓட்டில் வைத்து 3 சீலை செய்து காய வைத்து முழ அளவு எருவில் புடம் போட்டால் (காற்று அதிகமில்லாத இடம்) அயம் பற்பமாகும்.

அளவு 65 மி.கி-130 மி.கி

தீ.நோ. பாண்டு, சோபை, காமாலை

## அயபற்பம் - முறை 4

தே.பொ. அயப்பொடி 70 கி
ஆடுதின்னாப்பாளைச்சாறு

| | |
|---|---|
| செ.முறை | அயப்பொடியைப் பழச்சாற்றில் அரைத்து வில்லை செய்து காய வைத்து சீலை செய்து முழப்புடமாக மூன்று புடம் போடவும். பின்னர் ஆடுதின்னாப்பாளைச் சாற்றில் முன்போல் மூன்று புடம் போட பற்பமாகும். |
| அளவு | 65 மி.கி - 130 மி.கி. 6 வேளை<br>குன்மம் - 125 மி.கி.<br>மேகம் - 125 மி.கி.<br>தாதுவிருத்தி - 125 மி.கி. |
| து.ம. | நெய் |
| தீ.நோ. | பூச்சியால் வந்த குன்மம், சகல மேகங்கள் நீங்கும். தாது விருத்தியடையும் |
| குறிப்பு: | அளவிற்கதிகம் கொடுப்பது மிகுந்த சிரமத்தை உண்டாக்கும். |

## வீர பற்பம்

| | | |
|---|---|---|
| தே.பொ. | வீரம் | 4 கி |
| | இலிங்கம் | 4 கி |
| | முட்டைகள் | 2 |

| | |
|---|---|
| செ.முறை | தனித்தனியே இரண்டு முட்டைகளில் துளையிட்டு அதனுள் வீரத்தையும் இலிங்கத்தையும் இட்டு சில்லு வைத்து களிமண் பூசி மூன்று சீலை செய்ய வேண்டும். மணலைக் கீழே இட்டு முட்டையை அதன்மேலே வைத்து மேலேயும் மணல் போட்டு முக்கால் முழமளவிற்கு எருவினை அடுக்கி புடம் போடவும். அதிக நெருப்பில்லாமல் மிதமான நெருப்பிடுவது நன்று. பின் அதை அரைத்து எடுத்துக்கொள்ள வேண்டும். |
| அளவு | 2-4 மி.கி. ; காலை, மாலை ஐந்து நாள். |
| து.ம. | நெய் |

தீ.நோ. குன்மம்

பத்தியம் நெய்க்கறி திருப்தியாக உண்ண வேண்டும்.

## தாளக பற்பம் - முறை 1

தே.பொ. பழம்பாசி இலை
தாளகம்

செ.முறை பழம்பாசி இலைச்சாற்றில் தாளகத்தை மூன்று நாள் ஊறப்போட வேண்டும். பின்னர் பழம்பாசி இலையை அரைத்துக் கவசம் செய்து அதன்மேல் சீலை செய்து ஒரு வரட்டியால் புடம் போட பற்பமாகும்.

அளவு 16-32 மி.கி. இரு வேளை

தீ.நோ. சுவாச நோய்கள்

## தாளக பற்பம் - முறை 2

தே.பொ. தாளகம் 20 கி

செ.முறை சுண்ணாம்பு வெந்த கல்சட்டியில் போட்டு தாளகக் கட்டியை வைத்து மேலேயும் சுண்ணக்கல் போட்டுக் கொள்க. தூய்மை செய்த கல்லை மறுபடி பாலையிலைச் சாற்றில் 12 மணி நேரம் சுருக்கிட்டு மறுபடி சிறு கட்டுக்கொடியை அரைத்து எலுமிச்சங்காயளவு எடுத்து கவசம் செய்து 3 சீலை செய்யவும். பின்னர் மூன்று எருவில் புடம் போட பற்பமாகும்.

அளவு 16-32 மி.கி. ஆறு வேளை; காலை மாலை

து.ம. நெய்

தீ.நோ. காசம், சுரம்

## தாளக பற்பம் - முறை 3

தே.பொ. தாளகம் 20 கி.
சிறுகீரைச்சாறு
சிறுசெருப்படி இலை

செ.முறை தாளகத்தைச் சிறுகீரைச் சாற்றில் 12 மணிநேரம் அரைத்து வில்லை செய்து கொள்ளவும். காய்ந்த பின்னர் சிறுசெருப்படி இலையை அரைத்துக் கவசம் செய்து சீலை மூன்று செய்து முழப்புடம் போட பற்பமாகும்.

மேற்கூறிய அளவே இதற்கும் பொருந்தும்.

## தாளக பற்பம் - முறை 4

தே.பொ. தாளகம்
பொன்முசுட்டை

செ.முறை பொன் முசுட்டை கொண்டு வந்து சாறு எடுத்துத் தாளகத்தை நன்கு அரைத்து வில்லை செய்து உலர்த்தி ஓட்டிலிட்டு சீலை செய்து பத்து வரட்டியில் புடம் போடப் பற்பமாகும்.

அளவு 16-32 மி.கி; ஆறுவேளை, காலை, மாலை.

து.ம. நெய்

தீ.நோ. காசம், சுரம்

## தாளக பற்பம் - முறை 5

தே.பொ. தாளகம் -35 கி.
எலுமிச்சம் பழம்

செ.முறை எலுமிச்சம்பழத்தில் தாளகத்தை வைத்து மூன்று நாள் வெயிலில் வைக்க வேண்டும். தாளகம் சுண்ணாம்பாக மாறும். எலுமிச்சம் இலையை அரைத்து குகை செய்து, காய்ந்த பின்னர்

தாளகத்தை உள்ளே வைத்து மேல்மூடி சீலை செய்து 5 எருவில் புடம் போட பற்பமாகும்.

மேற்கூறிய அளவும் தீரும் நோயும் இதற்கும் பொருந்தும்

## தாளக பற்பம் - முறை 6

தே.பொ. தாளகக் கட்டி - 35 கி.
புளியம் பட்டை

செ.முறை புளியம் பட்டையை எரித்துச் சாம்பலாக்கி கலயத்தில் போட்டு நடுவில் தாளகக் கட்டியை வைத்து அதன் மேல் சாம்பல் கொட்டி மேல் மூடி சீலை செய்து 9 மணி நேரம் எரித்து மூன்று நாள் ஆற விட வேண்டும். நான்காம் நாள் பிரித்துப் பார்த்தால் பற்பமாகும்.

அளவு 16-32 மி.கி; ஆறுவேளை: காலை, மாலை

து.ம. நெய்

தீ.நோ. காசம், சுரம், ஈளை, சுவாசம்.

## தாளக பற்பம் - முறை 7

தே.பொ. தாளகம் 35 கி.
எலுமிச்சம் பழச்சாறு
கருப்புக் கொடிவேலி

செ.முறை இத்தாளகத்தை எலுமிச்சம்பழச்சாற்றில் மூன்று நாள் ஊறப் போட்டுக் கொள்ளவும். பின்னர் எடுத்துத் தேய்த்துக் கழுவிக் கொள்ளவும். கருப்புக் கொடி வேலியை அரைத்து தாளகத்தின் மேல் கவசங்கட்டி ஏழுசீலை மண் செய்து ஒரு வரட்டியில் புடம் போட்டுக் கொள்ளவும். மேற்கூறிய அளவும் தீரும் நோயும் இதற்கும் பொருந்தும்.

## தாளக பற்பம் - முறை 8

தே.பொ. தாளகம் 20 கி.
இளநீர்

செ.முறை இதனை இளநீரில் மூன்றுநாள் ஊறப்போட்டுக் கொள்ளவும். அத்திக் கட்டையைக் குடைந்தெடுத்துக் கொண்டு உத்தாமணியை அரைத்து அந்த கட்டைக்குள் வைக்க வேண்டும். அதன் நடுவில் தாளகக் கட்டியை வைத்து சக்கை மூடி சீலை செய்து 10 வரட்டியில் புடம் போட பற்பமாகும்.

அளவு 16-32 மிகி; காலை மாலை 2 வேளை வீதம் ஆறு நாள் கொடுக்கவும்.

து.ம. தேன்

தீ.நோ. கபம்

பத்தியம் போகம் கொள்ளலாகாது. புளி, புகை ஆகாது.

## தாளக பற்பம் - முறை 9

தே.பொ. தாளகம் 35 கி
கடுக்காய்த் தோல்

செ.முறை கடுக்காய்த் தோலைத் தூளாக்கி, நீர்விட்டரைத்து நாரத்தங்காயளவு, எடுத்து குகை செய்து அதற்குள் வைத்து 7 சீலை செய்து இரண்டு எருவில் புடம் போட்டால் பற்பமாகும்.

அளவு 16-32 மி.கி; இருவேளை

து.ம. தேன் + சுக்குப்பொடி

தீ.நோ. காசம், பாண்டு, எலிக்கடி, சுரம், வாயு

பத்தியம் போகமாகாது; உப்பைச் சங்கிலையால் வறுத்து, புளியைச் சுட்டு சேர்க்கவும்.

குறிப்பு : 6 வேளை கொடுத்ததும் 7 ஆம் வேளை சுக்கு பொடிசெய்து தேனில் குழைத்து அதற்குள் 32 மிசி கொடுக்கவும்.

## தாளக பற்பம் - முறை 10

| | | |
|---|---|---|
| தே.பொ. | தாள்கம் | 35 கி |
| | சீனக்காரம் | 18 கி |
| | அண்டத்தோல் | 18 கி |

செ.முறை இம்மூன்றையும் கல்வத்திட்டு வேலிப்பருத்திச் சாறுவிட்டு 3 மணி நேரம் அரைத்து, பின்னர் குப்பைமேனிச்சாறுவிட்டு 3 மணி நேரம் அரைத்து மூன்று வில்லை செய்து காய வைக்க வேண்டும். பின்னர் ஒட்டில் வைத்து சீலை செய்து 20 எருவில் புடம் போட வேண்டும். பற்பமாகியிருக்கும் தாளகத்தை எடுத்துப் பத்திரப்படுத்திக் கொள்ள வேண்டும்.

அளவு 16-32 மி.கி: இருவேளை

து.ம. தேன், வெண்ணெய்

தீ.நோ. சுரம், காசம், ஈளை, இருமல் தீரும்.

பத்தியம் புளி, புகை, போகம் கூடாது.

## தாளக பற்பம் - முறை 11

தே.பொ. தாளகம் 20 கி
காட்டுக் கத்திரியிலைச் சாறு(தேவைக்கேற்ப)

செ.முறை காட்டுக்கத்திரி இலைச்சாறு விட்டு 36 மணி நேரம் அரைத்துக் கொள்ள வேண்டும். நிழலில் காய வைத்துக் கொள்க. ஒரு கலயத்தில் சாறு எடுத்துவிட்ட காட்டுக் கத்திரி இலைச் சக்கை பாதியைப் போட்டு அதன்மேல் தாளக வில்லைகளை வைத்து மேலும் அந்தச் சக்கைகளைப் போட்டு அகல்மூடி சீலைமண் செய்து சாண்புடம் போட்டால் தாளகம் பற்பமாகும்.

அளவு 16 முதல் 32 மில்லி கிராம்.

து.ம. தேன், நெய்

தீ.நோ. இதை வாத பித்த கபப் பிணிக்கு கொடுக்கலாம் என்று கூறி இருப்பினும் சிறப்பாகக் கபப்பிணிகள் தீரும். சளி, சுவாசகாசம், ரத்தகாசம் தீரும்.

குறிப்பு : இந்த பற்பம் செய்து முடித்து 3 மாதம் ப்ழமையான பின்னரே உபயோகிக்க வேண்டும். சரியான அளவுப்படியும் உட்கொள்ள வேண்டும்.

## தாளக பற்பம் - முறை 12

தே.பொ. தாளகம் 35 கி

செ.முறை தாளகத்தை வெள்ளரிக்காயினைப் (பெருதிக்காகரி) பிளந்து அதற்குள் வைத்து மேலே 2 அங்குலமளவிற்குக் கவசம் செய்ய வேண்டும். ஏழுசீலை செய்து பத்து வரட்டியில் புடம் போட வேண்டும்.

அளவு 16-32 மி.கி; காலை மாலை 7 நாட்கள்

து.ம. நெய்

தீ.நோ. கபம் நீங்கும்

பத்தியம் போகம் ஆகாது

## தாளக பற்பம் - முறை 13

தே.பொ. தாளகம் 35 கி
பெரிய நத்தை 5 எண்

செ.முறை பெரிய நத்தையைக் கூட்டோடு கல்வத்தில் போட்டு நன்றாக அரைத்து வில்லை செய்து கொள்ள வேண்டும். பனை ஓலையில் வெயிலில் வைத்து அரைக்காய்ச்சல் காய்ந்த பின்னர் ஓலையுடன் வைத்து முழப்புடம் போட்டால் பற்பமாகும்.

அளவு 16-32 மி.கி அளவு, காலை, மாலை 6 வேளை

து.ம. வெண்ணெய்

தீ.நோ. காசம், சயம், ஈளை, இருமல், சுரம்

குறிப்பு : சுரத்திற்கு மட்டும் தேனில் கொடுக்கவும்.

## தாளக பற்பம் - முறை 14

தே.பொ. தாளகம்

செ.முறை தாளகத்தினைக் கற்சுண்ணாம்பிற்குள் வைத்து பனங்கள்ளினால் ஏழுமுறை தூய்மை செய்ய வேண்டும். முட்டை வெள்ளைக்கரு எடுத்து, அதில் முப்புவும் கூடப்போட்டு அரைத்துக் கொள்ள வேண்டும். அதைத் தாளகத்திற்குக் கவசம் செய்து காயவைத்தல் வேண்டும். இப்படியே மூன்று முறை செய்தல் வேண்டும். வெள்ளைச் சாரணையாவது மருதோன்றிப்பட்டையாவது அரைத்து கவசம் செய்து சீலை 7 செய்து காய வைத்து20 எருவில் புடம் போட பற்பமாகும்.

அளவு 16-32 மி.கி; 7 வேளை

து.ம. வெண்ணெய் அல்லது நெய்

தீ.நோ. கபம், சுவாசம், காசம் தீரும்.

## தாளக பற்பம் - முறை 15

தே.பொ. தாளகம் 20 கி

செ.முறை இதைச் சதுரக்கள்ளிப் பாலில் 3 நாட்கள் ஊறப்போட வேண்டும். கொடிக்கள்ளிப் பாலில் இரண்டு நாட்கள் ஊறப்போடவும் பின்னர் முலைப்பாலில் ஒரு நாள் ஊறப் போடவும். அத்திக்கட்டை ஒன்றை எடுத்து அதைச் சாணளவு

குடைந்து கொள்ள வேண்டும். அதன் உள்ளே தாளகம் வைத்துக் குடைந்த சக்கையால் இறுக மூடி மண்பூசிச் சீலைசெய்து கோழிப்புடம் (பத்து எருவில்) போட பற்பமாகும்.

அளவு 16-32 மி.கி.

து.ம. தேன், நெய், வெந்நீர்

தீ.நோ. பலதரப்பட்ட சுரங்கள் தீரும். மந்த சுரம், குன்மம், வாத, பித்த, கப சன்னிகள் தீரும். காசம், ஈளை சுவாசம் தீரும்.

பத்தியம் நோய்க்குத் தக்கவாறு பத்தியம் கூறவும். பொதுவாகக் கபத்தை அதிகரிக்கும் பொருள்களை விலக்க வேண்டும்.

குறிப்பு: தாளகத்தில் 49% வெள்ளைப் பாடாணம் இருப்பதாகச் சோதனையால் அறியப்படுகிறது.

## அரிதார (தாளக) பற்பம் முறை 16

தே.பொ. அரிதாரம் 35 கி
கல்சுண்ணம் } ஒரெடை
குப்பைமேனியிலை }

செ.முறை கல்சுண்ணத்தை நீற்றி சரியெடை குப்பைமேனி இலையைச் சேர்த்து மைபோல் அரைத்துக் கொள்ளவேண்டும். எலுமிச்சங்காயளவு கவசம் செய்து 7 சீலை செய்து 10 வரட்டியில் புடம் போட பற்பமாகும்.

அளவு 16-32 மி.கி, பாண்டுரோகத்திற்கு 12 வேளை
பித்த வாதசுரம்-தீருமட்டும்
எலிக்கடி - 5 வேளை

து.ம. பாண்டுரோகம்-வெண்ணெய்
பித்தவாதசுரம்-நல்வேளைச்சாறு
எலிக்கடி-குப்பைமேனிச்சாறு

தீ.நோ. பாண்டுரோகம், பித்தவாதசுரம், எலிக்கடி

பத்தியம். உப்பு, புளி நீக்கவும் போகமாகாது.

## வெள்வங்க பற்பம் - முறை 1

தே.பொ. வெள்வங்கம்

செ.முறை வெள்வங்கத்தை உருக்கி தகடாகத் தட்டிக் கொள்ள வேண்டும். கருந்துளசியை நாரத்தங்காயளவு அரைத்துக் கவசம் செய்து மூன்று சீலை செய்து முழப்புடம் போட்டால் பற்பமாகும்.

அளவு 100-200 மி.கி, இருவேளை

து.ம. பசு நெய்

தீ.நோ. மேக நோய்.

## வெள்வங்க பற்பம் - முறை 2

தே.பொ. வெள்வங்கம் 50கி

செ.முறை வெள்வங்கத்தைத் தகடாய்த் தட்டி ஆடாதோடை வேரைக் குடைந்து அதற்குள் தகடை வைத்து சக்கை மூடி சீலை செய்து முழமளவு வரட்டியடுக்கி புடம் போடவும். ஆறினபின்னர் எடுத்துப் பார்த்து பற்பமாகாவிட்டால் ஆடாதோடை இலையை அரைத்துக் கவசம் செய்து புடம் போடவும் பற்பமாகும்.

அளவு 50 மி.கி. - 100 மி.கி.

தீ.நோ. சூலை, வாதம், மேகம்

## கருவங்க பற்பம்

தே.பொ. கருவங்கம் 50 கிராம்
காரீயம் (தேவையான அளவு)

செ.முறை வங்கத்தைக் காரீயத்தின் அடி மண்டியில் மூன்று முறை உருக்கிக் கொள்ள வேண்டும். பின்னர்

பழச்சாற்றில் இட்டு எடுத்துக் கொள்ள வேண்டும். செந்நாயுருவியை அரைத்துக் கவசம் செய்து மூன்று சீலை மண் செய்து 30 எருவில் புடம் போடவும். இப்போது வங்கம் பற்பமாகி இருக்கும்.

அளவு 50 முதல் 100 மி.கி; 3 நாள் ஆறு வேளை

து.ம. பசு நெய்

தீ.நோ. மேக அரிப்பு, கெற்ப அரிப்பு, மேகவெட்டை தீரும். தாது விருத்தியடையும்.

பத்தியம் போகமாகாது

## இலிங்க பற்பம் (வெள்ளை) - முறை 1

தே.பொ. இலிங்கம் - 35 கி
சிவசுரந்தை இலை - தேவையான அளவு

செ.முறை சிவசுரந்தைச் சாற்றில் மூன்று நாள் லிங்கத்தை ஊறவிட வேண்டும். பின்னர் சிவசுரந்தை இலையை அரைத்து சீலை செய்து ஒரு எருவில் புடம் போடவும். இப்போது லிங்கம் பற்பமாகியிருக்கும்.

அளவு 65 மி.கி; இருவேளை

து.ம. தேன், இஞ்சிச்சாறு, சுக்குக் குடிநீர், திரிகடுகுக்குடிநீர்

தீ.நோ. சன்னி, சுரம், வாயு, வெள்ளை

## இலிங்க பற்பம் (வெள்ளை) - முறை 2

தே.பொ. இலிங்கம் 35 கி

செ.முறை குன்மக்குடோரியை அரைத்து நாரத்தங்காயளவு கவசம் செய்து சீலை இரண்டு செய்து அதன்மேல் சேராங்கொட்டையைத் தேங்காயளவு அரைத்து மேல்கவசம் செய்து கொள்ள வேண்டும். 5 சீலை செய்து கொள்ளவும். முழ ஆழ குழிவெட்டி புடம் போட்டால் பற்பமாகும்.

அளவு 65 மி.கி

து.ம. பனை வெல்லம்

தீ.நோ. சன்னி, சுரம் (எட்டு வகை) குன்மம், க்ஷயரோகம், வாயு

பத்தியம் மீன், கருவாடு, பழைய சாதம் ஆகாது

## வங்க பற்பம் - முறை 1

தே.பொ. வங்கத் தகடுகள்

செ.முறை முள்ளிலவம் பட்டையை அரைத்து, அதன்மீது தேன் தடவிய வங்கத் தகடுகளை வைத்து சீலைமண் செய்து (100 வரட்டியில்) புடம் போட பற்பமாகும்.

அளவு 65 மிகி அளவு; காலை மாலை 10 முதல் 30 நாட்கள்; நோயின் தன்மையைப் பொறுத்துக் கொடுக்கவும்.

து.ம. வெண்ணெய், நெய், தேன்

தீ.நோ. சகலவித மேகம் போகும்

## வங்க பற்பம் - முறை 2

தே.பொ. வங்கம் 35 கிராம்

செ.முறை வங்கத்தை உருக்கி அதனை இரண்டு கம்பியாக நீட்டிக் கொள்ள வேண்டும். கல்யாண முருங்கை கட்டையை வெட்டி தனித்தனியே துளையிட்டுக் கொள்ள வேண்டும். இவ்விரண்டு கம்பிகளையும் அதனுள் நுழைத்து இடைவெளியை அந்தச் சக்கையாலேயே மூடி புற்றுமண் அரைத்து சீலைமண் வலுவாய்ச் செய்து 1000 வரட்டியில் புடம் போடவும். கட்டையின் கீழும் மேலும் நெல் போடவேண்டும். புடம் ஆறிய பின் சோளப்பொறி போல காணப்படும். அதனை எடுத்து அரைத்து வைத்துக் கொள்ள வேண்டும்.

அளவு 165 மி.கி

து.ம. நெய், தேன்

தீ.நோ. மேகநோய் அனைத்தும் போகும்

பத்தியம் கடுகு, நல்லெண்ணெய், கருவாடு, மீன், பழையசாதம் நீக்கவும்.

## வங்க பற்பம் - முறை 3

| | | |
|---|---|---|
| தே.பொ. | வங்கம் | 250 கி. |
| | அரிசித் திப்பிலி | 500 கி. |

செ.முறை புதுச்சட்டியில் வங்கத்தைப் போட்டு அடுப்பேற்றி ஒரு விறகால் எரிக்கவும். உருகி வரும்போது திப்பிலியைச் சிறிது சிறிதாகப் போட்டு வறுக்கவும். மணல்போல் வருமட்டும் வறுத்து பிரண்டையை அரைத்து அடைபோலத் தட்டி அடிசட்டியில் வைத்து மேல் சட்டியிலும் அது போலவே ஒரு பாகம் வைத்து பொடுதலையை அரைத்து அது போலவே அதன் மேல் வைத்து அதன்மேல் வறுத்த வங்கப்பொடியைப் பரப்பி இரண்டு சட்டியையும் கவிழ்த்து மூடி புற்றுமண் அரைத்து சீலை செய்து (5 சீலை) 1000 வரட்டியில் புடம் போடவும். ஆறின பின்னர் வங்கம் உருகி வெட்டையாகும். அதை எடுத்து கல்வத்தில் நுணுக்கி எலுமிச்சம்பழச்சாற்றால் 6 மணி நேரம் கைவிடாமல் அரைத்து வில்லை செய்து அகலில் வைத்து சூரியபுடத்தில் வைத்து பிறகு 1000 வரட்டியில் புடம் போடவும். நீறிப்போகும். கல்வத்தில் போட்டு அதைச் சிமிளில் அடைத்துப் பத்திரப்படுத்தவும்.

அளவு 100 மிகி. காலை மாலை கொடுக்கவும்.

து.ம. வெண்ணெய்

| | |
|---|---|
| தீ.நோ. | பித்தவாயு, குன்மம், வயிற்று எரிச்சல், வாயு நோய்கள் |
| பத்தியம் | முதல் நாள் உப்பு, புளி, நீக்கி உண்ண வேண்டும். கடுமையாகப் பத்தியம் காக்க வேண்டும். பின்னர் நோய் தீரும் வரை போகமாகாது. |

## வங்க பற்பம் - முறை 4

| | |
|---|---|
| தே.பொ. | வங்கம் - 35 கி |
| செ.முறை | வங்கத்தை உருக்கித் தகடாகத் தட்டிக் கொள்ள வேண்டும். மருதம்பட்டையை நாரத்தங்காயளவு அரைத்து கவசம் செய்து சுண்ணச்சீலை 7 செய்து ஓட்டில் வைத்து 1000 வரட்டியில் புடம் போட பற்பமாகும். |
| அளவு | 50 மி.கி. முதல் 100 மி.கி. வரை; 7 நாள் முதல் 21 நாள் வரை |
| து.ம. | தேன், நெய் |
| தீ.நோ. | மேகம் இருபத்தொன்று |
| பத்தியம் | இச்சாபத்தியம் |

## வங்க பற்பம் - முறை 5

| | |
|---|---|
| தே.பொ. | வங்கம் 35 கிராம்<br>கெருட பச்சை 35 கிராம் |
| செ.முறை | இவ்விரண்டையும் வெள்ளையெருக்கம் பூவின் பால் விட்டரைத்து 5-6 வில்லைகளாகச் செய்து கொள்ளவும். காய வைத்து ஓட்டிலிட்டு ஏழுசீலை மண் செய்து 100 வரட்டிக்குள் வைத்துப் புடமிட பற்பமாகும். |
| அளவு | 50-100 மிகி; காலை மாலை 40 நாள் கொடுக்கவும் |
| து.ம. | வெண்ணெய் |

தீ.நோ. மேக நோய்கள்

பத்தியம் போகம் ஆகாது.

## வங்க பற்பம் - முறை 6

தே.பொ. ஆலம்பட்டை - தேவையான அளவு
வங்கம் (தகடாக்கியது) 35 கிராம்

செ.முறை ஆலம்பட்டையைச் சதுரவடிவாக நறுக்கிக் கொள்ள வேண்டும். ஆலம்பட்டையைக் கீழே பரப்பி வைத்து அதன் மேல் வெட்டிய பட்டைகளைச் சீராக அடுக்கிக் கொள்ள வேண்டும். அதன்மேல் வங்கத்தட்டை வைத்து மேலே ஆலம்பட்டை வைத்து கயிற்றில் சுற்றிக் கட்ட வேண்டும். மேலே சீலைமண் 7 செய்து பத்து வரட்டியில் புடம் போட வேண்டும். இப்போது வங்கம் பற்பமாகியிருக்கும்.

அளவு 65 மி.கி

து.ம. நோய்க்கேற்ற துணை மருந்துகளைக் கொள்ள வேண்டும்.

தீ.நோ. எல்லாவகையான மேகநோய்கள், வாதம்,. சூலை.

## வங்க பற்பம் - முறை 7

தே.பொ. வங்கம் 50 கி,
நல்லெண்ணெய்
பத்திராட்சி இலை

செ.முறை நல்லெண்ணெயில் முப்பு 488 மில்லிகிராம் போட்டு 7 முறை உருக்கி எடுத்துக்கொள்ள வேண்டும். தகடாகத் தட்டி பத்திராச்சி இலையை அரைத்துத் தேங்காயளவு திரட்டி தகடுகளை நடுவே வைத்து 3 சீலை செய்து கொள்ளவேண்டும். இதனை 1000 வரட்டியில் புடம் போட்டால் வங்கம் பற்பமாகும்.

அளவு 50 முதல் 100 மி.கி, நோய் தீரும் வரை

து.ம. நெய், தேன், பனைவெல்லம்

தீ.நோ. வாதம், சூலை.

பத்தியம் மொச்சை, பூசனி, நீக்கவும்

குறிப்பு: 'வங்கம்' கெட்டால் பங்கம் ஆகவே வங்கம் நன்கு சுத்தி செய்து முடிக்கப்பட்டால் தங்கத்திற்கு நிகரானது.

## வங்கவெட்டை முறை 1

தே.பொ. வங்கம்

செ.முறை வங்கத்தைக் கஞ்சாயிலைச் சாற்றில் 7 முறை உருக்கிக் கொள்ள வேண்டும். தோன்றிப்பூ, (கலப்பைக் கிழங்கு) இலையை அரைத்து வங்கத்திற்குக் கவசம் செய்து முழப்புடம் போட வெட்டையாகும். இதனை வங்க பற்பம் போல் கொடுக்கலாம்.

அளவு 50மி.கி - 100 மி.கி

தீ.நோ. வெட்டை, சூலை, மூத்திரக்கிரிச்சரம்

## வங்கவெட்டை- முறை 2

தே.பொ. வங்கம் 50 கி

செ.முறை ஊமத்தை சமூலத்தை அரைத்து வங்கத்திற்குக் கவசம் செய்து அதன்மேல் எருக்கு சமூலத்தை அரைத்துக் கவசம் செய்து, சீலை செய்து ஓட்டில் வைத்து ஓடுமூடி சீலைமண் செய்து 30 எருவில் புடம் போட்டால் வங்க வெட்டையாகும். வங்க பற்பம் போல் உபயோகிக்கவும்.

அளவு 50 மி.கி - 100 மி.கி

தீ.நோ. சூலை, வெட்டை, மூத்திரக் கிரிச்சரம்

## இரச பற்பம் - முறை 1

தே.பொ. இரசம் 50 கி

செ.முறை சிறியா நங்கையின் சாறுவிட்டு இரசத்தை அரைத்தால் வெண்ணெயாகும். சிறியாநங்கை இலையை அரைத்து இரசத்திற்குக் கவசம் செய்து நெய்த்துணி சுற்றி கொளுத்திவிட வேண்டும். இறுகிப் போனால் மறுபடியும் அவ்வாறே கொளுத்திவிட பற்பமாகும்.

அளவு 16 - 32 மி.கி.

து.ம. தேன், சர்க்கரை, நெய்

தீ.நோ. 21 வகை மேகம், கிரந்தி சுரம், ஈளை, இருமல், தோல் நோய்கள்

## இரச பற்பம் - முறை 2

தே.பொ. இரசம்

செ.முறை பெரிய தேள் கொடுக்கு இலைச்சாற்றில் 6 மணி நேரம் இரசத்தை அரைத்துக் கொள்ள வேண்டும். அதனை நான்கு வில்லைகளாகச் செய்து காய வைத்து சட்டியில் அரைப்படி உப்புப் போட்டு நடுவில் வில்லையை வைக்க வேண்டும். அதன் மேலும் அரைப்படி உப்பு போட்டு சீலை 7 வலுவாகச் செய்து 12 மணி நேரம் (2 விறகு) கொண்டு எரிக்கவும். ஆறியபின்னர் மேலேயுள்ள சட்டியைப் பிரித்துப் பார்க்க பதங்கம் ஏறி இருக்கும்.

அளவு 15-30 மி.கி.

து.ம. தேன், சர்க்கரை, நெய்

தீ.நோ. மேகம், தோல் நோய்கள்

## இரச பற்பம் - முறை 3

தே.பொ. இரசம்

செ.முறை இரசத்தை இம்பூறல் சாற்றில் 9 மணி நேரம் அரைத்து வில்லைசெய்து காயவைத்து ஓட்டில் வைத்துச் சீலை செய்து (காடைப்புடம் ஒரு எருவில்) புடமிட்டால் இரசம் பற்பமாகும்.

அளவு 15-30 மி.கி.

து.ம. தேன், நெய், சர்க்கரை

தீ.நோ. இருமல், ஈளை, சுரம், மேகநோய்

## இரச பற்பம் - முறை 4

தே.பொ. சுத்தி செய்த இரசம் 4 கிராம்
நாட்டுக் கோழி முட்டை 1

செ.முறை நாட்டுக் கோழி முட்டையில் சிறு துளை செய்து அதில் 4 கிராம் இரசத்தை விட்டு மூடி சோறு வடித்தவுடன் அதில் புதைத்து வைக்கவும். இரசம் பற்பமாகும்.

அளவு வேளைக்கு 1 முட்டை வீதம் 3 வேளை சாப்பிடவும்.

தீ.நோ. தாது விருத்தியடையும்.

## இரச பற்பம் - முறை 5

தே.பொ. இரசம் 50 கி

செ.முறை ஒரு பீங்கானில் இரசத்தை விட்டு நாட்டுக்

காட்டாமணக்கின் பாலை அப்பீங்கானில் விட்டு சூரியபுடமாக வைத்தால் பற்பமாகும்.

அளவு 15-30 மி.கி. ; தினம் 2 வேளை; ஐந்து நாள் கொடுக்கவும்.

து.ம. நெய்

தீ.நோ. சூலைகள், வாயு, மேகம்

பத்தியம் போகமாகாது

## இரச வெண்ணெய் பற்பம் - முறை 1

தே.பொ. இரசம் 20 கி.

செ.முறை புங்கமரத்துப் புல்லுருவிக்கு வெந்நீர் தெளித்து இடித்துச் சாறு எடுத்து இரசம் 1க்குச் சாறு 2 பங்கு விட்டு அரைக்கவும். இப்போது வெண்ணையாகும். புங்கமரத்துப் புல்லுருவியின் இலையை அரைத்துக் கவசம் செய்து காடைப்புடம் (ஒரு வரட்டி) போட்டால் பற்பமாகும்.

அளவு 16 முதல் 32 மி.கி.

து.ம. தேன், நெய், சர்க்கரை

தீ.நோ. இருமல், ஈளை, சுரம், மேக நோய் தீரும்

## இரச வெண்ணெய் பற்பம் - முறை 2

தே.பொ. இரசம் 20 கி

செ.முறை இரசத்தைப் பீங்கானில் விட்டு காட்டு மருக்கொழுந்து சாற்றை இரசத்தில் ஊற்றினால் அது இறுகும். பின்னர் காட்டு மருக்கொழுந்து இலையை அரைத்துக் கவசம் செய்து ஒட்டில் வைத்து மேல்மூடி 7 சீலை செய்து காட்டெருவை சாண் அளவு உயரம் அடுக்கிப்புடமிட்டால் பற்பமாகும்.

மேற்கூறிய அளவும் தீரும் நோயும் இதற்குப் பொருந்தும்.

## பாடாண பற்பம்

| | |
|---|---|
| தே.பொ. | வெள்ளைப் பாடாணம் 70 கி |
| செ.முறை | வெள்ளைப் பாடாணத்தைச் சட்டியில் வைத்து சதுரக் கள்ளிப்பாலால் 12 மணி நேரம் சுருக்கிட்டு பின்னர் சதுரக்கள்ளி சுட்ட சாம்பலை இரண்டு படி தண்ணீரில் கரைத்து விட்டு தெளிவிறுத்துக் கொள்ள வேண்டும். அதனை அடுப்பில் வைத்துக் காய்ச்சி உப்பு எடுத்து சதுரக் கள்ளிப்பால் இரண்டு லிட்டரில் மேற்படி சதுரக்கள்ளி உப்பு 35கி இட்டு வெயிலில் காயவைத்தால் தண்ணீராகும். அந்நீரை எடுத்து பாத்திரங்களில் பத்திரப்படுத்த வேண்டும். பாசாணக் கட்டியை எடுத்து எருக்கம்பாலில் தோய்த்து வெயிலில் காய வைக்கவேண்டும். கள்ளிச்சுருகு சுட்ட சாம்பல் இரண்டு படியைச் சட்டியில் போட்டு நடுவே பாசாணக்கட்டியை வைத்து மேல்மூடி 12 மணி நேரம் எரித்தால் பற்பமாகும். |
| அளவு | 4-8 மி.கி. |
| தீ.நோ. | அனைத்து கபநோய்களும் நீங்கும். |
| பத்தியம் | கடும் பத்தியம், உப்பு, புளி நீக்கவும், மோர், தயிர் சோறு, ரொட்டி சாப்பிடவும். |

## இலிங்க பற்பம்

| | |
|---|---|
| தே.பொ. | இலிங்கம் 10 கிராம் |
| செ.முறை | தொட்டால் வாடி (தொட்டால் சுருங்கி) இலைச்சாற்றில் எலுமிச்சஞ்சாறு பிழிந்து கொதிக்க வைத்து, பின்னர் கோவைக்கிழங்கை அரைத்து இலிங்கத்திற்குக் கவசம் செய்து, சீலை செய்து குக்கிடபுடம் (10 வரட்டியில்) போடவேண்டும். பற்பமாகும். |

அளவு 65 மி.கி. தினம் இருவேளை

து.ம. தேன்

தீ.நோ. குன்ம அனற்புண், குளிர்சுரம், வாத கபப் பிணிகள் மேக நோய், நுணாக்காய் கிரந்தி தீரும்.

பத்தியம் பால் சோறு மட்டும்; காரசாரம் கூடாது.

## துருசு பற்பம்

தே.பொ. அரப்பொடி 35 கி
துருசு 35 கி
வீரம் 3 கி

செ.முறை இம்மூன்றையும் குன்மக்குடோரி இலைச் சாற்றில் அரைத்து ஓட்டில் வைத்து மேலோடு மூடி சீலை செய்து நான்கு புடம்போவும். பிறகு எலுமிச்சம் பழச்சாற்றில் அரைத்து ஓட்டில் வைத்து மேலோடு மூடி முழப்புடம் போடவும்.

அளவு 65-130 மி.கி.; இருவேளை

து.ம. பஞ்ச தீபாக்கினி லேகியம்

தீ.நோய் குன்மம்

பத்தியம் போகம் ஆகாது.

## தங்க பற்பம்

தே.பொ. தங்கம் - 4 கிராம்
முள்ளுக் கீரைச்சாறு தேவையான அளவு

செ.முறை தங்கத்தை அரத்தால் ராவி பொடி செய்து கொண்டு, முள்ளுக்கீரைச் சாற்றால் 12 மணி நேரம் அரைத்து வில்லைகளாகச் செய்து உலர்த்தி எடுத்து வைத்துக் கொள்ள வேண்டும். வில்லைகளை ஓட்டிலிட்டு மேலோடு மூடி மூன்று சீலை செய்து முழப்புடமிட பற்பமாகும்.

அளவு 32 மி.கி. - 65 மி.கி. காலை மட்டும்; மூன்று நாள்

து.ம. நெய்

தீ.நோ. தாது விருத்தியுண்டாகும்; அன்னதோடம் தீரும்.

## சாம்பிராணிப் பதங்கம்

தே.பொ. சாம்பிராணி (தேவையான அளவு)

செ.முறை புதுச்சட்டியில் வைத்துக் கொண்டு மேற்சட்டி மூடி உளுந்து அரைத்து சீலை செய்து அடுப்பேற்றி 3 மணி நேரம் தீபாக்கினியாக (1விறகு) எரிக்கவும். மேல் சட்டியில் கம்பி போன்று பதங்கம் ஏறியிருக்கும். அதை எடுத்துச் சிமிளில் அடைத்துக் கொள்ள வேண்டும்.

அளவு 270 மி.கி. இருவேளை.

து.ம. வெற்றிலை

தீ.நோ. தலைவலி, சோகை, சன்னிதோடம், நாவறட்சி, விக்கல், வாந்தி.

## பஞ்சலவண பற்பம்

| | | |
|---|---|---|
| தே.பொ. | இந்துப்பு | 20 கி |
| | கல்லுப்பு | 20 கி |
| | கறியுப்பு | 20 கி |
| | வளையலுப்பு | 20 கி |
| | வெடியுப்பு | 20 கி |

செ.முறை முள்ளங்கிச் சாற்றில் 12 மணி நேரம் அரைத்து வில்லை செய்து காய வைத்து முழப்புடம் போடவும். இப்படி 2 புடமிட்டு எடுத்துக் கொண்டு பொடித்து வைத்துக் கொள்ளவும்.

அளவு 200 மி.கி.

து.ம. தேன், (அல்லது) வெல்லத்தில் கலந்து அருந்தி பிறகு வெந்நீர் குடிக்கவும்.

| | |
|---|---|
| தீ.நோ. | குன்மம், உட்டிண வாயு, செரியாமை, அக்கினி மந்தம் |
| பத்தியம் | போகமாகாது. |

## உப்புப் பற்பம்

| | |
|---|---|
| தே.பொ. | உப்பு 200 மி.கி. |
| செமுறை | உப்பைத் தாழைவிழுதுச் சாறு விட்டரைத்து வில்லை தட்டிக் காய வைத்து ஓட்டில் வைத்து மேலோடு மூடி சீலை மண் இரண்டு செய்து நான்கு வரட்டியில் புடமிட்டால் பற்பமாகும். |
| அளவு | 65-130 மி.கி; இருபொழுது; 6 நாள் |
| து.ம. | 6 கிராம் பசுவெண்ணெயில் குழைத்துச் சாப்பிடவும். |
| தீ.நோ. | எண் வகை குன்மம் |
| பத்தியம் | வெள்ளாட்டுக் கறி சாப்பிடவும், தேங்காய் மற்றும் வாயுப்பண்டம் ஆகாது. |

# கட்டு

பாடாணங்களைத் தனியாகவோ, சேர்த்தோ, சரக்குகளினாலான புகை நீர், செய நீர், இலைச்சாறு, குடிநீர், தேன், முலைப்பால், சில சரக்குகள் சேர்ந்த குழிப்புட நெய், தனிச் சரக்குக்கு குழிப்புட நெய் ஆகிய ஏதேனுமொன்றால் சுருக்குக் கொடுத்து கட்டிக் கொள்வது கட்டு. "மாத்திரைக்கல்" என்றும் இம்முறையைக் கூறுவர்.

## பூரக்கட்டு - முறை 1

| | |
|---|---|
| தே.பொ. | தூய்மை செய்த பூரம் 20 கி<br>கற்பூரவல்லி<br>வெற்றிலை |
| செ.முறை | கற்பூரவல்லியையும் வெற்றிலையையும் சமமாக எடுத்து அரைத்து பூரத்தை அதன் நடுவே வைத்து |

உலர்த்தி சீலை மண் செய்து கொள்ள வேண்டும். உலர்ந்த பின்னர் 1/2 வரட்டியில் மூன்று புடமும் பின் ஒரு வரட்டியில் இரண்டு புடமும் போட்டால் பூரம் கட்டும்.

## பூரக்கட்டு-முறை 2

| | | | |
|---|---|---|---|
| தே.பொ. | பூரம் | 20 | கி |
| | சாம்பிராணி | 15 | கி |
| | கற்பூரம் | 15 | கி |
| | குங்கிலியம் | 15 | கி |

செ.முறை பூரம் நீங்க மற்றவற்றைக் கல்வத்தில் போட்டு தாய்ப்பால் விட்டரைத்து மெழுகு போலாக்கி பூரத்துக்குக் கவசம் கட்டி அதைக் கொளுத்தி எரியவிட வேண்டும். அப்படி இரண்டுமுறை செய்தால் பூரம் கட்டும்.

அளவு கட்டினை உரைத்துக் கொடுக்கவும். 50 முதல் 100 மி.கி.

து.ம. தேன், இஞ்சிச்சாறு

தீ.நோ. சன்னி, சுரம், நாவறட்சி, மலவாத சன்னி தீரும். இடுப்புச் சூலை, எரிசூலை, வாதகுன்மம், காமாலை, ஆறாத விரணம், மேகவியாதி, கீல்வாதம், சொறி சிரங்கு, தலைவலி தீரும்.

குறிப்பு:- இலிங்கக் கட்டுடன் பூரக்கட்டைச் சேர்த்துக் கொடுக்க சிறந்த பலன் கிடைக்கும்.

## கெந்தகக்கட்டு

| | | | |
|---|---|---|---|
| தே.பொ. | கெந்தகம் | 10 | கி |
| | இரசம் | 10 | கி |

செ.முறை இரண்டையும் கற்பூரவல்லிச்சாற்றில் அல்லது கற்பூரவெற்றிலைச் சாற்றில் 12 மணி நேரம் நன்கு அரைத்துக் கொள்ள வேண்டும். முட்டை ஓட்டுக்குள்

வைத்து முட்டையோடு மூடி அதைச் சின்ன குடுவைக்குள் வைத்து மேலோடு மூடி ஒவ்வொரு சீலையாய் செய்து காய வைக்க வேண்டும். இப்படி 7 சீலை செய்து மூன்று வரட்டியில் புடம் போடவும். கெந்தகம் கட்டாகும்.

அளவு தாதுளங்காயளவு கீழே குறிப்பிட்ட இலேகியத்தைச் செய்து கொண்டு அதில் மேற்சொன்ன கட்டைப் பொடித்து வைத்து காலை, மாலை இருவேளை 10 நாட்கள் உண்ணவும்.

து.ம. சுக்கு, மிளகு, திப்பிலி இவை வகைக்கு 35 கிராம் வீதம் எடுத்து கண்டங்கத்தரி சிறுகாஞ்சோறி, முசு முசுக்கை இவற்றின் வேர் (காய்ந்தது) வகைக்கு 35 கிராம்; இந்த ஆறையும் சூரணம் செய்து கொண்டு பனை வெல்லம் 125 கிராம்; நெய் 60 கி. இவற்றைப் பாகு செய்து சரக்குகளைப் போட்டு இலேசியபதம் வரும்போது 30 கிராம் தேன் விட்டு கிண்டி இறக்கிக் கொள்ளவும்.

தீ.நோ. தாது விருத்தி ஏற்படும். பலவகையான நோயகலும்.

## உப்புக்கூட்டு

தே.பொ. உப்பு 35 கி
சூடன் 9 கி

செ.முறை இவ்விரண்டையும், சங்கிலைச் சாறுவிட்டு அரைத்து குகைக்குள் வைத்து ஒடுமூடி சீலை செய்து உலையில் வைத்து நன்றாக ஊதினால் உருகிவிடும். இதனை நன்றாகப் பொடித்துக் கொள்ள வேண்டும்.

அளவு 65-130 மி.கி.

து.ம. தேன்

தீ.நோ. உணவில் வெறுப்பு, உப்பிசம், செரியாமை, மந்தம், குன்மம் நீங்கும்.

## பஞ்ச உப்புக்கட்டு

| | | |
|---|---|---|
| தே.பொ. | இந்துப்பு | 35 கி |
| | கல்லுப்பு | 35 கி |
| | கறியுப்பு | 35 கி |
| | வளையலுப்பு | 35 கி |
| | வெடியுப்பு | 35 கி |

செ.முறை ஒரு கலயத்தின் அடியில் காட்டாமணக்கு இலையை அடுக்கி அதன்மேல் இந்த ஐந்து உப்புகளையும் கலந்து வைக்கவேண்டும். மேலேயும் காட்டாமணக்கு இலையை அடுக்கி சீலை செய்து 15 எருவில் புடம் போடவேண்டும். கட்டாகும். கட்டினைப் பொடித்து வைத்துக் கொள்ளவும்.

அளவு 50 முதல் 100 மி.கி.

து.ம. மோர், வெந்நீர்

தீ.நோ. எண்வகை குன்மம், சூலை; நீர்க்கட்டு, நீரடைப்பு தீரும்.

பத்தியம் அதிக காரம் நீக்கவும்.

## பாடாணக்கட்டு - முறை 1

தே.பொ. பாடாணம் 35 கிராம்

செ.முறை பாடாணத்தை எருக்கம்பாலில் நனைத்துக் காயப் போடவேண்டும். சீலை மண் செய்து குகையில் வைத்து மண்சுவர் ஒரங்களில் உதிர்ந்து கிடக்கும் உப்பு மண்ணை எடுத்துக் கொண்டு வந்து பானையில் முழுதுமாக நிறைத்து அதன்மேல் அந்தக் குகையை வைக்க வேண்டும். பானையை மூடி சீலை செய்து 12 மணி நேரம் எரிக்கவும். கட்டாகும். ஆறவைத்து எடுத்துக் கொள்ளவேண்டும்.

அளவு நோய்க்குத் தக்கவாறும், நோயாளியின் வன்மைக்கேற்பவும் இழைத்துக் கொடுக்கவும்.

துமட. தேன்

தீ.நோ. பல்வகைச் சுரம், சன்னி, யானைக்கால்சுரம், தோற்பிணிகள், சுவாசகாசம், விஷக்கடி, கிரந்தி தீரும்.

## பாடாணக்கட்டு - முறை 2

தே.பொ. பாடாணம் - 35 கி.

செ.முறை நாயுருவிச் சாம்பலில் அருநெல்லி இலைச் சாறுவிட்டு ஒரு சுலயத்தில் பாதி போட்டு நடுவில் பாசாணக்கட்டியை வைத்து மேலும் சாம்பல் வைத்து 12 மணி நேரம் எரித்துக் கொள்ளவும். கட்டும்.

அளவு நோய்க்குத் தக்கவாறும் நோயாளியின் வன்மைக்கேற்பவும் இழைத்துக் கொடுக்கவும்.

துமட. தேன்

தீ.நோ. பல்வகைச்சுரம், சன்னி, யானைக்கால் சுரம், தோற்பிணிகள், சுவாசகாசம், விஷக்கடி, கிரந்தி தீரும்.

## பாடாணக்கட்டு - முறை 3

தே.பொ.

| | | |
|---|---|---|
| பாடாணம் | 50 | கி |
| கறியுப்பு | 35 | கி |
| சீனக்காரம் | 35 | கி |
| வெடியுப்பு | 18 | கி |
| நவச்சாரம் | 9 | கி |
| அரிதாரம் | 9 | கி |
| பூநீர் | 9 | கி |

செ.முறை பாடாணம் தவிர்த்த ஏனைய சரக்குகளைக் கல்வத்திட்டு கள்ளிப்பால் விட்டு நன்றாக அரைத்துக் கொள்ளவேண்டும். அதனை ஆறு சம பங்காகப் பிரித்துக் கொண்டு ஒரு உருண்டையைப்

பாடாணத்திற்குக் கவசம் செய்து சீலை செய்து ஒரு விரற்கடை மணல் போட்டு அதன் மேல் சட்டியை மணலினால் மூடி ஒருவரட்டியில் ஐந்து முறை புடம் போடவும். புகைச்சல் நின்றால் ஆறாவது முறையாகக் கல்லுப்பு, சுண்ணாம்பு 1/4 பங்கு சேர்த்துக் கொள்ளவும். ஆறாவது முறை புடம் போடவும். மொத்தம் 6 தடவை புடமிட வேண்டும்.

அளவு வாதவேலைக்கு வெள்ளீயம் 10க்கு ஒன்று கொடுக்கவும். கட்டினை நோய்க்குத் தக்கவாறு இழைத்துக் கொடுக்கவும்.

தீ.நோ. சகல நோய்களும் தீரும்.

## பாடாணக்கட்டு - முறை 4

தே.பொ. பாடாணம்

செ.முறை திருகுகள்ளி மரத்தினைக் குடைந்து பாடாணத்தை அதற்குள் வைத்து மூடிவிட வேண்டும். ஒரு மாதம் கழிந்த பின்னர் எடுத்து திருகுகள்ளிப் பாலில் துணியை நனைத்து அதன் மேலே சுற்றி ஒரு வரட்டியில் புடம் போட்டால் பாடாணம் கட்டும்.

மேற்கூறியபடி பயன்படுத்தவும்.

## பாடாணக்கட்டு - முறை 5

தே.பொ. தூய்மை செய்த பாடாணம் 35 கி

செ.முறை திருகுகள்ளிமரத்தைக் குடைந்து அதற்குள் பாடாணக் கட்டியினை வைத்து சக்கையினால் மூடி 48 நாட்கள் வைக்கவும். இப்படி மூன்றுமுறை செய்தால் பாடாணம் கட்டும். கட்டினைப் பொடித்து வைத்துக் கொள்ளவும்.

அளவு 4 முதல் 8 மி.கி.

| | |
|---|---|
| து.ம. | தேன், இஞ்சி, சுரசத்தில் இழைத்துக்கொடுக்கவும். |
| தீ.நோ. | சகல சுரங்களும் தீரும். |
| பத்தியம் | கஞ்சி, ரொட்டிப்பால் கொடுக்கவும். |

## சாதிலிங்கக் கட்டு - முறை 1

| | |
|---|---|
| தே.பொ. | சாதிலிங்கம் 35 கி |
| செ.முறை | இலிங்கக் கட்டியைச் சட்டியில் வைத்து பன்றி நெய்யால் 12 மணி நேரம் சுருக்குக் கொடுக்கக் கட்டும். அதனை எடுத்து சிறு கலயத்தில் தலைமயிரை அழுத்தமாக வைத்து அதன் நடுவே இலிங்கம் வைத்து சிறுபுடமாக 10 புடம் போடவும். உருகி இறுகி முழுமையாகக் கட்டும். |
| அளவு | நோய்க்குத் தக்கவாறு இழைத்துக் கொடுக்கவும். |
| தீ.நோ. | அனைத்து நோய்களும் தீரும். |
| பத்தியம் | போகமாகாது உப்பு, புளி தள்ளவும். |

## சாதலிங்கக்கட்டு - முறை 2

| | | |
|---|---|---|
| தே.பொ. | சாதிலிங்கம் | 35 கி |
| | பளிங்குச் சாம்பிராணி | 35 கி |
| | வெள்ளை வெங்காயச்சாறு | $5^{1/2}$ லி. |

| | |
|---|---|
| செ.முறை | 5.6 மி.லி வெள்ளை வெங்காயச்சாற்றைச் சாராயக் குப்பியில் ஊற்ற வேண்டும். 35 கி. பளிங்குச் சாம்பிராணியை அதில் பொடித்துப் போட்டு 3 நாட்கள் வெயிலில் வைத்து நான்காம் நாள் பீங்கான் தட்டில் இலிங்கக் கட்டியை வைத்து 12 மணி நேரம் சுருக்கு கொடுக்கக் கட்டும். |
| அளவு | காலை மாலை பத்து அல்லது 20 நாள் (நோயின் தன்மைக்கேற்ப) |
| து.ம. | கட்டினை தேன் (அல்லது) இஞ்சிச்சாற்றில் இழைத்து பரங்கிப்பட்டைத்தூள் சேர்த்துக் கொடுக்கவும். |

தீ.நோ. சன்னிதோஷம், சுரம், மேகம், ஊரல், கள்ளிப்பூச்கிரந்தி தீரும்.

பத்தியம் புளி, புகையிலை, வாய்வுப் பொருட்களைத் தள்ளவும்.

## இலிங்கக்கட்டு - முறை 3

| | | |
|---|---|---|
| தே.பொ. | சாதிலிங்கம் | 35 கி |
| | கெந்தகம் | 35 கி |
| | சாம்பிராணி | 35 கி |

செ.முறை சட்டியில் இலிங்கக் கட்டியை வைத்து மற்ற சரக்குகளைப் பொடித்து 12 மணி நேரம் சுருக்குக் கொடுக்க கட்டும்.

அளவு நோய்க்குத் தக்கவாறு கீழ்க்கண்ட துணை மருந்துகளில் காலை, மாலை இரண்டுவேளை இழைத்துக் கொடுக்கவும்.

து.ம. இஞ்சிச்சாறு, சுக்குக் குடிநீர், பனைவெல்லம்

தீ.நோ. சன்னிதோடம், காய்ச்சல்

## இலிங்கக் கட்டு - முறை 4

| | | |
|---|---|---|
| தே.பொ. | இலிங்கம் | 35 கி |
| | செம்புஅரப்பொடி | 35 கி |

செ.முறை செம்புப் பொடியை எலுமிச்சம்பழச் சாற்றில் 12 மணி நேரம் அரைத்து கவசம் செய்து காய வைத்தெடுத்துக் கொள்ளவேண்டும். ஒரு சட்டியில் 4 படி உமிபோட்டு நடுவில் இலிங்கத்தை வைத்து அதன் மேலே 2 படி உமிபோட்டு புடம் போட்டால் இலிங்கம் கட்டும்.

அளவு நோய்க்குத் தக்கவாறு தக்க அனுபானத்தில் இழைத்துக் கொடுக்கவும்.

## இலிங்கக் கட்டு - முறை 5

தே.பொ. இலிங்கம் 20 கி

செ.முறை புதுத் தோண்டிக்குச் சாம்பிராணி வாசனை காட்டி, ஊற்றுத் தண்ணீர் நிரப்பி இலிங்கத்தை தோலாந்திரமாக கட்டி தோண்டிக்குள் போட வேண்டும். காற்றில்லாத இடத்தில் 10 நாட்கள் வைத்து, பின்னர் காட்டு முள்ளங்கிச் சாறு, பச்சைப் புகையிலைச் சாறு இவற்றைச் சமபாகமாகச் சேர்த்துக் கொள்ள வேண்டும். ஓட்டில் அப்பிரகம் வைத்து அதன் நடுவில் இலிங்கத்தை வைத்து 12 மணி நேரம் மேற்கூறப்பட்ட இரண்டு சாறுகளில் சுருக்கு கொடுக்கக் கட்டும்.

அளவு நோய்க்குத் தக்கவாறு தக்க அனுபானத்தில் இழைத்துக் கொடுக்கவும்.

## இலிங்கக்கட்டு - முறை 6

தே.பொ. தூய்மை செய்த இலிங்கம் 2 கி

செ.முறை புரசங்காய் தயிலத்தில் 3 மணிநேரம் சுருக்கு கொடுக்க இலிங்கம் கட்டும்.

அளவு நோய்க்குத் தக்கவாறு கீழ்க்கண்ட அனுபானத்தில் இழைத்துக் கொடுக்கவும்.

து.ம. தேன், இஞ்சிச்சாற்றில் கொடுக்கவும்.

தீ.நோ. வாயு, சன்னி, தோடம். மாரடைப்பு, சூலை, பாண்டு, சோகை தீரும்.

பத்தியம் அரிசிக் கஞ்சி, ரொட்டிப் பால்

## சீனக்காரக் கட்டு

| | | |
|---|---|---|
| தே.பொ. | சீனக்காரம் | 50 கி |
| | வெடியுப்பு | 4 கி |
| | தாய்ப்பால் | (தேவையான அளவு) |

குப்பைமேனிச்சாறு - தேவையான அளவு
உவர் மண் 1 படி

செ.முறை சீனக்காரத்தைக் குப்பைமேனிச் சாற்றில் 2 நாள் ஊறவைத்து, கொல்லன் உலையில் வைத்து ஊதவேண்டும். அது சுண்ணமானபின் எடுத்து அதனுடன் தாய்ப்பால் விட்டரைத்து வெடியுப்பையும் சேர்த்து கெட்டியாகக் கவசம் செய்ய வேண்டும். உவர்மண்ணைச் சட்டியிலிட்டு இதனை நடுவில் வைத்து அடுப்பேற்றி 3 மணி நேரம் எரிக்க வேண்டும். ஆறிய பின் கவசத்தைப் பிரித்து மறுபடியும் தாய்ப்பால் விட்டரைத்து கவசம் செய்து உவர் மண்ணில் வைத்து 3 மணி நேரம் எரிக்க வேண்டும். மூன்றாம் முறை எருக்கம்பாலில் அந்தச் சுண்ணத்தை அரைத்து சாரத்துக்குக் கவசம் செய்து முன்போல் உவர் மண்ணில் 3 மணி நேரம் எரித்துப் பொடித்துக் கொள்ளவும்.

அளவு 65 மி.கி.

து.ம. கருப்புக் கட்டி (பனைவெல்லம்)

தீ.நோ. குன்மம்.

## நவச்சாரக் கட்டு

தே.பொ. வெடியுப்புத்தூள் - தேவையான அளவு
தாளகம் - தேவையான அளவு
நவச்சாரக்கட்டி 35 கி

செ.முறை ஒரு சட்டியில் 4 விரல்கடை அளவுக்கு மணல் போட்டுக் கொள்ள வேண்டும். அதன்மேல் ஓலைச் சுருள் வைத்து வெடியுப்புத் தூளில் பாதியை சுருளின் மேல் போட வேண்டும். தாளகத்தை உமிழ்நீரால் அரைத்துப் பூசிக் காய்ந்த நவச்சாரக் கட்டியை வைத்து, அதன்மேலும் வெடியுப்புத்தூளைப் போட்டுக் கொள்ள வேண்டும். மேலே மணல் போட்டு சீலை செய்து 3 மணிநேரம்

கமாலாக்கினியாக (1 விறகு கொண்டு) எரித்தால் நவச்சாரம் கட்டும். கட்டினைப் பொடித்துக் கொள்ளவும்.

அளவு 50 முதல் 100 மி.கி.

து.ம. வெண்ணெய்

தீ.நோ. நீர்ச்சுருக்கு, வெள்ளை, சதையடைப்பு, 21 வகை மேகம் தீரும்.

## சுண்ணம்

பாதரசம், பாடாணம், உலோகங்கள் இவற்றைத் தனியாகவோ, கலந்தோ கல்வத்திலிட்டு சாறுகள், செய நீர், புகை நீர் இவற்றில் ஒன்றை விட்டு அரைத்துருட்டி உலர்த்தி மூசையிலிட்டுச் சீலை செய்துலர்த்தி கரி நெருப்பிலிட்டு ஊதி எடுத்து ஆற வைத்துப் பூத்தபின் எடுத்துக்கொள்வது.

## வங்கச் சுண்ணம்

தே.பொ. சுத்திசெய்த மெல்லிய வங்கத் தகடுகள்
வேம்புச் சாறு
சிறுகீரைச் சாறு

செ.முறை முற்றிய வேப்பம்பட்டை கொண்டு வந்து நையஇடித்து ஒரு கோணியில் பரவலாக வைக்க வேண்டும். அதன் மேல் வங்கத் தகடுகளை வைத்து மீண்டும் தகட்டின் மேல் வேப்பம் பட்டைத் தூளைப் பரப்ப வேண்டும். கவனமாகச் சுருட்டிக் கொண்டு 7 சீலை மண்மிக வலுவாகச் செய்துகொள்ளவேண்டும். 100 வரட்டி கொண்டு எரித்தால் அது பற்பமாகும். பின்பு வேம்பின் சாறு, சிறுகீரைச்சாறு, எடுத்துக் கொண்டு, வங்கபற்பத்தின்மேல் ஊற்றி கல்வத்திலிட்டு 1 நாள் வரை நன்றாக அரைத்து வில்லைசெய்து ஓட்டிலிட்டு

மேல்மூடி சீலை மண்செய்து வரட்டி கொண்டு புடம் போடவேண்டும். சுண்ணமாகும்.

அளவு 65 மி.கி. வீதம் காலை, மாலை ஆறு வேளை, மூன்று நாள்

து.ம. வெண்ணெய்

தீ.நோ. மேகவகை அனைத்தும் குன்மமும்,

## கெந்தகச் சுண்ணம்

தே.பொ. கெந்தகக்கட்டி 35 கி
மருதம்பட்டைச் சாம்பல் 2 கி.கி

செ.முறை ஒரு சட்டியில் பாதி சாம்பல்போட்டு கெந்தகக்கட்டியை வைத்து மீதிச் சாம்பலை மேலே போட்டு 3/4 மணி நேரம் காடாக்கினியாக (3 விறகு) தீயெரிக்கவேண்டும். ஆறிய பின்னர் கொடி வேலிவேர்ப்பட்டையை நாரத்தங்காயளவு அரைத்து அதற்குள் கட்டியை வைத்து சீலைசெய்து 12 எருவில் புடம் போட பற்பமாகும். சுண்ணச்சீலை செய்தால் சுண்ணமாகும்.

அளவு 30 முதல் 50 மி.கி.

து.ம. தேன், நெய்

தீ.நோ. மேகம், தோற்பிணிகள்

பத்தியம் சுரப்பான் பண்டங்களை விலக்கவும்.

## நாகச் சுண்ணம் - முறை 1

தே.பொ. நாகம் 35 கி

செ.முறை இலுப்பை எண்ணெயில் நாகத்தை 7 முறை உருக்கிக் கொள்ள வேண்டும். தகடாகத் தட்டி துத்தி இலை, பருத்தி இலை இரண்டையும்

சமமாகச் சேர்த்து அரைத்து தேங்காயளவு கவசம் செய்து 5 சீலை செய்து காயவைத்துக் கொள்ளவேண்டும். உருண்டையின் கீழும், மேலும் புளியம்புறணி வைத்து 1000 வரட்டியில் புடமிட்டால் நாகம் சுண்ணமாகும்.

அளவு 10 முதல் 30 மி.கி.

து.ம. வெண்ணெய், கருணைலேகியம்

தீ.நோ. நவமூலம், பேதி, ஈரல் வீக்கம், மேகம், கபம், குன்மம் தீரும், தாது விருத்தியாகும்.

## நாகச் சுண்ணம் - முறை 2

தே.பொ. நாகம் 35 கிராம்
முட்டை வெண்கரு 105 கி

செ.முறை நாகத்தினைச் சுத்தம் செய்து முட்டை வெண்கருவைவிட்டு 12 மணிநேரம் அரைத்து வில்லைசெய்து ஓட்டில் வைத்து 5 சீலை செய்து முப்பத்தாறு வரட்டியில் புடம் போடச் சுண்ணமாகும்.

அளவு 10 முதல் 30 மி.கி

து.ம. வெண்ணெய், கருணைலேகியம்

தீ.நோ. நவமூலம், பேதி, ஈரல்வீக்கம், மேகம், கபம், குன்மம் தீரும். தாது விருத்தியாகும்.

## அண்டச் சுண்ணம்

தே.பொ. முட்டை 1

செ.முறை முட்டையைப் பொத்தல் செய்து அதனுள் குப்பைமேனிச்சாறு விட்டு, குப்பைமேனி இலையை அரைத்துக் கவசம் செய்ய வேண்டும். ஒரு நாள் கழிந்த பின்னர் 7 சீலை செய்து பத்து வரட்டியில் புடம் போடவும். சுண்ணமாகும்.

அளவு 50 முதல் 100 மி.கி

து.ம. தேன், திரிகடுகுச் சூரணம்

தீ.நோ. வாததோடம், விரணம், கபப்பிணி நீங்கும்.

## கருவங்கச் சுண்ணம் - முறை 1

தே.பொ. கருவங்கம் (தேவையான அளவு)

செ.முறை கருவங்கத்தை இலுப்பை எண்ணெயில் 7 முறை உருக்கி தகடாக்கிக் கொள்ளவும். பூதவிருட்சப் பட்டையை இடித்து ஓட்டில்வைத்து அதன்மேல் கருவங்கத்தகடுகளை வைத்து அதன்மேலும் இடித்த பட்டைகளை வைத்து ஓடு மூடி 7 சீலைமண் செய்து 1000 வரட்டியில் புடம் போட சுண்ணமாகும்.

அளவு அளவு 8 முதல் 16 மி.கி. தினம் 2 வேளை உணவிற்குப் பின்னர் சாப்பிடலாம்.

து.ம. வெண்ணெய் அல்லது பனை வெல்லம்

தீ.நோ, குன்மம், வாதநோய்கள், சூலை, குட்டம், பெருவயிறு, பாண்டு, புற்றுநோய் தீரும்.

குறிப்பு: புற்றுநோய்க்கு தாமிர பற்பமும் வங்க சுண்ணமும் சமஎடை கலந்து வெண்ணெயில் கொடுக்க பூரணசுகம் கிட்டும் என்பது பல நூல் வாயிலாக அறியமுடிகிறது. இது ஆராய்ச்சிக்குரியது.

## கருவங்கச் சுண்ணம் - முறை - 2

தே.பொ. கருவங்கம்
வயல் நண்டு

செ.முறை கருவங்கத்தை 7 முறை இலுப்பை எண்ணெயில் உருக்கிக் கொள்ள வேண்டும். 8 ஆவது முறை தண்ணீரில் உருக்கிக் கொள்ள வேண்டும். வயல் நண்டுகளை இடித்து ஒரு தோண்டியில் போட்டுக்

கொள்ள வேண்டும். ஈசலின் இறகு போல மெல்லியதாக வங்கத்தைத் தகடாக்கிக் கொள்ளவேண்டும். தகடுகளை இடித்து நண்டுத்தூளின் மேல் வைத்து மேலோடு மூடி 7 சீலை மண் செய்து கொண்டு காற்றோட்டம் அதிகமில்லாத இடத்தில் வைத்து 1000 வரட்டியில் புடமிட்டால் சுண்ணமாகும்.

அளவு 15மி.கி - 30மி.கி

தீ.நோ. மேகம்

## வங்கச்சுண்ணம்

தே.பொ. வங்கம் 50 கி
முட்டைவெண்கரு 150 கி

செ.முறை வங்கத்தை உருக்கி கழிவு நீக்கிக்கொள்ளவேண்டும். இதனை மெல்லிய தகடாகத் தட்டி சிறு துண்டுகளாகச் செய்து கொள்ளவேண்டும். வங்கத்தையும், முட்டை வெண்கருவையும் 12 மணிநேரம் அரைத்து வில்லை செய்து உலர்த்தி எடுத்துக் கொள்ள வேண்டும். ஒட்டில் வைத்து 5 சீலை மண் செய்து முழப்புடம் போட்டால் சுண்ணமாகும்.

அளவு 15மி.கி - 30 மி.கி

தீ.நோ. சீல்வாயு

## வெள்வங்கச்சுண்ணம்

தே.பொ. வெள்வங்கம் 250 கி

செ.முறை 5 பாத்திரங்களில் தனித்தனியே கொடிக்கள்ளிச்சாறு 400 மிலி விட்டு உருக்கி, எடுத்துக்கொள்ள வேண்டும். ஆலங்கட்டையை 1 மீட்டர் உயரத்திற்கு எடுத்துக்கொண்டு, கட்டையை நடுவிலே குடைந்து மாவிலிங்கம் இலையை அரைத்து வங்கத்தை மூடி

சுட்டைக்குள் வைத்து 25 சீலை செய்து கொள்ளவும். சுட்டை அளவைப்போல 2 மடங்கு பெருங்குழிவெட்டி எருபோட்டு நடுவில் சுட்டை வைத்து எரு அடுக்கி தரைமட்டம் புடம் போட்டால் சுண்ணமாகும்.

அளவு 65 மி.கி.

து.ம. பசுநெய்

தீ.நோ. குட்டம், மேகம், தோல் நோய்கள்

பத்தியம் போகமாகாது

## துருசுச் சுண்ணம் - முறை 1

| | | |
|---|---|---|
| தே.பொ. | கல்லுப்பு | 35 கி |
| | வெடியுப்பு | 35 கி |
| | சுருவங்கம் | 35 கி |
| | இரசம் | 18 கி |

செ.முறை சுருவங்கம் 35 கி எடுத்து உருக்கிக் கொண்டு உருகுமுகத்தில் 18 கிராம் இரசத்தையும் சேர்த்து தொந்தித்து எடுத்துக்கொள்ள வேண்டும். இவற்றோடு கல்லுப்பு, வெடியுப்பு, இரண்டையும் சேர்த்து கல்வத்திலிட்டு அரைத்துக் கொள்ளவேண்டும். மூன்றுமுறை புடம் போட்டால் கடுங்காரச் சுண்ணமாகும். 35 கி. துருசுக்கட்டியை நல்லெண்ணெயில் தோய்த்து மேற்படி சுண்ணத்தில் கலந்து 1 எரு புடம் போட்டால் சுண்ணமாகும்.

அளவு 15 மி.கி-30 மி.கி

தீ.நோ. குன்மம்

## துருசுச் சுண்ணம் - முறை 2

தே.பொ. துருசு 20 கி

செ.முறை துருசை கரும்புச் சாற்றில் விட்டு நான்குமுறை

சூரியபுடம் போடவும். வல்லாரையை அரைத்துக் கவசம் செய்து மூன்று சீலை செய்து மூடி உமியில் புடம் போடவும். சுண்ணமாகும்.

அளவு 15-30 மி.கி.சுண்ணம்

து.ம. பசுநெய், வெற்றிலைச்சாறு

தீ.நோ. தொழுநோய், மேகநீர்

பத்தியம் உப்பு, புளி நீக்கி, கஞ்சி காய்ச்சிக் குடிக்கவும்

குறிப்பு: குட்டத்திற்கு பசுநெய்யில் கொடுக்கவும். இம்மருந்துண்ணும் போது உடம்பெரிவு கண்டால் கழுத்துவரை தண்ணீரில் உட்கார வைக்கவும். உடல் குளிர்ந்தவுடன் நெய் இறைச்சி சாதம் நிரம்பக்கொடுக்கவும்

மேகநீர் வற்ற வெற்றிலைச் சாற்றில் கொடுக்கவேண்டும். துடைப்பக் குச்சியைத் தண்ணீரில் நனைத்து உதறிவிட்டு சுண்ணம் தொட்டுக் கலக்கிக்கொடுக்கவும். உடம்பு எரிச்சல் காணும் போது சுமார் 1/2 கிலோ இறைச்சியை நெய்யில் வறுத்து உப்பு சேர்த்துச் சாப்பிடவும். எரிச்சல் நின்றதும் இளவெந்நீரில் குளிக்கவும்.

## துருசுச் சுண்ணம் - முறை 3

தே.பொ. துருசு 20 கி.

செ.முறை சிறுபுள்ளடியை அரைத்துத் துருசுக்குக் கவசம் செய்து 3 சீலை செய்து காடைப்புடம் (1 வரட்டி புடம்) போட்டால் துருசு நீற்றுப்போகும். பச்சை நின்றால் மறுபடி அந்த சாற்றினாலேயே அரைத்து வில்லைசெய்து காயவைத்து ஓட்டில் மேலோடு மூடி 3 சீலை செய்து காடைப்புடம் (ஒரு வரட்டி) போட்டால் சுண்ணமாகும்.

அந்த சுண்ணத்தை ரசம் 10 பங்குக்கு ஒன்று போட்டு அரைத்தால் வெண்ணெயாகும். இதைப்

பொன் ஊமத்தங்காய்க்குள் வைத்துக் கோழிப்புடம் (10 வரட்டி) போடவும்.

அளவு 15-30 மி.கி.

தீ.நோ. குன்மம்

## துருசுச் சுண்ணம் - முறை 4

தே.பொ. துருசு 50 கி

செ.முறை சிறுபுள்ளடி அல்லது ஒட்டுப்புல் சாறெடுத்து துருசை அதனுள் 50 முறை தோய்த்தெடுக்கவேண்டும். தினமும் காயப்போட்டு தும்பைப்பூ போல மலரும் போது எடுத்துக்கொள்ளவேண்டும். சிறுபுள்ளடி இலையை நாரத்தங்காயளவு அரைத்து துருசுக்குக் கவசம் செய்து சீலை மண் செய்து முக்கால் ஜான் வரட்டியில் புடம் போட்டால் துருசு சுண்ணமாகும்.

அளவு 15-30 மி.கி

து.ம. சயத்திற்கு சித்தரத்தை சுரசம், மேகத்திற்கு பனங்கருப்பட்டி

தீ.நோ. சயம், மேகம் தீரும்

பத்தியம் புளி தவிர்க்கவும்.

## தாளகச் சுண்ணம்-முறை 1

தே.பொ. கவிழ் தும்பை சமூலம்
தாளகம்

செ.முறை கவிழ்தும்பையின் வேர், இலை பட்டை போன்ற அனைத்தையும் இடித்துச் சாறு பிழிந்து கொள்ளவேண்டும். அதில் தாளகத்தை மூன்றுநாள் ஊறப்போட வேண்டும். பின்னர் கவிழ் தும்பையின் இலையை அரைத்துஅதற்குக் கவசம் செய்து ஒரு வரட்டியில் புடம் போட்டால் சுண்ணமாகும்.

அளவு 16-32 மி.கி

தீ.நோ. சிலேட்டும நோய்கள்

## தாளகச் சுண்ணம் - முறை 2

தே.பொ. தாளகம் 35 கி
முப்பு 2 கி

செ.முறை விஷ்ணுகரந்தைச் சாற்றில் முப்புவைப் போட்டுக் குழப்பி தெளிவெடுத்து தாளகத்திற்குச் சுருக்குக் கொடுக்க வேண்டும். சுண்ணமாகும்.

அளவு 5 முதல் 10 மி.கி

து.ம. தேன், நெய்

தீ.நோ. சிறப்பாகக் கபப்பிணிகள் தீரும், சளி, சுவாசம், காசம், ரத்த காசம் தீரும்.

## இரசச்சுண்ணம்

தே.பொ. இரசம்

செ.முறை இரசத்தைக் கற்பூரவல்லி இலைச்சாற்றில் நீர் சுண்டுகிற வரைக்கும் அரைத்து வில்லை செய்து கொள்ள வேண்டும். பின்னர் தொட்டால் சுருங்கி இலையையரைத்துக் கவசம் செய்து ஒட்டில் வைத்து சீலைசெய்ய வேண்டும். இதனை ஒரு வரட்டியில் புடமிட சுண்ணமாகும்.

அளவு 10-20 மி.கி. காலை, மாலை இருவேளை

7 முதல் 10 நாட்கள்

து.ம. நெய்

தீ.நோ. வெண்குட்டம், கருங்குட்டம், சுரம்

## பாடாணச் சுண்ணம் - முறை 1

தே.பொ. பாடாணம் 140 கி

செ.முறை சட்டியில் அப்பிரகம் வைத்து அதன்மேல் பாடாணக் கட்டியை வைத்து காடாக்கினியாக (ஒரு விறகால்) எரியும் போது ஆடுதின்னாப்பாளைச் சாற்றால் 9 மணி நேரம் சுருக்குக் கொடுக்க வேண்டும். புலிதொடக்கி இலையை அரைத்து மேற்படி கட்டிக்குக் கனமாகக் கவசம் செய்து சீலை மூன்று செய்து காயவைத்து குழிவெட்டி 10 எருவில் புடமிட்டு எடுக்கவும். இப்போது பாடாணம் சுண்ணமாகியிருக்கும்.

இது மிகவும் அரிதான முறையாக உள்ளது. அதாவது பாடாணச் சுண்ணம் என்பது புதியதாக உள்ளது.

அளவு 4 முதல் 8 மி.கி

து.ம. வெண்ணெய், பனைவெல்லம்

தீ.நோ. வன்மையைத் தரும். சகல விதமான சுரம், முறை சுரம், சன்னி, கிரந்தி, யானைக்கால் சுரம், தோற்பிணிகள், சுவாசகாசம் தீரும்

பத்தியம் புளி, புகை ஆகாது

## பாடாணச் சுண்ணம் - முறை 2

தே.பொ.

| | |
|---|---|
| பாடாணம் | 50 கி |
| கல்சுண்ணம் | $1^{1/4}$ கி |
| முட்டை | 5 |
| குஞ்சு பொரித்த முட்டைத்தோல் | 12 |

செ.முறை வெள்ளாவியின் நடுவில் பாடாணத்தை வைத்து அவித்தெடுத்துக் கொள்ளவேண்டும். குஞ்சு பொரித்த முட்டைத்தோல் பன்னிரண்டு எடுத்து எருக்கம்பால்விட்டு அரைத்துக் கொள்ள வேண்டும்.

அதை வேறு 5 முட்டைக்குக் கவசம் செய்து காயவைத்து சட்டியில் வைத்து சீலை மண் செய்து 1000 வரட்டியில் புடம்போட்டால் சுண்ணமாகும். சுண்ணத்தைக் கள்ளிப்பால் விட்டு அரைத்துக் கொள்ள வேண்டும் இதனைப் பாடாணத்திற்குக் கவசம் செய்து பானையோட்டினை அடுப்பேற்றி அதிலிட்டு புரட்டி, புரட்டி சூடுகாட்ட வேண்டும். வெடிக்கத் தொடங்கினால் எடுத்துவிட வேண்டும். இப்படி மூன்றுமுறை செய்யவேண்டும். நான்காவது முறை கவசம் செய்து கல்சுண்ணம் 1 1/4 கிலோ எடுத்துக்கொண்டு கல்வத்தில் பாதிபோட்டு மேலே பாடாணம் வைத்து அதன் மேலே மீதி சுண்ணத்தையிட்டு சீலை மண் செய்து கொள்ளவேண்டும். முக்கால் முழமளவு வரட்டி அடுக்கி புடமிட பாடாணம் சுண்ணமாகும்.

பின்னர்

| | | |
|---|---|---|
| வெள்ளி | 4 | கி |
| வெள்ளி நிமிளை | 4 | கி |
| இரசம் | 6 | கி |
| பாடாணச்சுண்ணம் | 16 | கி. |

இந்நான்கையும் சேர்த்து தாய்ப்பால் அல்லது பசும்பால்விட்டு அரைத்து 5 வில்லைகளாகச் செய்து காயவைத்து சட்டியில் வைத்து மூன்று சீலைசெய்து முக்கால் முழம் புடம் போடவும். சுண்ணமாகும். இது செம்பு 10 க்கு சுண்ணம் 1 கொடுக்கவும். இதைத் தக்க அளவில் தகுந்த அனுபானத்துடன் வழங்க பற்பல நோய்கள் தீரும்.

## வெடியுப்புச் சுண்ணம் - முறை 1

தே.பொ. வெடியுப்பு

செ.முறை வெடியுப்பின்மீது உத்தாமணிப்பால் 8 நாட்கள் ஊற்றி காய வைக்க வேண்டும். கஞ்சா இலையை அரைத்துக் கவசம் செய்து முழமளவு உயரத்திற்கு வரட்டியில் புடம் போட்டால் வெடியுப்பு சுண்ணமாகும்.

அளவு 50 முதல் 130 மி.கி

து.ம. முள்ளிச்சாறு, இளநீர், சிறுபீளைச்சாறு

தீ.நோ. நீரடைப்பு நீர்க்கட்டு, நீர் எரிச்சல் தீரும்

குறிப்பு: நீர் அதிகம் இறங்கினால் இரச செந்தூரம்-குன்றி எடையைத் தேனில் இழைத்துக் கொடுத்தால் நிற்கும் என நூல்களில் காணப்படுவது ஆராய்ச்சிக்குரியது.

## வெடியுப்புச் சுண்ணம் - முறை 2.

தே.பொ. வெடியுப்பு 35 கி

செ.முறை இதனை முப்பிரண்டைச் சாற்றில் 6 மணி நேரம் சுருக்குக் கொடுத்து மேற்படி பிரண்டையை அரைத்து 2 விரற்கடை கனத்திற்குக் கவசம் செய்து நிழலில் காய வைத்து 5 சீலைசெய்து நிழலில் காயவைத்து 2 வரட்டியில் புடம் போடவும்.

அளவு 130 மி.கி; நோய் தீரும்வரை

து.ம. பசுநெய்

தீ.நோ. பித்தம், குன்மம், வாந்தி, அரோசிகம், நீர்க்கட்டு தீரும்

பத்தியம் மீன் கருவாடு, கோழி, நீக்கவும். போகமாகாது.

## கறியுப்புச் சுண்ணம்

தே.பொ. கறியுப்பு 250 கி
முட்டையோடு 63 கி

செ.முறை இவ்விரண்டையும் சேர்த்து உமிழ்நீரால் 3 மணிநேரம் அரைத்து வில்லைசெய்து காயவைத்து ஒட்டில்வைத்து சீலைமண் மூன்று செய்து முழப்புடம் போட்டால் சுண்ணமாகும்.

அளவு 65-130 மி.கி. தினம் 3 வேளை; மூன்று நாளைக்கு கொடுக்கவும்.

து.ம. தேன்

தீ.நோ. வயிற்றுவலி, செரியாமை, மந்தம், உட்டிணவாயு;

# நசியமிடல்

சரக்குகளைச் சாறுகளால் அரைத்து மாத்திரையாக்கி தேவையானபோது துணியில் முடிந்து தாய்ப்பால், ஏதேனும் ஒரு சாறு இவற்றில் ஊற வைத்து மூக்கில் பிழிவது. தனி இலைகளை மற்றும் பூக்களைக் கசக்கி மூக்கில் விடுவது. தைலம் முதலியவற்றை நாசியில் விடுவதுமாம்.

## வெங்காய நசியம்

தே.பொ. பச்சரிசி உமி 4 கி
வெங்காயம் 12 (சிறியது)

செ.முறை மேற்கூறப்பட்டுள்ள இரண்டையும் இடித்து துணியில் கட்டி எடுத்துக்கொள்ள வேண்டும். நாசியில் சாற்றைப் பிழிந்து விடவேண்டும்.

அளவு ஒரு துளி; மீண்டும் வருமானால் இருநாசியிலும் ஒவ்வொரு துளி விடவேண்டும்.

தீ.நோ. காக்கை வலிப்பு

## இலுப்பைப் பொடி நசியம்

தே.பொ. இலுப்பைப் பிண்ணாக்கு (அரைப்பு)

செ.முறை பிண்ணாக்கை நன்கு அரைத்து துணியில் வைத்துக் கட்டி நல்லெண்ணெயில் இரவில் ஊறப்போட வேண்டும். காலையில் முடிச்சை எடுத்து கசக்கி நாசியில் விட வேண்டும்.

அளவு	இரண்டு துளி

தீ.நோ.	தலைவலி, பீனசம்

## ஆக்கிராணப்பொடி

சரக்குகள், வேர்கள் இவற்றைத் தனியாகவாவது சாறு, பால் இவற்றில் ஊற வைத்தாவது நிழலில் உலர்த்தி இடித்துத் துணியில் வடிகட்டி மூக்கில் இடுவது.

தே.பொ.	மஞ்சள் கிழங்கு 300 கி
பச்சை இஞ்சி 300 கி

செ.முறை	இவற்றைச் சிறு துண்டுகளாக வெட்டிக் கொண்டுஎருக்கம்பாலில் ஊறவைக்க வேண்டும். ஊறிய பின்னர் நிழலில் உலர்த்தி மறுபடியும் எருக்கம் பாலூட்டிக் காயவைத்து இடித்துத் தூள் செய்து பேய்ச்சுரைக் குடுக்கையில் அடைத்து வைத்துக் கொள்ள வேண்டும்.

அளவு	குழாயில் வைத்து சிறுகச் சிறுக நாசியில் ஊத வேண்டும்.

து.ம.	கடிவாயில் எருக்கிலை வைத்துக் கட்ட வேண்டும்.

தீ.நோ.	விடந்தீண்டியவர் குணமாவார்.

# கலிக்கம்

சில சரக்குகளைக் குறிப்பிட்ட சில சாறுகளால் அரைத்து உருட்டி மாத்திரையாக்கித் தேனில் அல்லது வேறு சாற்றில் உரைத்துக் கண்ணில் போடுவது.

## இரச கலிக்கம்

தே.பொ.	இரசம்
துருசு
சுக்கு
வாளம்-சம எடை
பெருங்காயம்

| | |
|---|---|
| செ.முறை | இவற்றைச் சமனாக எடுத்துக் கொண்டு கல்வத்தில் போட்டு எலுமிச்சம் பழச்சாற்றால் 12 மணி நேரம் அரைத்து பின்னர் கவிழ்தும்பைச் சாற்றால் 3 மணிநேரமும், முருங்கையிலைச் சாற்றில் 3 மணி நேரமும் நன்றாக ஆட்டிக்கொள்ளவேண்டும். அதைச் சிறுபயிறு போல உருண்டை செய்து நிழலில் உலர்த்திக் கொள்ளவேண்டும். |
| அளவு | கண்ணில் ஒரிரு துளிகள் இடவேண்டும். கீழே உள்ள சாறுகளில் உறைத்து இடவும். |
| து.ம. | எலுமிச்சம்பழச்சாறு, தும்பைச்சாறு |
| தீ.நோ. | விடங்கள் தீரும். |
| குறிப்பு | முருக்கு, எருக்கு, பூவரசம்பழுப்புச் சாற்றினால் உறைத்து கண்ணில் இடவும். பலவிடங்கள் தீரும். |

## வெள்ளைச் சாரணைக் கலிக்கம்

| | |
|---|---|
| தே.பொ. | வெள்ளைச் சாரணை வேர் |
| செ.முறை | வெள்ளைச் சாரணை வேரை வெட்டி வந்து சிறிது சிறிதாக வெட்டி பசும்பாலில் வேகவைத்து நிழலில் உலர்த்தி இடித்து எடுத்துக்கொள்ள வேண்டும். சூரணமாகும். |
| அளவு | மேற்கூறிய சூரணத்தைக் கீழுள்ள சாறுகளில் கலந்து ஓரிரு துளிகள், கண்ணில் இடவும். |
| து.ம. | நெய், அவுரிச்சாறு, மனத்தக்காளிச்சாறு. |
| குறிப்பு: | பூ விழுந்த கண்ணிற்கு நெய்யில்; நீர்ப்பாயும் கண்ணுக்கு அவுரிச்சாற்றில்; மாலைக்கண்ணிற்கு மணத்தக்காளிச் சாற்றில்; தசைவளர்ந்த கண்ணிற்குப் பசுமஞ்சள் சாற்றில்; உறைத்து கண்ணில் விடவேண்டும். |

# இரசமணி

பாடாணங்களுள் சிலவற்றைக் குறிப்பிட்ட அளவு எடுத்து வேறு சில குறிப்பிட்ட அளவு பாடாணங்களுடன் இணைத்து செம்மையான முறையில் கட்டி எடுத்துக் கொள்வது. இதனை அனைத்து நோய்கட்கும் உறைத்துக் கொடுக்க நலமாகும்.

## இரசமணி - முறை 1

தே.பொ. இரசம்

செ.முறை பழந்திண்ணி வௌவ்வால் வாயில் இரசத்தைப் புகட்டி ஒரு சட்டியில் 2 படி கறியுப்பைக் கொட்டி அதன்மேல் வௌவ்வாலை வைத்து அதன் மேலும் 2 படி உப்பைக் கொட்டி வாகையிலைச் சாறு இரண்டு விரற்கடைநிற்குமளவிற்குவிட்டு சீலை மண் செய்து 6 மணிநேரம் எரித்தால் மணியாகும். அதை வெள்வங்கத்திற்குக் கொடுத்தால் நீர்வாங்கும்.

## இரசமணி - முறை 2

| | | |
|---|---|---|
| தே.பொ. | இரசம் | 35 கிராம் |
| | ஆமணக்கெண்ணெய் | 35 கிராம் |

செ.முறை அயக்கரண்டியை நன்றாகக் கழுவி சுத்தம் செய்துகொள்ள வேண்டும். வெள்ளி மோதிரத்தைப் போட்டு இரசத்தை நடுவில் ஊற்ற வேண்டும். ஊற்றின பின் எண்ணெய்விட்டு அனலில் வைக்க வேண்டும். ஒன்றாய் திரண்டுவரும்போது உருட்டி தண்ணீரில் போட வேண்டும்.

அளவு இரசமணி வாதவேலைக்கும் வைத்தியத்திற்கும் உதவும். இரசமணியை தேவையான அளவு எடுத்து பற்பசெந்தூரங்களுக்குப் பயன்படுத்தலாம்.

குறிப்பு இரசமணி நன்றாக முடிந்திருந்தால் அதை வாயில் அடக்கி போகம் கொள்ள விந்து இறங்காது என்றும், பசு மாடு பால் கறக்கும் போது இரசமணியை அம்மாட்டுத் திமில்மீது வைக்க பால் சுரக்காது என்றும் இரசமணிக்கு மேலும் ரசத்தை ஊட்ட அது உறிஞ்சும் எனவும் கூறப்படுகின்றது. இவை யாவும் எதிர்கால ஆராய்ச்சிக்கு உரியன.

## இரசமணி - முறை 3

| | | |
|---|---|---|
| தே.பொ. | இரசம் | |
| | சிறுபுள்ளடிச்சாறு | 100 மிலி. |
| | சீமைக்காட்டாமணக்குப் பால் | 100 மிலி. |

செ.முறை இவ்விரண்டு சாற்றையும் கலந்து 2 கிராம் முப்பு கரைத்துத் தெளிவிறுத்துக் கொள்ள வேண்டும். இரசத்தைச் சட்டியில் விட்டு இளஞ்சூடு கண்டவுடன் தெளிவை மேலே சொட்டு சொட்டாய் 3 மணிநேரம் சுருக்கினால் இரசம் மணியாகும்.

## இரசமணி - முறை 4

| | | |
|---|---|---|
| தே.பொ. | இரசம் | 8 கி |
| | அடைக்கலாங்குருவி | 1 எண் |
| | தென்னங்கள் | 2 லிட் |

செ.முறை அடைக்கலாங்குருவியின் வாயினைப் பிளந்து இரசத்தை ஊற்றி சந்துவாய் தைத்துவிட வேண்டும். ஒரு சட்டியில் 2 லிட்டர் தென்னங்கள்ளினை ஊற்றி அதனுள் அடைக்கலாங்குருவியைப் போட்டு நீர் சுண்டுகிறவரை எரித்தால் இரசம் மணியாகும்.

அளவு முழுமையும்

தீ.நோ. மணியை இடுப்பில் கட்டிக் கொள்ள வேண்டும். விந்து தானே வீணாவது நிற்கும்.

# முப்பு

ஐந்துப்பும் சேர்ந்த கலவை என்றும் பௌர்ணமி நாளின் இரவின்போது சதுப்பு நிலத்தின் மேல் படியும் உப்பு என்றும், மூன்றாம் மாதத்திய கர்ப்பப் பிண்டத்தின் மேல் படிந்திருக்கும் உப்பு என்றும், முதன்முதலில் ருதுவான பெண்ணின் ருதுவின் உப்பு என்றும் பல்வேறு கருத்துக்கள் முப்பைப் பற்றி உள்ளன. இவை ஆராயத்தக்கன.

மருந்துச் சரக்குகளைப் பக்குவம் செய்து கொடுக்கும்போது முப்புவையும் சிறிது சேர்த்துக் கொடுக்க பல நோய்கள் நலமாகும். முப்புவின் கருத்துக்களைப் போன்று செய்முறையும் பலவாகும்.

## முப்பு - முறை 1

**தே.பொ.** சிறுநீர்
சீனக்காரம்
வெடியுப்பு

**செ.முறை** சிறுநீரை ஒருதட்டில் மாற்றி வெயிலில் வைத்தால் உப்பாகும். அந்த உப்பிற்குச் சமபாகம் சீனக்காரம் வெடியுப்பு இவற்றைச் சேர்த்து எலுமிச்சம்பழச் சாற்றில் ஆட்டிக் கொள்ளவேண்டும். அதனை வில்லைசெய்து காயவைத்து ஓட்டில் வைத்து சீலை செய்து 8 எருவில் புடம் போட்டால் முப்பாகும். இந்த முப்பு மிக எளியமுறையாக உள்ளது

**அளவு** வாதமுப்பு, வைத்திய முப்பு என இருவகைகளில் இது வைத்திய முப்புவைச் சாரும்.

**து.ம.** முப்பு எல்லா மருந்துகளுக்கும் வீரியமளிக்கும் மருந்தாகும். அதாவது மிகச் சிறந்த கிரியா ஊக்கியாக பயன்படும்.

## முப்பு-முறை 2

| | | |
|---|---|---|
| தே.பொ. | கறியுப்பு | 200 கி |
| | கும்மட்டிக்காய் | 13 காய் |

செ.முறை கும்மட்டிக்காய் ஐந்தை நறுக்கி சட்டியில் போட்டு மேலே கறியுப்பை வைத்து அதன் மேல் ஐந்து காயை இடித்துப் போட்டு அமுக்கி சீலை செய்து 10 வரட்டி கொண்டு புடமிடவும். பின்னர் எடுத்துப்பொடித்து உப்பைப் பீங்கானில் போட்டு மூன்று காய் இடித்துச் சாறு பிழிந்து பீங்கானில் விட வேண்டும். பிறகு சுண்டியபின் காயவைக்க வேண்டும். இப்படி 2 முறை செய்யவேண்டும்.

அளவு 3 முதல் 5 கி.

து.ம. வெந்நீர்

தீ.நோ. மேகவாய்வு, மேகசூலை, மேகநீர்

குறிப்பு: 3-5 கிராம் வாயில் போட்டு வெந்நீர் குடிக்கவும். பேதியாகும், பேதி அதிகமானால் மோர் பருகலாம். பேதியாகவில்லை எனில் வெந்நீர் குடிக்கவும்.

# பணியாரம்

மருந்துச் சரக்குகளைச் சேர்த்தரைத்து அரிசிமாவின் நடுவில் வைத்துப் பொதித்து எண்ணெயில் சுட்டெடுப்பது.

## கவிழ்தும்பை பணியாரம்

| | | |
|---|---|---|
| தே.பொ. | கவிழ்தும்பை இலை | 50 கி |
| | அரிசி | 50 கி |
| | கற்கண்டு | 50 கி |

செ.முறை அரிசியை ஊறவைத்துக் கொண்டு கவிழ்தும்பை இலை, கற்கண்டு ஆகிய இவற்றைச் சேர்த்து நன்றாக அரைத்துக் கொள்ளவேண்டும். இதனுடன்

பசு வெண்ணெய் கலந்துகொண்டு பணியாரமாகச் சுட்டுக் கொள்ளவேண்டும்.

அளவு காலை, மாலை தினம் 2 வேளை வீதம் 3 நாட்களுக்குக் கொடுக்கவும்.

தீ.நோ. இரத்த சீதக் கழிச்சலால் ஏற்படும் கடுப்பு.

பத்தியம் அதிக காரத்தை நீக்கி, மோர், தயிர் சாதம் சேர்க்கவும். இச்சாபத்தியம்

## அரிசிப் பணியாரம்

தே.பொ. சம்பா அரிசி 250 கி
திருகுகள்ளிப்பால் - தேவையான அளவு

செ.முறை திருகுகள்ளிப் பாலில் சம்பா அரிசியை ஓரிருநாள் ஊறப்போட்டு மறுநாள் அதனைக் கழுவி காயவிட வேண்டும். இத்துடன் வெல்லம் போட்டு பிசறி நெய்யில் சிறுசிறு பணியாரமாய் சுட்டு புதுமண் கலயத்தில் வைத்துக் கொள்ளவேண்டும்.

அளவு முதல்நாள் 1/2 பணியாரம், இரண்டாம்நாள் 1 பணியாரம், மூன்றாம் நாள் 2 பணியாரம், நான்காம் நாள் 3 பணியாரம், ஐந்தாம் நாள் 4 பணியாரம் 6 ஆம் நாள் 5 பணியாரம் என்ற வகையில் உண்ணவேண்டும்.

தீ.நோ. கண்டமாலை

பத்தியம் புளிதள்ளவும்.

## குப்பைமேனி பணியாரம்

தே.பொ. குப்பைமேனியிலை - தேவையான அளவு

செ.முறை குப்பைமேனியிலையுடன் மிளகு, பூண்டு, சீரகம், மல்லி, மிளகாய், உப்பு இவைகள் சேர்த்து அரைத்து சிறிய நாரத்தங்காய் அளவு எடுத்து 2 பணியாரமாகத் தட்டிக் கொள்ள வேண்டும்.

அதனை ஆமணக்கு எண்ணெயில் சுட்டு எடுத்துக் கொள்ளவேண்டும். குழம்பு வைத்து அது கொதிக்கும் போது இந்தப் பணியாரத்தை அதில் போட்டு இறக்கிக் கொள்ளவும்.

அளவு காலை, மாலை இரு வேளை

து.ம. சோற்றுடன் சாப்பிடவும்

தீ.நோ. மேகநீர், அண்டநீர் வாங்கும்

பத்தியம் போகமாகாது

## கொடிவேலிவேர் பணியாரம்

தே.பொ. கொடி வேலிவேர்ச் சூரணம் 140 கி
பரங்கிப்பட்டைச் சூரணம் 140 கி

செ.முறை மேற்கூறிய இரண்டு சரக்குகளின் எடைக்குச் சமமாக கோதுமை மாவு அல்லது கருங்குருவை அரிசி மாவு எடுத்து சூரணங்களுடன் கலந்து கொள்ளவேண்டும். 350 கிராம் நல்லெண்ணெய் எடுத்துக்கொண்டு மூன்று குழிபணியாரத்தைச் சுட்டெடுத்துக் கொள்ள வேண்டும்.

அளவு நாளொன்றுக்கு 2 வேளை வீதம் 6 வேளை; வேளைக்கு 1 பணியாரம். பணியார சட்டியில் மீதமிருக்கும் எண்ணெயையும் குடிக்க வேண்டும்.

தீ.நோ, கண்கடுப்பு, மேகசூலை, சந்துவலி, இடுப்புவலி, கால்வலி

பத்தியம் புளி, மீன், கருவாடு நீக்கவும்.

## இலிங்க வேதை

தே.பொ. இலிங்கம் 35 கி
சிகப்புக் கற்றாழைச் சமூலம்

செ.முறை சிகப்புக் கற்றாழைச் சமூலத்தை இடித்து கலயத்தில்

பாதி போட்டு அதன் மேல் இலிங்கம் வைத்து அதன்மேல் சுற்றாழை போட்டு சில் மூடி மூன்று சீலை செய்து கொள்ளவேண்டும். முழப்புடம் போட்டு வெள்ளி பத்துக்கு ஒன்று கொடுக்கவும்.

அளவு 65-130 மி.கி. காலை, மாலை

து.ம. நெய்

தீ.நோ. காசம்

## அயதிராவகம்

| | | |
|---|---|---|
| தே.பொ. | அயப்பொடி | 35 கி |
| | மாதுளம்பழச்சாறு | 105 கி |

செ.முறை ஒரு பீங்கானில் மாதுளம்பழச்சாற்றை விட்டு அதில் அயப்பொடியைப் போட்டு 40 நாட்கள் விட்டுவிட வேண்டும். அயதிராவகமாகும்.

அளவு 3 துளி உண்ண வேண்டும்.

து.ம. பசுவெண்ணெய்

தீ.நோ. தாது விருத்தியடையும்.

## இடிவல்லாதி

| | | | |
|---|---|---|---|
| தே.பொ. | அரிதாரம் | வசம்பு | |
| | காந்தம் | உள்ளி | |
| | எள் | பூண்டு | |
| | எட்டிவிதை | கொள்ளுக்காய் | |
| | சேங்கொட்டை | துருசு | |
| | சித்திரமூலம் | துத்தம் | சமஎடை |
| | இரசம் | கோழிமுட்டை | |
| | கெந்தி | இந்துப்பு | |
| | மஞ்சள் | கோட்டம் | |
| | ஓமம் | கார்போகவரிசி | |
| | மாசிக்காய் | அமுக்கரா | |
| | சாதிக்காய் | | |

செ.முறை இவற்றைச் சமவெடையாக எடுத்துக் கொண்டு கழுதைப்பாலில் சுத்தி செய்து கல்லுரலில் மைபோல இடித்துக்கொள்ள வேண்டும்.

அளவு 2 கிராம் காலை, மாலை 40 நாள்

தீ.நோ. யோனிப்புற்று, லிங்கப் புற்று, அண்டத்தில் புண் புரை, அரைப்புண், மூக்குக்கரப்பான், சூலை, வாயு, தாது நட்டம், வெப்பம், சூலை நோய், ஈரல்புற்று

பத்தியம் புளிதவிர்க்கவும்; போகமாகாது

குறிப்பு: சேங்கொட்டை, எட்டிக்கொட்டை இரண்டையும் தைலமாக இறக்கிச் சேர்க்கவும்.

## எருக்கம்வேர் வெற்றிலை

| | | |
|---|---|---|
| தே.பொ. | எருக்கம்வேர்ப் பட்டைத்தோல் | 5 கொட்டைப்பாக்களவு |
| | கொட்டைப்பாக்கு | 5 எண்கள் |
| | வெற்றிலை | 25 எண்கள் |

செ.முறை நன்கு முற்றிய எருக்கம் வேரை நன்கு கழுவி அதன் தோலைச்சீவிக் கொள்ள வேண்டும். சுண்ணம் தடவிய வெற்றிலைகளையும் இவற்றோடு சேர்த்து எச்சில் துப்பாமல் மென்று தின்னவேண்டும்.

அளவு மூன்று நாள்; ஒரே அளவு

தீ.நோ. மேகநீர், அண்டநீர் நீங்கும்

பத்தியம் புளி நீக்கவும். கறி, நெய் சேர்க்கவும்.

## திருநீற்றுப்பச்சை விதை

தே.பொ. திருநீற்றுப்பச்சை விதை

செ.முறை திருநீற்றுப் பச்சிலை விதையை அரைத்துக் கொள்ளவேண்டும்.

| | |
|---|---|
| அளவு | மூன்று வேளை |
| தீ.நோ. | மாதப்போக்கின் தாமதம் நீங்கி சரியான போது மாதப் போக்கு ஆகும். |

## 21. களி (அல்) சோறு

ஆளிவிதை போன்ற விதைகள் மற்றும் பாடாணங்களை அரிசி மாவுடன் கூட்டிப் பசுவின் பால் அல்லது நீர் விட்டு அரைத்துக் கரண்டியில் விட்டுக் கிளறி, கட்டுவதற்குக் களி போலச் செய்து கொள்வது.

### கெந்தகச் சோறு

| | |
|---|---|
| தே.பொ. | பச்சரிசி 600 மிகி<br>கெந்தகம் 200 மிகி |
| செ.முறை | அரிசியுடன் கெந்தகத்தையும் போட்டு, சமைத்துக் கொள்ள வேண்டும். பின்பு பானையோடு இறக்கிக் கொள்க. பின்பு அந்த தயிலத்தைப் பயன்படுத்த வேண்டும். |
| அளவு | 65 மிகி-200 மி.கி |
| தீ.நோ. | பாதநோய்கள் நீங்கும் |
| குறிப்பு: | மருந்தின் வாழ்நாள் 7 ஆண்டுகளாகும். |

## சீலை (அல்) துணி

சில நச்சுச் சரக்குகளைத் தண்ணீரிலாவது சாறுகளிலாவது அரைத்துக் குழம்பாக்கி அதில் துணித் துண்டைத் தோய்த்து விரணங்களுக்கு உபயோகிப்பது.

## வர்த்தி (அல்) துணி

சில நச்சுச் சரக்குகளைப் பொடி செய்து சில சாறுகளால் அரைத்துக் குழம்பாக்கி அதில் சீலையை நனைத்தாவது சில சரக்குப் பொடிகளைத் துணித்துண்டில் வைத்தாவது திரித்து ஆறாத இரணங்கட்கும் புரை ஓடும் இரணங்கட்கும் வைப்பது.

### காரீயத்துணி

| | | |
|---|---|---|
| தே.பொ. | இரசம் | 8 கி |
| | காரீயம் | 8 கி |
| | பலகரை | 8 கி |
| | கெந்தி | 8 கி |
| | வெங்காரம் | 8 கி |

செ.முறை மேற்கூறிய சரக்குகளை மைபோல் அரைத்துக் கொண்டு துணியில் தடவிக் கொள்ளவேண்டும்.

அளவு துணியைப் புண்களுக்குப் போடவும். வெளிப்பிரயோகம் மட்டுமே.

## பற்று

இலை, பட்டை, வேர் இவற்றின் சாற்றையாவது அரைத்த சில சரக்குகளைச் சுட வைத்தாவது சுட வைக்காமலாவது நோயுள்ள இடங்களில் திண்மையாக அப்புதல்.

### வெங்காரப் பற்று

| | | |
|---|---|---|
| தே.பொ. | வெங்காரம் | 10 கி |
| | நவச்சாரம் | 10 கி |
| | படிகாரம் | 10 கி |
| | குங்கிலியம் | 10 கி |
| | கடுகு | 10 கி |
| | சுக்கு | 10 கி |
| | கழற்சிவிதை | 10 கி |
| | சாம்பிராணி | 10 கி |

செ.முறை இவற்றைச் சாராயத்தில் அரைத்து எடுத்துக் கொள்ளவேண்டும்.

அளவு மூன்று நாள் பற்றிடவும்.

தீ.நோ. எல்லா வகையான வாயுக்களும் தீரும்.

குறிப்பு வெளிப்பிரயோகம் மட்டும்.

## வெள்ளைக் குங்கிலியப் பற்று

| | | |
|---|---|---|
| தே.பொ. | வெள்ளைக் குங்கிலியம் | 70 கி |
| | கற்பூரம் | 9 கி |
| | பால்சாம்பிராணி | 35 கி. |

செ.முறை மேற்சொன்ன சரக்குகளை மெழுகு பதமாகக் காய்ச்சி துணியில் தடவி விரைமேல் சுத்தி, தண்ணீர் ஊற்றவும்.

அளவு மூன்று நாள் வெளிப்பிரயோகம் மட்டும்

தீ.நோ. விரைவாதம்

## அவல் பற்று

தே.பொ. கூழாங்கல் பொடி
அவல்
தயிர்
வடிகட்டி
கோழிமுட்டை (வெள்ளைக்கரு)
உப்பு

செ.முறை இவற்றைச் சேர்த்தரைத்து எடுத்துக் கொள்ள வேண்டும்.

அளவு வெளிப்பூச்சாகப் பூசவேண்டும்.

தீ.நோ. வீக்கம், வலி.

# களிம்பு

பாடாணங்களில் சிலவற்றைத் துவர்ப்புள்ள காய்ச்சுக் கட்டி போன்ற சரக்குகளுடன் பொடியாக்கிப் பசுவெண்ணெய் சேர்த்து நன்றாய் அரைத்து வைத்துக்கொள்வது.

## இலிங்கக் களிம்பு

தே.பொ. இலிங்கம்
மிருதார சிங்கி
இரசகற்பூரம்
வெள்ளைக்குங்கிலியம்
கடுக்காய்த்தோல்
மாசிக்காய்
தான்றிக்காய்
காசுக்கட்டி

செ.முறை இவற்றைச் சமஎடை எடுத்துக் கொண்டு 3 மணிநேரம் அரைக்கவேண்டும். களிம்பாகும்வரை அரைத்து எடுத்துக் கொள்ளவேண்டும்.

அளவு நோய்க்கேற்ப, நோய் தீரும்வரை புண்களுக்கு மேல்பூச்சு பூசவேண்டும்.

தீ.நோ. புண்கள்

# புகை

மயிலிறகு, சீரகம் முதலியவற்றைத் துணித்துண்டில் வைத்து திரியாய்ச் செய்து கொளுத்தியாவது விலங்குகளின் குளம்புகள், மாடு, எருமைக் கொம்பின் சீவல், நல்ல பாம்புச்சட்டை, பன்றிமலம் முதலியவற்றை இடித்து நெருப்பிலிட்டாவது உண்டாக்குவது. பாடாணங்களை வெள்ளெருக்கம்பால் விட்டாட்டி திரித்துப் புகையச் செய்வதுமுண்டு.

## இரசப்புகை

தே.பொ. இரசம் 10 கி
அரிதாரம் 50 கி

செ.முறை மேற்கூறப்பட்ட இரண்டையும் வெள்ளெருக்கம் பாலால் ஆட்டி வெள்ளைத் துணியிலூட்டி திரிபோலாக்கி வைத்து கொள்ளவும்.

அளவு புகையை மூக்கின் வழியாக உள்ளிழுக்க வேண்டும்.

து.ம. வேப்பெண்ணெய்

தீ.நோ. விடந்தீண்டி மயக்கமானவன் விழிப்பான்

குறிப்பு: திரியில் வேப்பெண்ணெயை ஊற்றி நல்லெண்ணெய் விளக்கில் கொளுத்தி அனைத்துப் புகையையும் உள்ளிழுக்க வேண்டும்.

## இலிங்கப் புகை

தே.பொ. குப்பைமேனி } தேவையான அளவு
உத்தாமணி }
இலிங்கம் 20 கிராம்
பசுநெய் 200 கிராம்.

செ.முறை மேற்கூறப்பட்ட இரண்டின் சாற்றையும் தனித்தனியே எடுத்து கலந்து கொள்ள வேண்டும். நல்ல வெள்ளைத் துணியை எடுத்து சாற்றில் 5 முறை நனைத்து நனைத்துக் காயவைக்க வேண்டும். பொடித்த இலிங்கத்தூளைத் துணியின் மேல் பரப்பி திரியாகத் திரித்துக் கொள்ளவேண்டும். பசுநெய் விட்டு திரியைக் கொளுத்தி முழுமையாக மூடி வேது பிடிக்க வேண்டும்.

அளவு காலை, மாலை 6 பொழுது, மூன்று நாள்

தீ.நோ. மேக இரணங்கள்.

## சாணப்புகை

தே.பொ. காட்டுமரவட்டை
சுழுதைச்சாணம்
பன்றிச்சாணம்

செ.முறை காட்டுமரவட்டையைச் சூரணம் செய்துகொள்க. பன்றிச் சாணம், கழுதைச் சாணம் இவை இரண்டையும் தூள் செய்து கொள்ள வேண்டும். தரையில் நெருப்பிட்டுக் கொள்ள வேண்டும்.

நெருப்பின் மேல் சாணத்தூள் அதன்மேல் மரவட்டைத்தூள் அதன்மேல் சாணத்தூள் போட்டு, துளை செய்த சட்டியொன்றை மேல் மூடி அதன்புகையை ஆசனவழியாய் நுகரவேண்டும்.

அளவு மூன்று முறை புகையை நுகரவேண்டும்.

தீ.நோ. மூல நோய், பவுத்திரநோய்.

## பசை

குங்கிலியம் மற்றும் மருந்துச் சரக்குகளை மெழுகுடன் அல்லது நெய்யுடன் சேர்த்து உருக்கிப் பசையாக வைத்துக் கொள்வது.

### வெள்ளெருக்கன் பசை

| | | |
|---|---|---|
| தே.பொ. | வெள்ளெருக்கன் வேர்ப்பட்டை | 70 கி |
| | வெள்ளெருக்கன் பால் | 70 கி |
| | பாகல் இலை | 70 கி |
| | திரிகடுகு | 10 கி |
| | பெருங்காயம் | 10 கி |
| | இந்துப்பு | 10 கி |

செ.முறை இவற்றை வெள்ளாட்டுப் பாலில் அரைத்து எடுத்து பத்திரப்படுத்திக் கொள்ளவேண்டும்.

து.ம. இதனை வெற்றிலையின் பின்பகுதியில் பூசி மென்று சாப்பிடவேண்டும்.

தீ.நோ. விடமயக்கம் தீரும்

குறிப்பு: மயக்கத்தினால், நோயாளியினால் உண்ண முடியவில்லை என்றால் இதனை வெற்றிலைச் சாற்றில் கலந்து கண்ணில் இடவும். நாசியில், செவியில் தேய்க்கவும்.

# பொடி

பாடாணங்களுள் ஒரு சிலவற்றை அவற்றிற்கேற்ற மருந்துச்சரக்குகளுடன் சேர்த்துப் பொடித்த பொடிகளுள் பெரும்பான்மையானவை உள் பிரயோகத்திற்கும் சில பொடிகள் வெளிப்பிரயோகத்திற்கும் பயன்படுத்தப் பெறுகின்றன.

## இலிங்கப் பொடி

| | | | |
|---|---|---|---|
| தே.பொ. | மிளகு | 20 | கி |
| | இலிங்கம் | 40 | கி |
| | பாசாணம் | 4 | கி |

செ.முறை இம்மூன்றையும் கலவத்திலிட்டு நன்கு அரைத்துக் கொள்ளவேண்டும்.

அளவு 50 மிகி. மூன்று தடவை வெளிப்பிரயோகம் மட்டும்

து.ம. உமிழ்நீரினால் குழைத்து மூன்று பொழுதுதடவவும்.

தீ.நோ. மூலம், பவுத்திரம்

## இலிங்கப்பொடி

தே.பொ. இலிங்கம் - 5 கி
படிகாரம் (எலுமிச்சங்காயளவு)

செ.முறை படிகாரத்தைக் கரண்டியில் போட்டுக் காய்ச்சி உருகிவரும் போது அதில் இலிங்கத்தைப் போட்டுக் காய்ச்சவேண்டும். பின்னர் எடுத்துப் பொடித்துக் கொள்ள வேண்டும்.

அளவு 65-130 மி.கி. 3 முதல் 7 நாட்கள்வரை.

து.ம. பித்த சன்னிக்கு - இஞ்சிச்சாறு
வாத சன்னி, வாந்தி, பேதிக்கு - தேன்

தீ.நோ. பித்த வாத சன்னிகள், வாந்தி, பேதி

குறிப்பு: தாகம் எடுத்தால் குளிர்ந்த நீர் தரவும்.

## அரிதாரப் பொடி - முறை 1

தே.பொ. அரிதாரம் (கட்டி)

செ.முறை அரிதாரக் கட்டியைச் சுண்ணாம்புக் கல்லில் வேக வைத்து எடுத்துக் கொள்ள வேண்டும்.

அளவு 300 கி 5 வேளை காலை, மாலை

து.ம. தேன்

தீ.நோ. எலிக்கடி விடம் நீங்கும்

பத்தியம் கடுமையான பத்தியம்

குறிப்பு: மறுநாள் விளக்கெண்ணெய் தேய்த்து முழுகவும்

## அரிதாரப் பொடி - முறை 2

தே.பொ. அரிதாரம் 20 கி
பனங்கள் 2 லிட்டர்
பால்சாம்பிராணி 35 கி
பேரிச்சங்காய் 20

செ.முறை கல் சுண்ணத்தைப் பனங்கள்ளில் போட்டு ஊறியபின் தெளிவாக வடித்துக் கொள்ள வேண்டும். பால்சாம்பிராணியையும் அரிதாரத்தையும் சேர்த்து அரைத்துக் கொள்ளவேண்டும். பேரிச்சங்காயைப் பிளந்து விதை போக்கி அரைத்த பொடியை இருபது பங்காக்கி 20 பேரிச்சங்காய்க்குள்ளும் வைத்துவிட வேண்டும். காயை நூலினால் கட்டி தேனில் 20 நாள் ஊறவைக்க வேண்டும்.

அளவு காலை ஒன்று வீதம் 20 நாள் சாப்பிடவும்.

தீ.நோ. தாது விருத்தியடையும்.

## வீரப்பொடி

தே.பொ. வீரம் 4 கிராம்
மிளகு 40 கிராம்

| | |
|---|---|
| செ.முறை | இரண்டையும் கல்வத்திலிட்டு மைபோல் அரைத்துக் கொள்ளவும். |
| அளவு | காலை, மாலை: 5 வேளை |
| து.ம. | கருப்பட்டி |
| தீ.நோ. | இரத்தவெட்டை, வெள்ளை, சூலை, வயிற்றுவலி |
| பத்தியம் | முருங்கையிலை சேர்த்துக் கொள்ளவும். உப்பை வறுத்து சேர்த்துக் கொள்ளவும். |

## கோரோசனைப் பொடி

| | |
|---|---|
| தே.பொ. | கோரோசனை 4 கி<br>இரசசெந்தூரம் 4 கி |
| செ.முறை | இவ்விரண்டையும் நன்றாகப் பொடித்துக் கொள்ள வேண்டும். |
| அளவு | 65-130 மி.கி; 10 நாட்கள் |
| து.ம. | பசுவெண்ணெய் |
| தீ.நோ. | சொறி, சிரங்கு, சளி தீரும் |
| பத்தியம் | புளி,வாயு பண்டங்கள் ஆகாது |

## நாயுருவிப் பொடி

| | |
|---|---|
| தே.பொ. | சுழற்சி விதை<br>நாயிறைஞ்சி வேர் (நாயுருவி) |
| செ.முறை | இரண்டையும் சமமாக எடுத்து அரைத்து வைத்துக் கொள்ள வேண்டும் |
| அளவு | மூன்று வேளை |
| து.ம. | வெந்நீர் |
| தீ.நோ. | சுரம் |
| பத்தியம் | புளி தவிர்க்கவும். |

## பீர்க்கன் விதைப் பொடி

தே.பொ. பீர்க்கன் வித்து 11

செ.முறை பீர்க்கன் விதையை பொடித்துக் கொள்ள வேண்டும்.

து.ம. (100 மிலி பசும்பால்)

தீ.நோ. பேதியாகும்

குறிப்பு: பேதியாகவில்லை என்றால் வெந்நீர் பருகலாம். அல்லது மிளகு ரசம் பருகலாம். அதிகமாகப் பேதியானால் மோர் பருகலாம்.

## மல்லிப்பொடி

தே.பொ. கொத்துமல்லி 10 கி
தண்ணீர் 100 மிலி

செ.முறை தண்ணீரில் கொத்து மல்லியை இட்டுக் காய்ச்சி அந்தத் தண்ணீரில், ஒரு கிராம்பில் பாதியும் மிளகில் பாதியும் உறைத்து அதே அளவு சித்தரத்தைத் தூளை எடுத்துக் கொள்ள வேண்டும்.

அளவு 15 முதல் 30 மி. கி தினம் மூன்றுவேளை

து.ம. தேன், மருந்துண்டதும் 30 கி வெந்நீர் பருகவும்.

## பற்பொடி

தே.பொ. ஆலம்பழம் $2^{1/2}$ கிலோ
கரிசெய்த பூந்திக்கொட்டை 125 கி
ரூமிஸ்தகி 20 கி
இந்துப்பு 20 கி
கறியுப்பு 20 கி

செ.முறை இவற்றையெல்லாம் சேர்த்தரைத்து பல் துலக்கவும்.

தீ.நோ. பல்வலி

## சீனக்கற்கண்டு

| | |
|---|---|
| தே.பொ. | சீனக்கற்கண்டு 250 கி<br>(ஒரே கட்டி) |
| செ.முறை | இதனைத் தெளிவாக தண்ணீரில் மூன்றுமுறை அலசி ஆவின்பாலில் ஒருமுறை அலசி உலரவைக்க வேண்டும். |
| அளவு | மூன்றுநாள், உறைத்து கண்ணில் போட வேண்டும். |
| து.ம. | தாய்ப்பால் |
| தீ.நோ. | மாலைக்கண், கண்புகைச்சல், வெள்ளெழுத்து |

## இரச கற்பூரம்

| | |
|---|---|
| தே.பொ. | இரச கற்பூரம்<br>விளக்கெண்ணெய் |
| செ.முறை | கற்பூரத்தைத் தூய்மை செய்து எடுத்துக் கொள்ளவேண்டும். |
| அளவு | 65 மி.கி.<br>7 நாட்கள், நாளொன்றுக்கு ஒரு வேளை மட்டும், 7 வேளை |
| து.ம. | கருப்பட்டி |
| தீ.நோ. | புண் ஆறிவிடும் |
| பத்தியம் | புளி நீக்கவும் |
| குறிப்பு: | விளக்கெண்ணெய்-பேதிக்குத் தரவேண்டும். பின்னரே கட்டின இரச கற்பூரத்தைத் தரவேண்டும். |

## இலிங்கப் பொடி

| | | |
|---|---|---|
| தே.பொ. | மிளகு | 20 கி |
| | இலிங்கம் | 40 கி |
| | பாசாணம் | 4 கி |

| | |
|---|---|
| செய்முறை | இம்மூன்றையும் கலவத்திலிட்டு நன்கு அரைத்துக் கொள்ளவேண்டும். |
| அளவு | 50 மிலி. மூன்று தடவை வெளிப்பிரயோகம் மட்டும் |
| து.ம. | உமிழ்நீரினால் குழைத்து மூன்று பொழுதுதடவவும். |
| தீ.நோ. | மூலம், பவுத்திரம். |

## பின்னிணைப்பு—1

# மருந்தும் அதனால் குணமாகும் நோய்களும்

## (எண் — பக்க எண்)


| | | |
|---|---|---|
| அடைக்கலக் குருவி உருண்டை | - | தாதுவிருத்தி - 38. |
| அண்டச் சுண்ணம் | - | வாததோடம், விரணம், கபப்பிணி - 110. |
| அண்டமெழுகு | - | மேகம்21, வாதசூலை, குட்டம் 39. |
| அபின் மாத்திரை | - | தூக்கமின்மை, காய்ச்சல், வாயு 27. |
| அபின் மாத்திரை | - | இருமல், சுவாசம் 28. |
| அபின் மெழுகு | - | மூலக்கிராணி, இரத்தக்கிராணி 43. |
| அப்பிரகச் செந்தூரம் | - | மதுமேகம் (நீரிழிவு) 54. |
| அப்பிரகச் செந்தூரம் | - | மேக நீரிழிவு, பெரும்பாடு, உடம்பெரிவு, மூலக்கடுப்பு போன்றவை 61. |
| அயச்செந்தூரம் | - | கபம், சோபை, காமாலை, வெளுப்பு, ஈரல்நோய் 50, 51. |
| அயச் செந்தூரம் | - | உதிரநோய், குன்மம், வயிறு உப்பிசம் போன்றவை 51. |
| அய திராவகம் | - | தாதுவிருத்தி 129. |
| அயபற்பம் | - | சோபை, ஈரல்நோய், காமாலை, வெளுப்பு 74. |
| அயபற்பம் | - | பாண்டு, சோபை, காமாலை 75, 75. |
| அயபற்பம் | - | குன்மம், மேகம், தாதுவிருத்தி 76. |
| அரிசிப் பணியாரம் | - | கண்டமாலை 127. |
| அரிதாரப் பொடி | - | எலிக்கடி, விடம் 138. |
| அரிதாரப் பொடி | - | தாதுவிருத்தி 139. |
| அரிதார(தாளக) பற்பம் | - | பாண்டுரோகம், பித்தவாதம், சுரம், எலிக்கடி 84. |
| அரிதார மாத்திரை | - | விடந்தீண்டல் 29. |
| அருகம்வேர்க் குடிநீர் | - | வெட்டை 4. |
| அவுரிக் குடிநீர் | - | அரோசிகம், தோடம் 3. |
| ஆக்கிராணப் பொடி | - | விடம் 121. |
| ஆமணக்குத் தைலம் | - | வாதம் 84, வகை 21. |
| ஆவிரையாதிச் சூரணம் | - | கெட்டநீர் இறங்கும் 9 |
| ஆறுமுகச் செந்தூரம் | - | வாதம் 52. |
| இடிவல்லாதி | - | யோனிப்புற்று, லிங்கப்புற்று, சூலை, தாதுநட்டம் போன்றவை 129. |

இந்துப்புச் சூரணம் - எரிவாதம், பித்தவாதம், மதன வாதம் 9.
இம்பூரல் குடிநீர் - காசம், கபம் 4.
இரசக் குளிகை - பேதியாக 34.
இரசக் குளிகை - விடம் 34.
இரச கலிக்கம் - விடம் 121.
இரச கற்பூர பற்பம் - உதிரக்கட்டு, சன்னி, சுரம், மாந்தம் 67.
இரச கற்பூரம் - புண் 141.
இரச கற்பூர மாத்திரை - சளி, சுரம், மூலம் 31.
இரச கற்பூர மாத்திரை - கிரந்தி, சூலை, வாயு, சன்னி, காய்ச்சல் 32.
இரச கற்பூர மாத்திரை - வாதம், கபம் 32.
இரச கற்பூர வெண்ணெய் - புண்ணில் வளர்ந்த சதை கரைய 10.
இரச கற்பூர வெண்ணெய் - புண்கள் ஆற 10.
இரசச் சுண்ணம் - வெண்குட்டம், கருங்குட்டம், சுரம் 116.
இரச செந்தூரம் - கும்பசூலை, வாய்வு 48.
இரச செந்தூரம் - 21 வகை மேகம், சூலை 48.
இரச செந்தூரம் - இருமல், ஈளைசுரம், மேகநோய் 49.
இரச செந்தூரம் - மேகசூலை, மேகவாய்வு 49.
இரச செந்தூரம் - தோல்நோய், வாதம், மேகசூலை 50.
இரச பற்பம் - மேகம், கிரந்தி, சுரம், ஈளை, இருமல், தோல் நோய்கள் 92.
இரச பற்பம் - மேகம், தோல்நோய்கள் 92.
இரச பற்பம் - இருமல், ஈளை, சுரம், மேகநோய் 93.
இரச பற்பம் - சூலைகள், வாயு, மேகம் 93.
இரச பற்பம் - தாதுவிருத்தி 93.
இரசப் புகை - விடம் 134.
இரச மாத்திரை - சுரம் 32.
இரச வெண்ணெய் - 21 வகைமேகம், புண், அரையாப்பு, இரத்தவெட்டை, வெள்ளை, திமிர்வாயு 10.
இரச வெண்ணெய் - அரிப்பு, கிராணி 11.
இரச வெண்ணெய் பற்பம் - இருமல், ஈளை, சுரம், மேகம் 94.
இலிங்க இளகம் - மேகச்சூடு, தாதுவிருத்தி 17.
இலிங்கக் கட்டு - சன்னிதோடம், காய்ச்சல் 105.
இலிங்கக் கட்டு - வாயு, சன்னி, தோடம், மாரடைப்பு போன்றவை 106.
இலிங்கக் களிம்பு - புண்கள் 134.

| | |
|---|---|
| இலிங்கச் செந்தூரம் - | சன்னி, வாயு, இசிவு 58, 58, 58, 59. |
| ,, | வாய்வு நோய்கள் 59, 59, |
| ,, | சளி, சுரம், சன்னி 60, |
| ,, | சுரம், குளிர்முறைச் சுரங்கள், சன்னி 60. |
| இலிங்க பற்பம் (வெள்ளை) - | சன்னி, சுரம் (எட்டுவகை) குன்மம், |
| ,, | கபரோகம், வாயு 85. |
| | சன்னி, சுரம், வாயு, வெள்ளை 86. |
| இலிங்க பற்பம் - | குன்ம அனற்புண், குளிர்சுரம், மேகம் போன்றவை 95. |
| இலிங்கப் புகை - | மேக இரணங்கள் 135. |
| இலிங்கப் பொடி - | பித்தவாத சன்னிகள், வாந்தி, பேதி 137. |
| | மூலம், பவுத்திரம் 137, 142. |
| இலிங்க வெண்ணெய் - | மேக இரணங்கள் 12. |
| இலிங்க வேதை - | காசம் 128. |
| இலுப்பைப் பிண்ணாக்குச் சூரணம் - | காமாலை 8. |
| இலுப்பைப் பொடி நசியம் - | தலைவலி, பீனசம் 120. |
| உப்புக் கட்டு - | செரியாமை, மந்தம், குன்மம் போன்றவை 100. |
| உப்பு பற்பம் - | எண்வகை குன்மம் 98. |
| உலோகச் செந்தூரம் - | பித்தவெட்டை, காமாலை 53. |
| எஃகு பற்பம் - | ஆண்மை அதிகரிப்பு, வாத, பித்த, கபம், குன்மம் போன்றவை 74. |
| எருக்கங் குழம்பு - | நாட்பட்ட சுரம் 44. |
| எருக்கம் வேர் வெற்றிலை - | மேகநீர், அண்டநீர் 130. |
| எலுமிச்சை எண்ணெய் - | வெள்ளை 24. |
| எழுத்தாணிப் பூடு கற்கம் - | மூலக்கடுப்பு, இரத்தக்கடுப்பு, கிராணி, மூலவாயு 6. |
| ஐந்துப்புச் செந்தூரம் - | குன்மம் 47. |
| ஒட்டுப்புல் சாறு - | ஒற்றைத் தலைவலி 2. |
| ஒட்டுப் பொடி - | மேகம் 138. |
| கடுக்காய் எண்ணெய் - | கண்ணோய் 25. |
| கடுக்காய்ப் பிஞ்சு சூரணம் - | இருமல், காய்ச்சல், வாயு 7. |
| கண்காச மாத்திரை - | கண்காச படலம் 30. |
| கண்டங்கத்திரிக் குழம்பு - | இருமல் 44. |
| கணை எண்ணெய் - | கணை, இரத்தவிருத்தி 19. |
| கருங்குழம்பு - | மகோதரம் 46. |
| கருவங்கச் சுண்ணம் - | குன்மம், வாதம், சூலை, குட்டம் போன்றவை 111, |
| | மேகம் 111. |

| | | |
|---|---|---|
| கருவங்க பற்பம் | - | மேக அரிப்பு, கெற்ப அரிப்பு, மேக வெட்டை, தாது விருத்தி 85. |
| கவிழ்தும்பைப் பணியாரம் | - | இரத்த சீதக் கழிச்சலால் ஏற்படும். கடுப்பு 127. |
| கலைமான் கொம்பு பற்பம் | - | மார்பு நோய் 67. |
| கறியுப்புச் சுண்ணம் | - | செரியாமை, மந்தம், உட்டிணவாயு, வயிற்றுவலி 119. |
| காரீயத்துணி | - | புண்கள் 132. |
| காளமேக நாராயணச் செந்தூரம் | - | பாண்டு, சோகை, மூலவாயு, இரத்தமூலம் போன்றவை 63. |
| கிருட்டிண அப்பிரகச் செந்தூரம் | - | காசம், இரத்தகாசம், மேகம், அத்திசுரம் போன்றவை 61. |
| கிருட்டிண அப்பிரகச் செந்தூரம் | - | மதுமேகம், நீரிழிவு, வெட்டை 62. |
| குடோரி குளிகை | - | இருமல், ஈளை, சுரம், மேகம் 35. |
| குப்பைமேனி பணியாரம் | - | மேகநீர், அண்டநீர் 127. |
| கும்மட்டிக் குழம்பு | - | விடங்கள் 45. |
| கெந்தக எண்ணெய் | - | பெரும்பாடு, சூலை, கிரந்தி 22. |
| கெந்தகக் கட்டு | - | தாதுவிருத்தி 99. |
| கெந்தகச் சுண்ணம் | - | மேகம், தோற்பிணிகள் 109. |
| கெந்தகச் சோறு | - | பாதநோய் 131. |
| கெந்தக பற்பம் | - | பவுத்திரம், மேகம், வாதம், பாரிசவாயு, மகோதரம் போன்றவை 68. |
| கெந்தக பற்பம் | - | வெட்டை, சிலந்தி, சுரம், மேகம் 68. |
| கொடிவேலிவேர் பணியாரம் | - | கண்கடுப்பு, மேகசூலை, சந்துவலி, இடுப்புவலி, கால்வலி போன்றவை 128. |
| கொத்துமல்லிச் சூரணம் | - | பித்தம், உடம்பெரிவு, கண், கைகால் எரிவு 8. |
| கோரோசனைப் பொடி | - | சொறி சிரங்கு, சளி 139. |
| கோரோசனை மாத்திரை | - | கெற்பப் பிணிகள், கண்ணோய் 28. |
| கோரோசனை மாத்திரை | - | சுரம், சன்னி 29. |
| கோழிமுட்டை எண்ணெய் | - | மூலவாயு 24. |
| சங்கவேர்த் தயிலம் | - | சிரங்கு, சூலை, குட்டம் 21. |
| சந்தனக் குழம்பு | - | தாதுவிருத்தி 45. |
| சவ்வீர மாத்திரை | - | கிரந்தி, சன்னி தோஷம், வாயு 26. |
| சாணப்புகை | - | மூலம், பவுத்திரம் 135. |
| சாதிக்காய் உருண்டை | - | சீதம், ரத்தப் போக்கு 37. |
| சாதிக்காய்ச் சூரணம் | - | வயிற்றுப்புகைச்சல், சீதரத்தபேதி 7. |

| | | |
|---|---|---|
| சாதிலிங்கக் கட்டு | - | சன்னி தோஷம், சுரம், மேகம், கள்ளிப் பூக்கிரந்தி 104. |
| சாம்பிராணிப் பதங்கம் | - | தலைவலி, சோகை, சன்னி, தோடம், நாவரட்சி போன்றவை 97. |
| சித்திரமூல மாத்திரை | - | சூலைக்கட்டு 30. |
| சிலாசத்துப் பற்பம் | - | வெள்ளை, மேகவெட்டை, இரத்தவெட்டை 66. |
| சிறுசெருப்படைக்குடிநீர் | - | குன்மம் 3. |
| சீரக உருண்டை | - | பித்தம், உடல் சூடு, இரத்த விருத்தி, தாதுவிருத்தி 37. |
| சீரகக் குழம்பு | - | காமாலை 46. |
| சீனக் கற்கண்டு | - | மாலைக்கண், கண்புகைச்சல், வெள்ளெழுத்து 141. |
| சீனக்காரக் கட்டு | - | குன்மம் 106. |
| சுந்தரி (மூஞ்சுறு) எண்ணெய் | - | விடம் 20. |
| சுடர் எண்ணெய் | - | தோல் வியாதிகள், வெள்ளை, காசம் 23. |
| தங்கபற்பம் | - | தாதுவிருத்தி, அன்னதோடம் 96. |
| தயிர் நீர் | - | நீர்க்கட்டு 5, 5. |
| தலையோட்டுப் பற்பம் | - | பைத்தியம், பிரமை, மூர்ச்சை, வலிப்பு, மயக்கம் 64. |
| தாமிர பற்பம் | - | குட்டம், சயம், புற்று, குன்மம் போன்றவை 65, |
| ,, | | எட்டுவகை குன்மம் 66. |
| தாளகச் சுண்ணம் | - | சிலேட்டும நோய்கள் 115, |
| ,, | | கபம், சுவாசகாசம், இரத்தகாசம் போன்றவை 116. |
| தாளகச் செந்தூரம் | - | சுரம், சளி, சுவாசகாசம் 56, |
| தாளகச் செந்தூரம் | - | சுவாசகாசம், ஈளை, சுரம், இளைப்பு, இருமல் 56. |
| தாளக பற்பம் | - | காசம், சுரம் 77, |
| ,, | | சுவாச நோய்கள் 77, |
| ,, | | காசம், சுரம், ஈளை, சுவாசம் 79, |
| ,, | | கபம் 80, 82, |
| ,, | | காசம், பாண்டுரோகம், எலிக்கடி, சுரம், வாயு 80, |
| ,, | | சுரம், காசம், ஈளை, இருமல் 81, 82, |
| ,, | | கற்பப்பிணிகள், சளி, சுவாசகாசம், இரத்தகாசம் 82, |
| ,, | | கபம், சுவாசம், காசம் 83, |
| ,, | | சுரம், குன்மம், வாத பித்த, கபசன்னிகள் போன்றவை 84. |

திப்பிலி இளகம் - காசம் 13.
துருசுச் சுண்ணம் - குன்மம் 113, 114.
,, தொழுநோய், மேகநீர் 113,
,, சயம், மேகம் 115.
துருசுச் செந்தூரம் - மூலம், மேகம், குட்டம், நீரிழிவு போன்றவை 57.
துருசு பற்பம் - குன்மம் 96.
துருசு மாத்திரை - கண்ணோய்கள் 33.
துருசு மெழுகு - நீர்வாங்க 41.
தேன்சாறு - மேகச்சூடு, தாதுவிருத்தி 2.
நவச்சாரக் கட்டு - நீர்ச்சுருக்கு, வெள்ளை, சதையடைப்பு, மேகம் 21, 107.
நாகச்சுண்ணம் - நவமூலம், மேகம், கபம், குன்மம் போன்றவை 109.
நாகபற்பம் - மூலக்கிராணி, மூலக்கடுப்பு, கழிச்சல், வயிற்றுக்கடுப்பு 69,
,, மலக்கழிச்சல், வெட்டை, தாதுவிருத்தி 70,
,, மூலம், பவுத்திரம் 70, 71.
,, மூலம், மேகம், குட்டம் 71.
நாயுருவி கற்கம் - மூலம் 5.
நாயுருவிப் பொடி - சுரம் 140.
நிலப்பனைக் கிழங்கு இளகம் - உடல்வலு, தாதுவிருத்தி 12.
நுணா எண்ணெய் - கணை 18.
பஞ்ச உப்புக் கட்டு - எண்வகை குன்மம், சூலை, நீர்க்கட்டு, நீரடைப்பு 101.
பஞ்ச லவண பற்பம் - குன்மம், உட்டிணவாயு, செரியாமை, அக்கினிமாந்தம் 97.
பச்சைக் கற்பூர மாத்திரை - சன்னி, காய்ச்சல் 31.
படிகாரப் பற்பம் - குன்மம், மேகம், குட்டம், வெட்டை, நீரடைப்பு போன்றவை 66.
பரங்கி இளகம் - கிரந்தி, இளைப்பு, வாதம், காசம் போன்றவை 14.
பற்பொடி - பல்வலி 141.
பாடாணக் கட்டு - பல்வகைச்சுரம், சன்னி, தோற்பிணிகள், விஷக்கடி, கிரந்தி போன்றவை 101.
பாடாணக் கட்டு - சகலசுரங்கள் 103

| | | |
|---|---|---|
| பாடாணச் சுண்ணம் | - | சன்னி, கிரந்தி, சுவாசகாசம் போன்றவை 117. |
| பாடாண பற்பம் | - | கபம் 95. |
| பீர்க்கன் விதைப்பொடி | - | பேதியாக 140. |
| பூரக்கட்டு | - | சன்னி, சுரம், இடுப்புசூலை, வாத குன்மம், காமாலை போன்றவை 99. |
| பூரச் செந்தூரம் | - | இடுப்புச்சூலை, வாத குன்மம், சொறி சிரங்கு போன்றவை 55. |
| பூரமாத்திரை | - | கள்ளிப்பழக்கிரந்தி, இலிங்கப்புற்று, யோனிப்புற்று, புண், அரையாப்பு 27. |
| பெருமருந்து வேர் மெழுகு | - | மூலக்கடுப்பு, வயிற்றுக் கடுப்பு, கிராணி 42. |
| மன்மத இளகம் | - | மேகம், தாதுவிருத்தி 16. |
| முப்பு | - | மேகவாய்வு, மேகசூலை, மேகநீர் 126. |
| முருங்கைப்பூ இளகம் | - | தாதுவிருத்தி 14. |
| மூஞ்சுறு குளிகை | - | விடமயக்கம், விடக்கடி 36. |
| வங்கச் சுண்ணம் | - | கில்வாயு 112. |
| வங்கச்சுண்ணம் | - | மேகம், குன்மம் 108. |
| வங்கச் செந்தூரம் | - | மேகம் 21, சுரம், குன்மம், கிரந்தி 57. |
| வங்க பற்பம் | - | சகலவித மேகம் 87, |
| ,, | | பித்தவாயு, குன்மம், வயிற்று எரிச்சல், வாயு நோய்கள் 88, |
| ,, | | மேகம் 21, 89, |
| ,, | | மேக நோய்கள், வாதம், சூலை 90. |
| வங்க வெட்டை | - | வெட்டை, சூலை, மூத்திரக் கிரிச்சரம் 91. |
| வாகைப்பட்டைச் சாறு | - | வெட்டை 1. |
| வாள மெழுகு | - | சன்னி, சுரம், சயித்தியம், பிரசவ வலி 42. |
| விடக்குழம்பு | - | விடக்கடியின் விடத்தன்மை 45. |
| விஷ்ணு கரந்தைக்குடிநீர் | - | சுரம் 3. |
| விழுதியிலைச் சாறு | - | மூலபவுத்திரம், எருமூலம் 1. |
| வீர உருண்டை | - | குன்மம், வயிற்றுவலி, சுரம், வாய்வு 37. |
| வீரபற்பம் | - | குன்மம் 76. |
| வீரப்பொடி | - | இரத்தவெட்டை, வெள்ளை, சூலை, வயிற்றுவலி 139. |
| வீரமாத்திரை | - | சூலை, புண் 26. |

| | | |
|---|---|---|
| வீர மெழுகு | - | குன்மம், மகோதரம், சுரம் 40. |
| வீர மெழுகு | - | வாதம், மேகம் 40 |
| வெங்காய எண்ணெய் | - | கணம் 19. |
| வெங்காய நசியம் | - | காக்கை வலிப்பு 120. |
| வெங்காரப் பற்று | - | எல்லாவகை வாய்வு 132. |
| வெடியுப்புச் சுண்ணம் | - | நீரடைப்பு, நீர்க்கட்டு, நீர் எரிச்சல் 118. |
| வெடியுப்புச் சுண்ணம் | - | பித்தம், குன்மம், அரோசிகம், நீர்க்கட்டு 119. |
| வெடியுப்புச் செந்தூரம் | - | வயிற்றுவலி, வயிற்றுப்பிசம், பொருமல் 53. |
| வெண்கல நிமிளைச் செந்தூரம் | - | சுழிநோய், கபரோகம் 63. |
| வெள்வங்கச் சுண்ணம் | - | குட்டம், மேகம், தோல்நோய் 112. |
| வெள்வங்க பற்பம் | - | சூலை, வாதம், மேகம் 85. |
| வெள்வங்க பற்பம் | - | மேகம் 85. |
| வெள்ளரிவிதைக் குழம்பு | - | நீரடைப்பு, கல்லடைப்பு 43. |
| வெள்ளி பற்பம் | - | உடல்வன்மை 72, |
| ,, | | வெட்டை, தாதுவிருத்தி 72, 72, |
| ,, | | உதிரப்போக்கு, குன்மவலி 73. |
| வெள்ளைக் குங்கிலியப் பற்று | - | விரைவாதம் 133. |
| வெள்ளைச் சாரணைக் கலிக்கம் | - | கண்ணோய் 122. |
| வெள்ளைப் பாடாண எண்ணெய் | - | செவ்வட்டை, வண்டுகடி, சன்னி, சுரம் 25. |
| வெள்ளெருக்கன் பசை | - | விடமயக்கம் 136. |
| வேப்பந்தயிலம் | - | பூச்சிவெட்டு 24. |


குறிப்பு: தலைப்புப் பக்க எண்களே பக்க எண்களாகக் குறிப்பிடப் பட்டுள்ளன.

பின்னிணைப்பு—2

# நோயும் - அதனைக் குணப்படுத்தும் மருந்துகளும்

(எண் - பக்க எண்)

| | | |
|---|---|---|
| அக்கினி மாந்தம் | - | காளமேக நாராயண செந்தூரம் 63. |
| அண்டத்தில் புண்புரை | - | இடிவல்லாதி 129. |
| அண்டநீர் | - | குப்பைமேனி பணியாரம் 127, எருக்கம்வேர் வெற்றிலை 130. |
| அத்திசுரம் | - | கிருட்டிண அப்பிரகச் செந்தூரம் 6. |
| அதிசாரம் | - | பரங்கி இளகம் 14. |
| எரிப்பு | - | இரச வெண்ணெய் 4. |
| அரைப்புண் | - | இடிவல்லாதி 129. |
| அரையாப்பு | - | இரசவெண்ணெய் 10, பூரமாத்திரை 27. |
| அரோசிகம் | - | அவுரிக்குடிநீர் 3, வெடியுப்புச் சுண்ணம் 119. |
| அன்னதோடம் | - | தங்கபற்பம் 96. |
| ஆறாத விரணம் | - | பூரக்கட்டு 99, பூரச்செந்தூரம் 55. |
| இசிவு | - | இலிங்கச் செந்தூரம் 58. |
| இடுப்புச் சூலை | - | பூரச்செந்தூரம் 55, பூரக்கட்டு 99. |
| இடுப்பு வலி | - | கொடிவேலி வேர் பணியாரம் 128. |
| இரச சூலை | - | கெந்தக பற்பம் 68. |
| இரத்தக் கடுப்பு | - | எழுத்தாணிப்பூடு கற்கம் 6. |
| இரத்த காசம் | - | கிருட்டிண அப்பிரகச் செந்தூரம் 61, வெள்ளிபற்பம் 73, தாளகச் சுண்ணம் 116. |
| இரத்தக் கிராணி | - | அபின் மெழுகு 43. |
| இரத்தசீதக் கழிச்சலால் ஏற்படும் கடுப்பு | - | கவிழ்தும்பைப் பணியாரம் 126. |
| இரத்த நீர் | - | பரங்கி இளகம் 14. |
| இரத்தப்போக்கு | - | சாதிக்காய் உருண்டை 37. |
| இரத்த மூத்திரம் | - | படிகாரப் பற்பம் 67. |
| இரத்தமூலம் | - | காளமேக நாராயணச் செந்தூரம் 63. |
| இரத்த வாந்தி | - | கிருட்டிண அப்பிரகச் செந்தூரம் 61. |
| இரத்த விருத்தி | - | கணை எண்ணெய் 19, சீரக உருண்டை 36. |

| | |
|---|---|
| இரத்த வெட்டை | இரச வெண்ணெய் 10, சிலாசத்து பற்பம் 66, வீரப்பொடி 139. |
| இருமல் | கடுக்காய்ப் பிஞ்சு சூரணம் 7, அபின் மாத்திரை 28, குடோரி குளிகை 36, இரச செந்தூரம் 49, தாளகச் செந்தூரம் 56, வெண்கல நிமிளைச் செந்தூரம் 63, தாளக பற்பம் 82, கண்டங்கத்திரிக் குழம்பு 84, இரச பற்பம் 92, 93, 94. |
| இலிங்கப் புற்று | பூரமாத்திரை 27, இடிவல்லாதி 129. |
| இளைப்பு | தாளகச் செந்தூரம் 56. |
| ஈரல் நோய்கள் | அயச் செந்தூரம் 50, அயபற்பம் 74. |
| ஈரல் புற்று | இடிவல்லாதி 129. |
| ஈரல் வீக்கம் | நாகச் சுண்ணம் 109 |
| ஈளை | குடோரி குளிகை 35, தாளகச் செந்தூரம் 50, தாளக பற்பம் 78, 81, 82, 84, இரசபற்பம் 92, 93, 94. |
| ஈளை சுரம் | இரசசெந்தூரம் 49. |
| உட்டிணவாயு | பஞ்சலவண பற்பம் 97, கறியுப்புச் சுண்ணம் 119. |
| உடல்சூடு | சீரக உருண்டை 36. |
| உடல்பலம் | வெள்ளி பற்பம் 73, 74. |
| உடல் வன்மை | வெள்ளி பற்பம் - 72. |
| உணவில் வெறுப்பு | உப்புக்கட்டு 100. |
| உதிரக்கட்டு | இரசகற்பூர பற்பம் 67. |
| உதிரநோய் | அயச்செந்தூரம் 52. |
| உதிரப்பெருக்கு | வெள்ளி பற்பம் 73. |
| உப்பிசம் | உப்புக்கட்டு 100. |
| உள்மாந்தை | பரங்கி இளகம் 14. |
| ஊரல் | காளமேக நாராயணச் செந்தூரம் 63. |
| | சாதிலிங்கக்கட்டு 104. |
| எரிச்சல் (உடம்பு கைகாலெரிவு) | அப்பிரகச் செந்தூரம் கிருட்டிண அப்பிரகச் செந்தூரம் 61, கொத்துமல்லிச் சூர்ணம் 8. |
| எரிசூலை | பூரச்செந்தூரம் 55, பூரக்கட்டு 99. |
| எருமூலம் | விழுதியிலைச் சாறு 1. |
| எலிக்கடி | தாளகபற்பம்-80, அரிதார பற்பம் - 84, அரிதாரப் பொடி 138. |
| ஒற்றைத்தலைவலி | ஒட்டுப்புல் சாறு - 2. |
| கண்கடுப்பு | கொடிவேலிவேர் பணியாரம் 128. |
| கண்காச படலம் | கோரோசனை மாத்திரை 30. |

| | |
|---|---|
| கண்டமாலை | - அரிசிப் பணியாரம் 127. |
| கண்ணோய் | - கடுக்காய் எண்ணெய் 25, துருசு மாத்திரை 33, வெள்ளைச் சாரணை கலிக்கம் - 122. |
| கண்புகைச்சல் | - சீனக்கற்கண்டு 141. |
| கணம் | - வெங்காய எண்ணெய் 19. |
| கணை | - கணை எண்ணெய் 19. |
| கபநோய்கள் | - பாடாண பற்பம் 35. அண்டச் சுண்ணம் 110. தாளகச் சுண்ணம் 116. இம்பூரல் குடிநீர் 4, இரசகற்பூர மாத்திரை 32. அயச்செந்தூரம் 51, தாளக பற்பம் 80, 82, 83, இலிங்கபற்பம் 86, நாகச் சுண்ணம் 109. வெண்கல நிமிளைச் செந்தூரம் 63. |
| கபாலநோய் | - பரங்கி இளகம் 14. |
| கருங்குட்டம் | - இரசச் சுண்ணம் 116. |
| கல்லடைப்பு | - வெள்வரிவிதைக் குழம்பு 43. |
| கழிச்சல் | - நாகபற்பம் 69. |
| கள்ளிப் பழக்கிரந்தி | - பூரமாத்திரை 27. சாதிலிங்கக் கட்டு 104. |
| கன்னப்புற்று | - பரங்கி இளகம் 14. |
| காக்கை வலிப்பு | - வெங்காய நசியம் 120. |
| காசம் | - இம்பூரல் குடிநீர் 4, திப்பிலி இளகம் 13, சு ர் எண்ணெய் 23, பரங்கி இளகம் 14, கிருட்டிண அப்பிரகச் செந்தூரம் 61, தாளக பற்பம் 77, 80, 81, 82, 83, 84, தாளகச் சுண்ணம் 116, இலிங்க வேதை 128. |
| காமாலை | - இலுப்பைப் பிண்ணாக்குச் சூரணம் 8, பரங்கி இளகம் 14, சீரகக் குழம்பு 46, அயச்செந்தூரம் 50, 51, உலோகச் செந்தூரம் 53, அயபற்பம் 74, 75, பூரக்கட்டு 99. |

| | | |
|---|---|---|
| காய்ச்சல் (சுரம்) | - | கடுக்காய்ப்பிஞ்சு சூரணம் 7, அபின் மாத்திரை 27, பச்சைக் கற்பூர மாத்திரை 31, இரசகற்பூர மாத்திரை 32, இலிங்கக் கட்டு 105. |
| கால்வலி | - | கொடிவேலிவேர் பணியாரம் 128. |
| கிரந்தி | - | பரங்கி இளகம் 14, கெந்தக எண்ணெய் 22, சவ்வீர மாத்திரை 26, இரசகற்பூர மாத்திரை 32, தாளகச் செந்தூரம் 55, வங்கச் செந்தூரம் 57, இரசபற்பம் 92, பாடாணச் சுண்ணம் 117. |
| கிராணி | - | எழுத்தாணிப்பூடு கற்கம் 6, இரசவெண்ணெய் 11, பெருமருந்துமெழுகு 42. |
| கீல்வாதம் | - | பூரக்கட்டு 99, பூரச்செந்தூரம் 55. |
| கீல்வாயு | - | வங்கச்சுண்ணம் 112. |
| குட்டம் | - | பரங்கி இளகம் 14, சங்கம் வேர்த்தயிலம் 21, அண்டமெழுகு 39, துருசுச் செந்தூரம் 57, தாமிர பற்பம் 65, கெந்தக பற்பம் 68, நாக பற்பம் 71, கருவங்கச் சுண்ணம் 111, வெள்வங்கச் சுண்ணம் 112. |
| கும்ப சூலை | - | இரச செந்தூரம் 48. |
| குளிர் சுரம் | - | இலிங்க பற்பம் 115. |
| குன்ம அனற்புண் | - | இலிங்க பற்பம் 95. |
| குன்மம் | - | சிறுசெருப்படைக்குடிநீர் 3, பரங்கி இளகம் 14, வீர உருண்டை 37, வீர மெழுகு 40, ஐந்துப்புச் செந்தூரம் 47, அயச்செந்தூரம் 52, வங்கச் செந்தூரம் 57. தாமிர பற்பம் 65, 66. படிகாரப் பற்பம் 67, ஈஃகு பற்பம் 74, அயபற்பம் 76, வீரபற்பம் 76, தாளக பற்பம் 84, இலிங்க பற்பம் 86, வங்க பற்பம் 88, துருசு பற்பம் 96, பஞ்சலவண பற்பம் 97. உப்புப்பற்பம் 98, உப்புக்கட்டு 100, சீனக்காரக் கட்டு 106, நாகச் சுண்ணம் 109, கருவங்கச் சுண்ணம் 111, துருசுச் சுண்ணம் 113, 114, வெடியுப்புச் சுண்ணம் 119. |

கெட்டநீர் இறங்குதல் - ஆவிரையாதிச் சூரணம் 9.
கெற்ப அரிப்பு - கருவங்க பற்பம் 85.
கெற்பப் பிணிகள் - இரச மாத்திரை 29, அப்பிரகச் செந்தூரம் 61.

சத்திப்பு - பரங்கி இளகம் 14.
சதையடைப்பு - நவச்சாரக் கட்டு 107.
சந்து வலி - கொடிவேலிவேர் பணியாரம் 128.
சயம் - தாமிர பற்பம் 65, தாளக பற்பம் 82, துருசுச் சுண்ணம் 115. பரங்கி இளகம் 40.
சயித்தியம் - வாளமெழுகு 42.
சலக்கழிச்சல் - பரங்கி இளகம் 14.
சளி - இரசகற்பூர மாத்திரை 31, தாளகச் செந்தூரம் 56, தாளகச் சுண்ணம் 116, இலிங்கச் செந்தூரம் 60, கோரோசனைப் பொடி 139.
சன்னி - வெள்ளைப்பாடாண எண்ணெய் 25, சவ்வீரமாத்திரை 26, பச்சைக் கற்பூர மாத்திரை 31, இரசகற்பூர மாத்திரை 32 வாளமெழுகு 43, இலிங்கச் செந்தூரம் 58, 60, இரசகற்பூர பற்பம் 67, தாளக பற்பம் 84, இலிங்க பற்பம் 86, இலிங்கக்கட்டு 106, பாடாணச் சுண்ணம் 117.
சன்னி சுரம் - இலிங்க பற்பம் 86, பூரக்கட்டு 99.
சன்னிதோடம் - சாம்பிராணித்தயிலம் 97, இலிங்கக்கட்டு 105.
சன்னிதோஷம் - சாதிலிங்கக்கட்டு 104.
சிரங்கு - சங்கவேர்த் தயிலம் 21.
சிலந்தி - கெந்தக பற்பம் 68.
சிலேட்டும நோய்கள் - தாளகச் சுண்ணம் 115.
சிறுபாம்புக் கடி - கெந்தக பற்பம் 68.
சீதம் - சாதிக்காய் உருண்டை 37.
சீதரத்த பேதி - சாதிக்காய் சூரணம் 7.
சுவாச காசம் - தாளகச் செந்தூரம் 56, பாடாணச் சுண்ணம் 117.
சுவாசநோய் - தாளகபற்பம் 77, 79, 83, 84 துருசுச் செந்தூரம் 57, நாகபற்பம் 71.

| | |
|---|---|
| சுரங்கள் (பலவகை) | தாளக பற்பம் 84. பாடாணக்கட்டு 103. இலிங்கச் செந்தூரம் 60, பாடாணச் சுண்ணம் 117. விஷ்ணுகரந்தைக் குடிநீர் 3, இரசகற்பூர மாத்திரை 31, இரசமாத்திரை 32, குடோரி குளிகை 35, வீர உருண்டை 37, வீரமெழுகு 40, வாளமெழுகு 42, தாளகச் செந்தூரம் 55, வங்கச் செந்தூரம் 57, இரசகற்பூரம் 67, கெந்தக பற்பம் 68, சங்கு பற்பம் 74, தாளக பற்பம் 77, 80, 81, 82, இலிங்க பற்பம் 86, இரச பற்பம் 92, 93, 94, சாதிலிங்கக் கட்டு 104, இரசச் சுண்ணம் 117, நாயுருவிப் பொடி 140. |
| சுழிநோய் - | வெண்கல நிமிளைச் செந்தூரம் 63. |
| சூலை - | சங்கவேர்த்தயிலம் 21, கெந்தக எண்ணெய் 22, வீர மாத்திரை 26, இரச கற்பூர மாத்திரை 32, துருசுச் செந்தூரம் 57, இரச செந்தூரம் 48. வெள்வங்க பற்பம் 85, வங்கபற்பம் 90, வங்க வெட்டை 91, இரசபற்பம் 93, இலிங்கக்கட்டு 106, கருவங்கச் சுண்ணம் 111, இடிவல்லாதி 129, வீரப்பொடி 139. |
| சூலைக்கட்டு - | தாளகச் செந்தூரம் 55. |
| செரியாமை - | பஞ்சலவண பற்பம் 97, உப்புக்கட்டு 100, கறியுப்புச் சுண்ணம் 119. |
| சொட்டு நீர் (சொட்டு மூத்திரம்) - | தயிர் நீர் 5. |
